தென்மொழி

தனித்தமிழ்
இலக்கியத் திங்களிதழ்

தூள் தூள் தூளே!

—*—

ஊராளும் தலைவர்க்கே ஒன்றுரைப்போம்;
உணர்கஅவர்; ''ஒண்ட மிழ்த்தாய்ப்
பேராளும் இடத்திலெல்லாம் பிள்ளைமொழி
இந்தியினைப் புகுத்து கின்றீர்!
சீராளும் செந்தமிழர் பொறுத்திருந்தார்!
இனிப்பொறுக்கார்! புலியைப் போல்வ
ஏராளம் தமிழ்நிலத்தில்! அவர்எழின், உம்
எண்ணமெலாம் தூள் தூள் தூளே!''

—()—

மார்கழி. தி. பி. 1994.

50 காசு

தென்மொழி

இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

கடலூர் - 2

சிறப்பாசிரியர்
புலவ, பண்டித
ஞா. தேவநேயப்
பாவாணர்

பொறுப்பாசிரியர்
பெருஞ்சித்திரன்

உறுப்பாசிரியர்
ம. இலெ. தங்கப்பா
மு. சாத்தையா
செம்பியன்

சுவடி 1. | தி. பி. 1994 மார்கழி (1963 டிசம்பர்) | ஓலை 11.

'இந்தி' மொழி
இந்தியாவைச் சிதைப்பது உறுதி!

மொழி, ஓர் இன மக்களின் அடிப்படை உரிமை மூச்சு. அதைச் சிதைப்பது போன்ற அரசியல் வீழ்ச்சி வேறு எதுவுமில்லை. பண்பாட்டோடும் நாட்டுரிமையோடும் இரண்டறக் கலந்து மக்களை ஒன்றுபடச் செய்வது ஒன்றுமட்டுமே மொழியின் முழுப்பயனாகி இல்லை. மக்களின் பேச்சு, எழுத்து, இயக்க உரிமைகளுக்கும் அதுவே வித்தாகவும் விளைவாகவும் இருக்கின்றது. எல்லா வகையினும் மாறுபாடு கொண்ட வேற்றுப் புலத்து மொழி ஒன்று, கட்டாயமாக இன்னொரு பகுதி மக்களின்மேல் புகுத்தப்படும் பொழுது, அப்புலத்து மக்களின் எல்லா வகைக் கட்டுக் கோப்புகளையும் உடைத் தெறிவதை எவரும் மறுக்க முடியாது. வெறும் அரசியல் காரணங்களுக்காகப் பண்பாட்டின் கொடுமுடியாக விளங்கும் தமிழ் மொழியின் வேரைக் கல்லியெறிவதற்கு இவ்விந்திய அரசினர் முற்பட்டிருப்பது போன்ற பேதைமையை, குடியரசு உரிமை வழங்கப்பட்ட வேறெந்த நாட்டிலும் காண முடியாது இந்திய அரசினரின் நாட்டாட்சிக்கு இது பெருங்கேடு செய்யும் என்பது கல்லின்மேல் எழுத்துப் போன்ற உண்மை. தம் ஆட்சி வலிமையாலும் சட்டக் கொடுமைகளா

உரிமை, வெளியீடு
தாமரை, உலக முதல்வி

மித்திரா அச்சகம்
திருப்பாதிரிப்புலியூர்

தனி இதழ்
50 காசு

லும் இம்மொழி உரிமையைப் பறிக்க முற்படும் இந்திய அரசினர் இனியும் காலந் தாழ்த்தாது தம் உடும்புக் கொள்கைகளைத் தளர்த்த முற்படாவிடின், இந்திய நாடு பல்வகை மொழியுரிமை நாடுகளாகச் சிதைந்துபோய் உலக வரலாற்றுக்கு ஓர் எடுத்துக் காட்டாகும் என்பதற்கு இனிவரும் நிகழ்ச்சிகளே சான்றாகும்.

பாராளுமன்றத்திற்கு நிற்கின்ற உறுப்பினர்களுக்கு இந்தி மொழி ஓரளவு தெரிந்திருக்க வேண்டுமென்பதும், இதேபோல் அவ்வம் மாநில மன்றங்கட்கு நிற்கும் உறுப்பினர்களுக்கும் ஆங்காங்குள்ள வட்டார மொழி ஓரளவு தெரிந்திருக்க வேண்டுமென்பதும், அரசினர் அண்மையில் கொண்டு வரவிருக்கும் சட்டமாகும். எதற்கெடுத்தாலும் சட்டங்கள் போட்டு வீணே அரசியலையும் மக்களையும் குழப்பத்திற்கும் வெறுப்பிற்கும் ஆளாக்கி வரும் இந்திய அரசினர், இந்தி மொழியை மறைமுகமாகப் புகுத்துவதற்குச் செய்யும் சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்று. தமிழ் வழங்கும் சென்னை மாநில மன்றங்கட்கு மராட்டியரும், குசராத்தியரும், காசுமீரிகளுமா வந்து போட்டியிடப் போகின்றனர்? இப்படி ஒரு வேண்டாத கற்பனையை வலியுறுத்தித் தமிழ் மாநில மன்ற உறுப்பினர்களுக்கு உரிமை தருவது போன்ற நாடகமாடுவது, இந்தியை மறைமுகமாகப் புகுத்துதற்கும், அவ்விந்தி அறிந்தவர்களையே பாராளுமன்றத்திற்குப் பொறுக்குவதற்கும் ஆன மறைமுக ஏற்பாடே. கடந்த மாதப் பாராளுமன்றக் கூட்டத்தில் தென்னக உறுப்பினர்கள் தமிழிலும் தெலுங்கிலும் பேச முற்பட்டதும், அஃதை இந்தி வெறியர்கள் தடுத்துக் கூச்சலிட்டதும் வடவர் தம் மொழி வெறிக்கும், தென்னவர்தம் மொழியுரிமைப் போராட்டத்திற்கும் தலைசிறந்த எடுத்துக் காட்டாகும்.

இந்தியா ஒரு குடியுரிமை நாடென்பதை மறந்து அவ்விந்தி வெறியர்கள் குரங்காட்டங் காட்டுவது, இக்குடியுரிமைக்கும் அவர்க்குமே வைத்த வெடியாகும் என்பதை அவர்கள் உணருங் காலம் சேய்மையிலில்லை. அரசியல்சாராத பல்துறை அறிஞர்கள் தமிழ் நாட்டின்கண் ஆங்காங்கே தமிழ் உரிமை காக்கப் புடைத்தெழுந்து நிற்கும் காட்சியைத், தமிழக அரசினரும் தில்லி அரசினரும் விரைவில் காணப் போகின்றனர். வரலாறு காணாத இம் மொழிப் புரட்சிக்கு இந்தியா ஆட்பட்டே ஆகவேண்டும். இந்தியா போன்ற உழவு நாட்டில் பொருளியல் புரட்சி ஏற்படும் என்று அஞ்சி நடுங்குகின்ற ஆட்சியினர், அப்பொருளியல் உரிமையினும் மேலாக உள்ள மொழியுரிமைப் புரட்சியை விரைவில் இவ்விந்திய நிலத் துண்டத்தில் காணப்போவதும் வியப்பிற்குரியதாகாது.

நிலமும், பொருளும் ஓரின மக்களுக்கே என்றும் சொந்தமன்று. கேளெய்தி காணும் அறிவியல் காலமாகிய இக்காலை, தனிப்பட்ட குடிமகன் ஒருவனுக்குத் தன் பண்பாடும் அதற்கடிப்

படையாகவுள்ள மொழியுமே தனிப்பெரும் சொத்துகளாம். அவ்வடிப்படை உரிமைகொண்டே அவன் தனக்காகவும், தன் நாட்டு மக்களுக்காகவும், இவ்வுலக உருண்டைக்கும் தொண்டு செய்ய முற்படுகின்றான். மூச்சாக இயங்கும் அத்தகைய உரிமைகள் வேருடன் பிடுங்கப் படுமாயின், அவன்பால் கனன்று வரும் பேருணர்வே மாபெரும் புரட்சிக்கு அடியூன்றி நிற்கும் என்றும் அரசினர்க்கு அறிவுறுத்துகின்றோம்.

இந்நாட்டை முன்னூறு ஆண்டுகளாகத் தம் காலடியில் வைத்திருந்த வெள்ளைக்காரர்கள்கூட மொழியுரிமையைத் தடுத்ததில்லை. அவர்தம் காவலின்கீழ்தான் ''ஆங்கிலத்தை ஒழியுங்கள் ஆங்கிலேயரை இந்நாட்டை விட்டு ஓட்டுங்கள்'' என்ற உரிமைக் குரல்கள் முழங்கப்பட்டன. அவற்றை எளிதில் மறந்து, வடவர் மொழிவெறி கொண்டலைவது தம் ஆட்சியழிவிற்கே வழி வகுக்கும் என்பதை விரைவில் உணர்வர். தென்னக ஆட்சியாளர் வடநாட்டார்க்கு அடிமைப்பட்டு, அவர்தம் மாறான போக்கைத் தடுப்பின் தங்களது ஓராண்மை (ஏகபோக) உரிமைக்குத் தாழ்ச்சி ஏற்படுமென்று, கட்டுக் கயிற்றால் ஆடும் கட்டைப் பாவைகள் போன்று கூத்திடுகின்றனர். இக்கொடுமை இலங்கையில் தமிழர்க்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் விஞ்சியதாகும். நாட்டு நலம், நாட்டொற்றுமை என்று வீணே கரைந்துருகும் பேராயக் கட்சித் தலைவர்கள் இதை உணர்வார்களாக. அரசியல்சார்பில் ஏற்பட்ட நன்மைகளைக்காட்டித் தமிழர் தம் மொழியுரிமைக்கும், பண்பாட்டுரிமைக்கும் ஊறு விளைக்க முற்படுவது, கறிக்கடைக்காரன் ஒருவன் இலைதழை வாங்கிப் போட்டு, ஊட்டங் கொடுத்துவரும் ஆட்டுக் குட்டிக்குக் காட்டும் இரக்க உணர்வைப் போன்றது. அடிப்படை உரிமைகள் மறுக்கப்படும் பொழுது, வேறுஎத்தகைய ஆட்சியுரிமைகளுக்கும் மக்கள் செவி கொடார். மக்களுக்கு வேண்டுவது சோறும் கறியும் நீரும் என்பது உண்மையே! அச்சோறும் கறியும் நீரும் வெள்ளைக்காரன் காலத்தில் மட்டும் பேராயக் கட்சிக்காரர்களுக்குக் கொடுக்கப்பட வில்லையா? கட்டத் துணியின்றிக் கந்தைத் துணிகளையா உடுத்திக்கொண்டு வெளிவந்தனர். அவன் கட்டிய பள்ளிக்கூடங்களில் படித்து வெளிவந்தவர்கள் தாமே, இப்பொழுது கொடிமனைக்குள்ளே குந்தி, அரசியல் கூத்தாட்டம் காட்டுபவர்களும்...? ஒன்றுமறியாத – ஆட்சி நலப் பாங்கும் உரிமை மேன்மையும் உய்த்துணரக்கூடாத ஏழைக்குடிமக்களைக் கேட்டால்கூடத்தெரியுமே! வெள்ளைக்காரன் காலத்தில்கிடைத்த விலைவாசிகளை நினைத்துக்கொண்டு எத்தனைப் பெயர் ஏங்கி மருகுகின்றனர்? இவற்றைப் பேராயக் கட்சியினர் உணராமலா இருக்கின்றனர்? பின்னர் ஏன் அத்தகைய செல்வ வளமைகளை வெறுத்து உரிமை முழக்கம் வானங் கிழியத் –தொண்டை கிழிய முழங்கப்பட்டது. அதற்கு அடிப்படையாக இருந்த உணர்வு எது? அந்த உரிமை உணர்வு எத்தகையது என்பதை

அறிய மாட்டாதவர்களா? அக்கால் இல்லாத பெருஞ் சிறப்பு இக்கால் எத்துறையில் உள்ளது? அவன் ஏற்றிய மருந்தாலும் ஊசியாலும் உயிர் பிழைத்த தலைவர்கள் இன்றில்லையா? அவன் வைத்த தேர்வில் தேர்ந்து பட்டம் பெற்றவர்கள் தாமே, இன்று அவன் கட்டிய ஆட்சி மன்றங்களில் அமர்ந்து, அவன் எழுதிய சட்டத்தை வைத்துக்கொண்டு, அவன் விட்டுச்சென்ற மக்களை ஆள்கின்றனர்? பின்னர் எதன் பொருட்டு அவனை வெறுத் தொதுக்கிறோம்? இவ் வரலாறு காட்டுவது என்னை? அரசியல் ஆண்மை எத்துணைச் சிறப்புற்றிருப்பினும் அதனைக் காட்டி வழிவழி வந்த ஓரின மக்களின் அடிப்படையான மொழியுரிமையையும், பண்பாட்டு உரிமையையும் பறிப்பது எத்தகைய முடிவில் கொண்டு போய்விடும் என்பதை மீண்டும் மீண்டும் எழுதித் தீர்க்க வேண்டுவதில்லை. பண்பட்டதும், செப்பமும் நுட்பமும் வாய்ந்ததும், எவ்வகை அறிவியல் புரட்சிகளுக்கும் முற்றிலும் இடந்தரவல்லதுமான ஓர் உயர்தனிச் செம்மொழியாந் தமிழை வீழ்த்தி, அதன்மேல் புன்மைச் சிறுமொழி இந்தியைப் புகுத்துவதால் உங்கட்கு என்ன பயன் ஏற்பட்டுவிடப் போகின்றது? பொருட் செலவின்றிப் பேரணைகள் கட்டப்பட்டு விடுமா? கல்வித்தரம் உயருமா? சீனரும் பாக்கித்தானியரும் தம் படைக் கலங்களை விட்டெறிந்துவிட்டுக் குதிகால் கொண்டையில் பாய ஓட்டமெடுக்கப் போகின்றனரா? இவற்றில் எது நடந்து விடும்? இந்தி மொழியைப் பலவாறான நரித் தந்திரங்களைக் கொண்டு தென்னகத்தார்மேல் வலிந்து புகுத்துவதால் நீங்கள் எதனை உருவாக்க விரும்புகின்றீர்கள்? உடலின் ஒரு பகுதியில் ஏற்பட்ட அரிப்பைக் கிளிம்பிட்டுஆற்றுமல், காய்ஞ்சொறியால் தேய்த்தல் போல், தமிழர்தம் உரிமை உணர்வை எண்ணுமல் இந்தியை மேன்மேல் உட்புகுத்த நினைப்பது எத்துணை மடமை?

அரும்பாடு பெற்று நாமடைந்த குடியாட்சி உரிமையை வலுப்படுத்தத் தனிப்பட்ட முயற்சி எதுவும் தேவையில்லை. ஒற்றுமை உணர்வு கோதுமை மாவால் ஒட்டவைக்கக் கூடியது மன்று; இந்திச் சொற்களால் இணைக்க கூடியதுமன்று. பிறர் உரிமையை எவன் ஒருவன் காக்கின்ருனே, அவன் தன்னுரிமை காக்கப்படுவான். அதற்கெனப் போரிடவேண்டுவதில்லை; தனிப்பட்ட முயற்சிகள் தேவையில்லை; தலைமை மாற்றங்கள் தேவையில்லை, ஒருபால் இந்திமொழியைப் புகுத்தவும் மற்ருெருபால் அதற்கெனக் கிளர்ந்தெழும் போராட்டங்களை அடக்குதற்குமே கடந்த ஈராண்டுகள் செலவழிந்தனவே. அரிய பொருள்கள் பல வற்றைப் பற்றியும் எழுதவேண்டிய தாளிகைகள் இப்போராட்டங்களைப்பற்றியே எழுதி வருவதற்கு இடங்கொடுத்த அரசியல் மாட்சியை என்னென்போம்? குடியுரிமை ஆட்சியில் மொழிக் கிளர்ச்சிக்கு அரசே முழுப் பொறுப்பு. இப் பெரிய வரலாற்றுக் குற்றத்தைப் புரிய வேண்டாமென்று தில்லி அரசினரைப் பல்லாற்ருனும் வேண்டிக் கொள்கின்ருேம்.

சமற்கிருதவாக்கம்–(எழுத்து)

தமிழெழுத்து

எழுத்து, ஒலியும் வரியும் என இருவடிவுடையது. இவற்றுள் உண்மையானது ஒலியே. ஒலியே எழுதப்படுதலின் எழுத்தெனப்பட்டது. உள்ளத்திலெழும் கருத்துகளை நேரடியாய் அறிவிக்கும் குறி ஒலி. செவிப்புலனான ஒலியைக் கட்புலனாக்கும் குறியே வரி.

முழுகிப்போன குமரிக்கண்டத்தில், கி. மு. ஐம்பதினாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழ் தானே தோன்றி,

1) அசை நிலை (Monosyllabic Stage),
2) கூட்டு நிலை (Compounding Stage),
3) பகுசொன்னிலை (Inflexional Stage),
4) கொளுவு நிலை (Agglutinative Stage),

என்னும் நால்வகை மொழி நிலையுங் கடந்து முழு வளர்ச்சியடைந்து, கி. மு. பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்பே எழுத்தும் இலக்கியமும் இலக்கணமும் நிரம்பப்பெற்று, முதன் முதலாகத் தென்மதுரைத் தலைக் கழகத்தில் ஆராயப்பெற்றது.

தமிழொலிகள் பெரும்பாலும் இயற்கையானவை; எளியவை; எல்லா மொழிகட்கும் பொதுவானவை. பொதுவாக, எழுத்தொலிகள் தெற்கே செல்லச் செல்லத் தொகையிலும் வன்மையிலும் குறைந்தும், வடக்கே செல்லச் செல்ல அவற்றில் மிகுந்தும் உள்ளன. தமிழ் வல்லின வொலிகள் வடமொழி வல்லின வொலிகளை நோக்க மெல்லியவை. இவற்றுள், முன்னவை இரட்டித்தாலன்றிப் பின்னவற்றை வன்மை

மொழிப் பெரும் புலவர்
ஞா. தேவநேயப் பாவாணர் எம்.ஏ.

யில் ஒவ்வா. இந்நிலைமையை இற்றைத் தென்பாண்டி நாட்டுப் புறப் பழங்குடி மக்களின் நாவில்தான் செவ்வையாகக் காண முடியும்.

1) படவெழுத்து (Pictogram or Hieroglyph),
2) கருத்தெழுத்து (Ideogram),
3) அசையெழுத்து (Syllabary),
4) ஒலியெழுத்து (Phonemic Character),

என்னும் நால்வகை வரிநிலையும் முறையே அடைந்த தமிழ் நெடுங் கணக்கு, கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் இற்றை நிலையி லேயே யிருந்ததென்பது,

''தொல்லை வடிவின எல்லா வெழுத்தும் ஆண்
டெய்தும் எகர ஒகரமெய் புள்ளி.''

என்னும் நன்னூல் நூற்பாவாலும் (98); கி. மு 6-ஆம் அல்லது 7-ஆம் நூற்றாண்டிலும், உயிரும் உயிர் மெய்யுமாகிய எகர ஒகரங்களும் குற்றியலிகர குற்றியலுகரங்களும் புள்ளி பெறுத லும், உட்புள்ளிபெற்ற பகர வடிவே மகர வடிவாதலும், தவிர, மற்றையவெல்லாம் இற்றையவே யென்பது தொல்காப்பியத் தாலும், அறியக்கிடக்கின்றன.

எழுத்து எழுதப்படும் கருவிக்கேற்ப வேறுபட்டிருத்தல் வேண்டுமாதலால், எழுத்தாணி கொண்டு ஏட்டில் எழுதுதற்கு ஒரு வரைவெழுத்து முறையும், உளி கொண்டு செம்பிலும் கல்லி லும் செதுக்கற்கு ஒரு வெட்டெழுத்து முறையும், தொன்று தொட்டுக் கையாளப்பட்டு வந்ததாகத் தெரிகின்றது. தமிழின் தொன்மையையும் தலைமையையும் ஆய்ந்தறியும் மதுகையும் நடு நிலைமையும் இல்லா அயலார், வரைவெழுத்தும் வெட்டெழுத் தாகிய வட்டெழுத்தும் ஒன்றேயெனப் பிறழவுணர்ந்துவிட்டனர்.

ஆரியவொலித்திரிபு

தமிழொலிகள், முதலாவது, தென் திரவிடமாகிய தெலுங் கில் வன்மைபெற்று வட திரவிடத்தில் வளர்ச்சியடைந்து, வட மேலையாரிய (ஐரோப்பிய) மொழிகளில் இயற்கையாரிய வடி வுற்று, இறுதியில் கீழையாரியமாகிய சமற்கிருதத்தில் பெரும் பாலும் செயற்கை வடிவு கொண்டுள்ளன. இதை,

''செந்திறத்த தமிழோசை வடசொல் லாகி''

என்னும் திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகத் தொடர் இரட்டுறல் முறையிற் குறிப்பதாகக் கொள்ளலாம்.

என்றும் எங்கும் பிஞ்சுமுற்றிக் காயாகுமேயன்றிக் காய் இளந்து பிஞ்சாகாது. அதுபோல், இயற்கையான மொழி வளர்ச்சியில், மெல்லொலி வலித்து வல்லொலியாகுமே யன்றி வல்லொலி மெலிந்து மெல்லொலி யாகாது. குழந்தை வாயில் வல்லொலி பிறவாததுபோல், முந்தியல் மாந்தன் வாயிலும் வல்லொலி பிறப்பதில்லை. பழந்தமிழன் சூடு என்று சொன்ன சொல்லை இற்றைத் தமிழன் கொச்சை வழக்கில் ஜூடு என்று சொல்வதையும், Triplus என்ற இலத்தீன் சொல்லினின்று Treble என்னும் ஆங்கிலச்சொல் திரிந்திருப்பதையும் நோக்குக. Kna என்ற தியூத்தானியச்சொல் Gno என்று இலத்தீனில் திரிந்ததும் அதுவே.

இற்றை நிலைப்படி, வல்லின எழுதொலிகளையெல்லாம்,

(1) கடுப்பொலி (Voiceless Unaspirate),
(2) உரப்பொலி (Voiceless Aspirate),
(3) எடுப்பொலி (Voiced Unaspirate),
(4) கனைப்பொலி (Voiced Aspirate),

என நால்வகையாக வகுக்கலாம். இவற்றுள், தமிழில் இருப்பவையெல்லாம் மென்கடுப்பொலிகளும் மெல்லொலிகளுமே. இவற்றுள், பின்னவை மென்கடுப்பொலிகள் சொல்லிடை கடை தனித்தும் மெல்லினத்தின் பின்பும் வந்தாலன்றி நிகழா. இலத்தீனில், மூச்சொலி சேர்ந்த புணர்மெய்களே இல்லை; k-யும் s-உம் சேர்ந்த x (ks) என்னும் புணர்மெய்தான் உண்டு. கிரேக்கத்தில், th, ph, kh என்னும் மூச்சொலிப் புணர்மெய்கள் மூன்றும், ks, ps என்ற மூச்சொலியில்லாப் புணர்மெய்கள் இரண்டும், உள்ளன. இவ்விரு மொழிக்கும் பொதுவாக b, d, g, z என்னும் நாலெடுப்பொலிகள் உள. எழுத்துப் புணர்ச்சியால் ஏற்படும் ஜகரவொலியும் (j) கிரேக்கத்திற்குண்டு. சமற்கிருதத்திலோ வல்லின வொலிகள் ஐந்திற்கும், கடுப்பொலி எடுப்பொலி யாகிய இருவடிவிலும், மூச்சொலியைச் சேர்த்தும், செயற்கை முறையில் இருபது மெய்களைப் பிறப்பித்திருக்கின்றனர். இவற்றுள், மூச்சொலி சேர்ந்த பத்தும் உண்மையில் புணர் மெய்களே (Consonantal diphthongs). க்ஷ (க்+ஷ), ஜ்ஞ முதலிய புணர் மெய்களும் கூட்டு மெய்களும் ஏராளம்.

வேத ஆரியர்க் கெழுத்தின்மை

வேத ஆரியர் இந்தியாவிற்குள் புகுந்தபோது, அவர்க்கு எழுத்துமில்லை; இலக்கியமுமில்லை. வேதத்தில் மேனாட்டுப் பொருள்களைப்பற்றிய குறிப்பிருப்பினும், அஃது எழுதப்பட்டது வட இந்தியாவிலேயே. மேலையாரிய மொழிகளிலெல்லாம் எகர ஒகரக் குறிலும் நெடிலும் உள்ளன. கீழையாரியத்திலோ வட

திரவிடத்திற் போன்றே எகர ஓகரக் குறிலில்லை ஆரியவேதம் முதலில் ஒன்றுயிருந்து, பின்பு மூன்றுகி, இறுதியில் நான்கா யிற்று. சமற்கிருதம் தோன்றும் வரையும் கீழையாரியத்திற்கு எழுத்தில்லை. ஆரிய வேதம் நீண்டகாலமாக ஆசிரியனுல் வாய்ப்பாடமாக ஓதப்பெற்று மாணவரால் செவி வாயிலாகவே கற்கப்பட்டு வந்ததனுல், அதற்கு ஆரியத்தில் சுருதி யென்றும், தமிழில் எழுதாக்கிளவி என்றும் பெயர் எழுந்தன.

ச்ரு = கேள் ச்ருதி = கேள்வி. ச்ரு என்பது செவியுறு என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபேயென வறிக இங்ஙனம் பல வடசொற்கள் தூய ஆரியமாயினும், தமிழ் வேர்களினின்றே திரிந்தவையென்பது, என் வடமொழி வரலாறு என்னும் நூலில் விரிவாக விளக்கப்பெறும்.

தமிழ் முறையைப் பின்பற்றி யெழுந்த ஆரிய நெடுங் கணக்கு

வேத ஆரியர் கி. மு 1500 போல் தென்னுடு வந்து தமிழ ரொடு தொடர்பு கொண்ட பின்னரே சமற்கிருதம் தோன்றிற்று. அன்று ஆயிரக் கணக்கான தமிழ்ச் சொற்களும் தென் சொற்க ளும் கடன் கொள்ளப்பட்டதுடன், தமிழ் நெடுங் கணக்கைப் பின்பற்றி ஆரிய நெடுங் கணக்கும் அமைக்கப்பட்டது.

சமற்கிருத நெடுங் கணக்கு தமிழ் முறையைப் பின்பற்றிய தென்பதற்குச் சான்றுகள்:—

1) முறை

மேலையாரிய மொழிகளுள் ஒன்றிற்கேனும் நெடுங்கணக்கில் முறையில்லை. உயிரும் மெய்யும் வேறுபாடின்றிக் கலந்து கிடக் கின்றன. தமிழிலோ, உயிர் முன்னும் மெய் பின்னும், உயிருள் குறில் முன்னும் நெடில் பின்னும், குறிலுள் அகரம் முன்னும் இகரம் இடையும் உகரம் பின்னும், அதன்பின் எகரமும் இறுதி யில் ஒகரமும், ஏகாரத்தையடுத்து ஐகாரமும் ஓகாரத்தையடுத்து ஔகாரமும்;

மெய்யுள் இனவகையும் மெலியுமாக இவ்விரண்டாய் வல்லி னம் முன்னும் மெல்லினம் பின்னும், இடையினம் அவற்றின் பின்னும், பிந்தி யெழுந்த நாலெழுத்தும் இறுதியிலும்; வல்லினம் க ச ட த ப என்ற முறையிலும், இடையினம் ய ர ல வ என்ற முறையிலும்,

ககரத்திற்கினமான நுண்ணொலி (ஆய்தம்) ககரத்தை யடுத்து முன்னும், அடித்தொண்டை முதல் இதழ் வரைப்பட்ட எழுத்துப் பிறப்பியல் முறைபற்றி ஒழுங்காக வைக்கப்பட்டுள் ளன. உலகில் முதன் முதல் இம் முறையில் எழுத்துகள்

வைக்கப்பட்ட நெடுங் கணக்குடைய மொழி தமிழே. தமிழில், எழுத்திலக்கணம் பன்னிரண்டனுள் முறை என்பதும் ஒன்று.

2) புணர்ச்சி

எழுத்துப் புணர்ச்சியும் மேலையாரிய மொழிகட்கில்லை. இத னால், உயிர் மெய்யெழுத்துமில்லை.

3) ஒப்பு

தமிழாய்தத்தை ஒரு புடை யொத்த வடமொழி விசர்க்கம், உயிருக்கும் மெய்க்கும் இடையில் வைக்கப்பட்டிருப்பது ஊன்றி நோக்கத்தக்கது.

4) தொன்மை

தமிழ் நெடுங் கணக்கு கி. மு. பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்பே குமரிக் கண்டத்தில் தோன்றியது. வேத ஆரியர் இந்தி யாவிற்கு வந்த காலம் கி மு. 2000-1500.

5) ஒலிநூற்புலமை

தமிழ் நெடுங் கணக்கில் தனியெழுத் தொலிகளே இடம் பெற்றுள்ளன. சமற்கிருத நெடுங் கணக்கில், அசைகளும் புணர்மெய்களும் சேர்க்கப்பட்டுள்ளன; உயிர் மெய்கள் உயிர் களாகக் காட்டப்பட்டுள்ளன.

ரு, லு முதலிய எழுத்துகள் குற்றியலுகரம் சேர்ந்த ரகர லகர மெய்கள்; அம், அ: என்பவை அகரத்தொடு கூடிய மூக் கொலி விசர்க்கங்கள்; மூ க் கொ லி சேர்ந்த வல்லினம் புணர் மெய்கள்.

6) வருடொலிகள் (Linguals or Cerebrals).

ட, ண என்னும் வருடொலிகள் ஆரியத்திற்குரியவை யல்ல; தமிழுக்கும் திரவிடத்திற்கும் திரவிட அடிப்படையைக் கொண்ட வடநாட்டு மொழிகட்குமே யுரியவை.

கால்டுவெல் ஐயர் காலத்தில் தொல்காப்பியமும் கழக நூல்களும் கழக மருவிய நூல்களும் மறையுண்டு கிடந்தமை யாலும், குமரிக்கண்ட உண்மை அறியப்படாதிருந்ததனாலும், தனித்தமிழ் உணர்ச்சி தோன்றுதிருந்ததனாலும், தமிழ் நெடுங்கணக்கு வடமொழி நெடுங் கணக்கைத் தழுவிய தென்று அவர் வரைந்திருப்பது இற்றைக்குச் செல்லாதென்று கூறி விடுக்க.

சமற்கிருத வரி வடிவு வகை:

சமற்கிருத வரி வடிவு, கிரந்தம், தேவநாகரி என இரு வகைப்படும். இவற்றுள் முந்தியது கிரந்தம். வேத ஆரியர் தமிழொடு தொடர்பு கொண்ட பின், தமிழ் வரிவடிவைப் பின் பற்றிச் சமற்கிருதத்திற்கு அமைத்துக் கொண்டதே கிரந்தம். கிரந்தம் ஏற்பட்ட பின்பும், வேதம் நீண்ட காலம் எழுதப்படா மலே யிருந்து வந்தது. இதை,

''ஆற்ற லழியுமென் றந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார் – ஏட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று.''

என்னும் திருவள்ளுவமாலைச் செய்யுள் உணர்த்தும்.

தென்னாட்டுக் கிரந்தத்திற்குப்பின் வடநாட்டிலெழுந்த வட மொழி வரிவகை தேவநாகரி நகரத்தில் அல்லது நாகரிகமாகத் தோன்றியதென்பது பற்றியும், தேவ மொழிக்குரிய தென்பது பற்றியும், தேவநாகரி எனப்பட்டது. அதைப்பற்றி மானியர் உல்லியம்சு என்பவர் தம் சமற்கிருத அகர முதலியின் முன் னுரையில் 28-ஆம் பக்க அடிக் குறிப்பில் பின் வருமாறு குறிக் கப்பட்டுளது.

''சமற்கிருதக் கல்வெட்டுகளுள் மிகப் பழமையானதாக அறி யப்பட்டது கத்தியவாரில் சுனகரில் ஒரு பாறை மேலுளது. அஃது உருத்திரதாமன் கல்வெட்டென்னும் பெயர் கொண்டது. அது கி பி. 2-ஆம் நூற்றுண்டினது. அது நாகரியில் இல்லை; பழைய கல்வெட்டெழுத்துகளில் உள்ளது. ஏறத்தாழக் கி. பி. 400–ஆம் ஆண்டினதான பவர் கையெழுத்துப்படி நாகரி நோக் கிய பெரு முன்னேற்றத்தைக் காட்ட, கி. பி. சுமார் 750-ஆம் ஆண்டினதான தந்திதுருக்கன் கல்வெட்டு இற்றை வழக்கி லுள்ள நாகரியை மிகவும் ஒத்த ஒரு நிறைவான குறித்தொகுதி யைக் காட்டுவதாயுள்ளது. எனினும், உண்மையான தற்கால நாகரியில் உள்ள முதற் கையெழுத்துப்படி, கி. பி. 11-ஆம் நூற்றுண்டிற்கு முற்பட்டதன்றென்பது கவனிக்கத்தக்கது.''

தென்னாட்டுக் கிரந்தமும் வடநாட்டுத் தேவநாகரியும் முதற் கண் உலகியற் கலை நூல்கட்கே பயன்படுத்தப்பட்டு வந்தன. இன்று மறை நூல்களும் அவற்றில் எழுதப்பெறுகின்றன.

ஆழ வுன்றி நோக்கும் நடுநிலை ஆய்வாளர்க்கு, கிரந்தமும் தேவநாகரியும் தமிழெழுத்தினின்றே தோன்றினவென்னும் உண்மை, முறையே, வெளிப்படையாகவும் குறிப்பாகவும் தோன்றுமற் போகாது.

அடுத்த கட்டுரை 'சமற்கிருதவாக்கம்-இலக்கணம்' என்பது.

பாவாணர்க்குப் பண முடிப்பு.

—▷(*)◁—

செந்தமிழ் அன்பர்களே,

புறப்பகையாய் ஆரியர் விளைத்த புனைவாலும், சூழ்ச்சியாலும், சமற்கிருதத்தைத் தெய்வ மொழியென்று அவர் திரித்துரைத்த பொய் மொழியாலும், அகப் பகையாய் செந்தமிழ் நிலத்தில் வந்து தோன்றிய புல்லுருவிகளாலும் நிலை குன்றிய தமிழ், தன்னை நிலைப்படுத்திக் கொள்ளவும் தமிழ் மக்களை வாழ்விக்கவும், அரசியல், பொருளியல், குமுகவியற் போராட்டங்களை நடத்தித் தீரவேண்டியுள்ளது. இப் பெரும் போராட்டத்தை நடத்த இற்றைவாழ் காசு பறிப் புலவரும், கயமை செறித் தமிழரும் முன்வராதிருக்கின்ற ஞான்றைத், தண்டமிழ்த் தாயின் தனிப்பெரும் மகனாய் திரு தேவநேயப் பாவாணர் முன்வந்து தமிழ்க்கொடியேந்தி நிற்பதைத் தனித்தமிழ்த் தொண்டர் எவரும் அறியாமற் போகார். பாவாணர் தம் சொல், மொழி, வரலாற்று, இலக்கிய, இலக்கண ஆராய்ச்சியின் பெருந்திறலாண்மையைக் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாகத் தமிழரும் தமிழ் நாடும் வெளிநாடும் அறியும். அத்தகு தனிச் சீர்மையும் பேரறிவு மதுகையும் கொண்டு, பல்துறையும் பல்லாற்றுனும் தாழ்ந்து கிடக்கும் நந்தமிழ் மொழியைத் தலைதூக்கி நிறுத்த முன்வந்த பாவாணர், தம் செம்மாந்த வல்லறிவால் எழுதிய நூற்களில் ஒரு சிலவே வெளிவந்துள்ளன. இன்னும் முப்பதுக்கு மேற்பட்ட ஆங்கில, தமிழ் நூற்கள் வெளிவரவேண்டிய நிலையில் உள்ளன. இடைக் கலந்த போலி நாகரிகப் பொய்ம்மை மயக்கால் உண்மை வரலாறு அறியாமல் கிடக்கும் தமிழர்க்கும் பிறர்க்கும் அவை விழிப்பும் எழுச்சியும் ஊட்டக்கூடியன.

அண்மையில் வெளிவர விருக்கும் ஆங்கில 'உலக முதன் மொழி வரலாறு' (The Primary Classical

Language of The World) என்னும் அரிய பெரிய ஆராய்ச்சி நூலையும் வெளியிடுதற்குத் தக்க பொருளின்றி மனம் சாம்பிக் கிடக்கின்றனர். பொருள் கோள் நோக்கின் நூல்வெளியீட்டுப் பொய்மையாளர் எவரும் அவ்வரலாற்று நூலைச் செவ்விதின் வெளிக் கொணர முன்வந்திலர்.

தனித்தமிழ்ப் பகைவரின் சூழ்ச்சியால், தமிழ்ப் பல்கலைக் கழகம் என்று பெருமைபெறப் பேசப் பெறும் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் பாவாணர்தம் வரலாற்று, மொழியறிவைப் பயன்படுத்தாது அவரை மூவாண்டுகட்கு முன் வெளியேற்றியது. வடநாட்டார் தம் மொழியாராய்ச்சிக்கும், ஆரிய அடி வருடிகளின் புல்லிய மேம்போக்கான மொழிக் கொள்கைக்கும் மாறாக, பாவாணர் தம் மொழிக் கொள்கை செம்மாந்து நிற்பதால், தம் செல்வாக்கிழக்க அஞ்சிப் பிற தமிழ்ப் பேராசிரியரும் பாவாணரை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள முன்வந்திலர். இக்காரணங்கள் பற்றிப் பாவாணர் எவ்வகை ஊதியமுமின்றி மிகச் சிறிய வருவாயில் போதிய வாழ்வியல் அடிப்படையின்றி வேலூரில் ஒரு சிறிய குடிக்கூலி வீட்டில் இருந்து வருகின்றார். மன உலைவாலும், பொருள் முட்டுப்பாட்டாலும் கவன்று உடல் நோய் பீடிக்கப் பெற்ற அவர் தம் அருமை மனைவியாரையும் அண்மையில் இழந்தார். மணமாகாத பெண்ணும் பிள்ளையும் உள்ளனர். மணமான பையன்களும் இவர் ஒருநோக்குப் பற்றிப் பேணாக் காரணத்தால் செம்மையான வாழ்விலராகி இவரையே சார்ந்து வாழ்ந்துகொண்டுள்ளனர்.

அரும்பெருந் திறலும் அறிவாண்மையும் வாய்க்கப் பெற்று, மறைமலையடிகட்குப்பின் தனித்தமிழ்க் குரிசிலாகத் திகழும் பாவாணர் தம் எஞ்சிய வாணாள் விணாகப் போமாயின், அது தமிழர்க்கும் தமிழ்நாட்டிற்கும் ஒரு பேரிழப்பாகும் என்பதைத் தமிழன்பரும் அறிஞரும் உணர்தல் வேண்டும்.

ஆகையால் பாவாணர் நூற்களை ஒன்று பின் ஒன்றாக வெளியிடவும், அவர்க்கு ஒரு நல்வாழ்வை அமைத்துக் கொடுக்கவும் தமிழ் மக்கள் தாம் முன்வரல் வேண்டும். பாவாணரின் மொழிக் கொள்கையை வெளிப்படையாக ஒப்ப மறுத்த பேராசிரியர் சிலர், சென்னை போன்ற பெரு நகரங்களில் ஏழு எட்டு வளமனைகளைக் கட்டிக் குடிக்கூலி பெற்றுக் கொண்டும், இன்ப ஊர்திகளில் இயங்கிக் கொண்டும், எவர் எக்கேடு கெட்டாலென்ன என்று இறுமாந்து

நிற்கும் நிலையில், பாவாணரைத் தமிழ் மக்கள் இதுவரைப் புறக்கணித்ததும் இனியும் புரக்காமல் இருப்பதும் பெரும் குற்றமும் இழுக்குமாகும்.

ஆதலின் தமிழ் அன்பர்களே! செந்தமிழ்ச் செல்வர்களே! பாவாணர்க்குப் பெருஞ் செல்வந் திரட்டித்தரத் தென்மொழி முன்வந்துளது. தென்மொழிச் சார்பில் தென்மொழி வல்லுநர்க்குப் பெருமை செய்வது தமிழ்ப் பெருமக்கட்கு ஒரு பெரும் நல்வாய்ப்பாகும்.

அவரவர் தங்களால் இயன்ற வரைக் கீழ்க்காணும் முகவரிக்குப் பொருளுதவி அளிக்க. ஒரு பெருந்தொகை சேர்ந்தவுடன் தமிழ் மாநாடு ஒன்று கூட்டி, அதில் பாவாணர் நூல் வெளியீட்டு விழாவும், பாவாணர்க்குப் பணமுடிப்புத் தருவிழாவும், தென்மொழிக் கழகத் துவக்க விழாவும் நடத்தப் பெறும். அந்த நாள் தமிழர்தம் விடுதலை உரிமை நாள். அதற்காவன செய்யத் தமிழ் மக்களைக் கை கூப்பி வணங்குகின்றோம்.

அருட்கொடை யாளர்களே
பாவாணர்க்குப்
பொருட்கொடை தாருங்கள்!

சாகின்ற தமிழ்க்குலத்தின் பழம்பெருமை
தனிச்சீர்மை எண்ணி எண்ணி
நோகின்ற நெஞ்சுடையான்; நொடிகின்ற
நிலையுடையான்; தமிழ்ப் பகைக்கே,
வேகின்ற செந்தீயின் வெப்பன்னான்;
விறல் மறவன்! இளம்பயிர்க்கே
ஆகின்ற மழைபோலத் தண்ணளியால்
அருந்தமிழ்க்கே வாழ்வா னிங்கே!

உயிர்ப்பாடும் முக்கழகம்! உணர்வாடும்
தமிழ்க்குரிசில்! உறைந்த கட்டித்
தயிர்ப்போலும் செழுஞ்சொல்லால் மொழிப்பெருமை
காத்துவரும் தமிழ்மா வேந்தன்!
அயர்ப்பூருந் தமிழர்க்கு நினைவூட்டி
அயர்வகற்றும் தமிழ்ப்பே ராசான்!
செயிர்ப்பூரும் புலிப்பாய்ச்சால் அரிமாவின்
செந்நோக்கால் தமிழைக் காப்பான்!

பசித்தெழுந்த வயிறடக்கிப் பணிந்தெழுந்த
மனையாளின் விழைவ டக்கி,
விசித்தழுத மகவடக்கிச் செந்தமிழின்
பகையடக்கி, வீணர் தீங்கை
முசித்தெறிந்தான்! தமிழ்ப்பெருமை முழுதுணர்ந்தான்!
மொய்ம்புகழே அல்லால், இற்றைப்
புசித்திடவும் சோறறியான்; வாழ்ந்திடவும்
வீடறியான்; மனஞ்சோ ரானே!

“பூவார்ந்த முல்லைக்குத் தேரீந்தான்;
மயிலுக்குப் போர்வை ஈந்தான்;
காவார்ந்த புலம்நோக்கி வந்தார்க்குத்
தலையீந்தான் தமிழன்” என்றே
பாவார்ந்த செந்தமிழின் பாட்டார்ந்த
தமிழர்களே, பாவா ணர்க்கே
நாவார்ந்த செழுந்தமிழால் வாழ்த்துரைத்துப்
பெரும்பொருளை நல்கு வீரே!

கையெடுத்துத் தருகின்ற பொற்காசிங்
கொவ்வொன்றும் சேர்த்தெ டுத்த
பையெடுத்துத் தருமுணர்வால் பாவாணர்
வீறெடுத்துப் போரெ டுத்தால்,
பொய்யெடுத்து வீசுகின்ற புலையெடுத்த
நெஞ்சுடையார் நீட்டி வைத்த
கையெடுத்து வாலெடுத்துப் போகாரோ
காலெடுத்துத் தலைமேல் வைத்தே!

வகைதிரட்டி, ஆள்திரட்டி, அரசாளும்
வல்லமையால் நம்மைச் சாய்க்கும்
பகைதிரட்டிக் கொண்டுள்ளார் வடநாட்டார்,
இந்தியெனும் கருவி கொண்டே!
புகைதிரட்டி உருச்சமைக்கும் பொய்யாட்டம்
காட்டுகின்றார்! அன்னோர் நாணத்
தொகைதிரட்டித் தாருங்கள் தமிழர்களே,
பாவாணர் தொண்டுக் கின்றே!

நாடகத்துக் கீகின்றீர்; நடுத்தெருவில்
உடல்காட்டிக் கொட்டி யாடும்
ஆடகத்துச் சிறுமகளிர்க் குதவுகின்றீர்!
அருந்தமிழ்வாழ் பசும் பயிர்க்குள்

ஊடகத்து வருகின்ற இந்தியெனும்
காட்டெருமை ஓட்டு தற்கே
பாடகத்த பான்மையினுன் பாவாணர்க்
குதவுக பைம் பொன்னெ டுத்தே!

அடியேந்தி நின்றவர்கள் முடியேந்தி
அமர்ந்திருப்பர்; அவர்கள் பாங்கில்
குடியேந்திச் செந்தமிழ்த்தாய் நொடிகின்ருள்;
துவள்கின்ருள்; அவளை மீட்க,
மடியேந்தி, தமிழிளைஞர், தமிழ்மகளிர்
தெருத்தெருவாய் வீடு வீடாய்ப்
படியேந்திச் சென்றுபொருள் திரட்டிடுவீர்
பாவாணர் மகிழு மாறே!

அன்பன்
பெருஞ்சித்திரன்.

பொருள் அனுப்பவேண்டிய முகவரி:-
அமைச்சர், தென்மொழி.
பாவாணர் பொருட்கொடைத் திட்டம்
கடலூர்-2.
நன்கொடைப் பட்டியல் தென்மொழியில் வெளியிடப்பெறும்

தென்மொழி

கடலூர்-2.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய விதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு.	கொழும்பு.	வெளிநாடு.
தனி இதழ்.	50 காசு.	60 காசு.	75 காசு.
ஆண்டுக்கட்டணம்.	6 உருபா.	7–25 உருபா.	9 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்.

அட்டை நான்காம் பக்கம்.	(இரு வண்ணம்)	100 உருபா.
,, ,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா.
உள்ளே முழுப் பக்கம்.		50 உருபா.
,, அரைப் பக்கம்.		25 உருபா.

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

இலக்கியம்

எண்சுவை என்பது.

6. சினம்.

யாரொருத்தி நீயிவனார்? யாதுபற்றி யாங்குவந்தீர்?
யாரொருத்தி தன்னையிவண் யாயென்றறை? யாங்கேனும்
மோருறைத்த பால்வருமோ முன்? (1)

---

6. சினம்.

வேற்றூர் போய் மணந்த தன் பெண்ணும், அவள் மணவாளனும், அவர் பிரிவால் வருந்தி, இழிவாற் குன்றி, இழப்பால் மனம் கன்றிய தாய் முன் நிற்ப, அவர்தமை முனிந்து பேசுதல் சினம் என்றாயிற்று.

1) தாய்க்கு மகளாயிருந்தாள், தனக்கொரு கணவனைத் தானே தேடி அவன்பின் சென்ற ஞான்றே, பழிவந் தெய்திய தாய் தான் அவட்குத் தாயுமல்லள், அவள் தனக்கு மகளுமல்லள் என்று கொண்டாளாகையால் யாரொருத்தி நீ என்று கூறலாயிற்று இவன் ஆர்–என்றது தன் மகள் மணாளன்பால் நேர் கூற்றாக வினவாது தன் மகளையே யார் இவன் என்று கேட்டபடி.

யாது பற்றி–என்றது என்ன உரிமை பற்றி என்பது. வந்ததுமன்றி ஆய் (அன்னாய்') என்று நீ விளித்தது யாரை?

துரை மாணிக்கம்

இல்லம்முன் நில்லன்மிர்! ஏலாசொற் கூறன்மிர்;
பல்லர்முன் வந்து பழிசெய்யீர்! பாழ்நெஞ்சின்
அல்லல்முன் நில்லாதும் அன்பு. (2)

தீக்கை மலர்க்கையால் தேர்ந்தாய் மடமகளே!
யாக்கை வருத்தும் அழல்வாய் எருத்துப் புண்
காக்கைக் கினிக்குங் கனி. (3)

என்று சினக்கின்ருள். இத்துணையும் கேட்டுவிட்டுத் தன் மகளின் தகாச் செயலையும், அவள் முன்னிருந்த நிலையின் வேறுபட்டிருப்பதையும் காட்டுவான் வேண்டி, **மோரு றைத்த பால் முன்வருமோ**—என்ருள், என்க. பால் திரிந்து தயிராய பின்றைப் பாலாகுமோ என்றதை மோர் எனும் அவனொடு கலந்த பாலாகிய இவள் மீண்டும் தூய்மை எய்த முடியுமோ என்பதோடு பொருத்துக. இழிவு நேர்ந்த பின்றை இழிவு துடைத்தல், மோர்கலந்த பாலைத் தனியாகப் பிரித்தல் போலாம் என்றது.

2) நில்லன்மிர்—நில்லாதீர்கள். கூறன்மிர்—கூருதீர்கள்.

பல்லர்முன் வந்து பழி செய்யீர்-என்றது இழிவு செய்த பின்றை இனியும் பழி செய்ய வேண்டா என்றபடி. பல்லார் என்பது எதுகை நோக்கி நெடில் குறைந்தது. **பாழ் நெஞ்சு**—என்றது இவ்வளவு துயர் கொண்டும் மாளாத நெஞ்சு என்றற்காம். இழிவாற் பட்ட துன்பங்கள் முன் தாய்—மகள் என்ற அன்பு எதிர் நில்லா தென்பதால், **அல்லல் முன் நில்லாது உம் அன்பு** என்ருள்.

3) **தீக்கை மலர்க்கையால் தேர்ந்தாய்**—என்றது, தீய வழி மேவுவானுடைய கையினை, மலர் போல் குளிர்மையும், மென்மையும் கொண்ட நின் கையினல் பற்றி மணந் தேர்ந் தாய் எனல் வேண்டி. அவ்வாறு செய்தது மடமை யாக லான் **மட மகளே** என்ருள் என்க. இனித், தன் உள்ளம் கொண்டானின் உள்ளம் பற்றுதல் தீதோ, அன்றி மடமோ என்பார்க்கு, ஏதிலர் பழியும், தூய்மை மாய்ப்பும் கொண்ட புறம்போய் மணந்த மணம், சான்ருேர் போற்ருத தொன் ருகலின் அது பெருமையற்ற தென்க.

அழல் வாய் எருத்துப் புண் காக்கைக்கு இனிக்கும் கனி—என்றது பிறர் நோ வறியாது தன் பசிக் கெனவே, அழல் வாயையுடைய எருத்தின் புண்ணைக் கனி யென்று கொத்தி யுண்ணும் காக்கை போலவே, தன் இளமை மணம்

மால்விழுந்தாய்; இன்னான் மனம்விழுந்தாய்; மன்னனென்று
மேல்விழுந்தாய்; எந்நாளும் மேவும் பழிவிழுந்தாய்;
கால்விழுந்தாய், கையிருக்க; காண். (4)

ஏற்றுக்கொள் என்பீரிங் கெல்லாரு மெஃதையோ!
ஏற்றுக்கொண் டேனிடும்பை; ஏற்றுக்கொண் டேன்பழியை!
ஏற்றுக்கொண் டேனே இழிவு (5)

முத்தென்றேன்; சிப்பி! முதலென்றேன், கீழ்க்கடையை!
சொத்தென்றேன்; சொத்தை! சுளையென்றேன் தீக்கனலை!
வித்தென்றேன் உன்னை விதந்து. (6)

வேட்டல் கருதி, தனைப் பெற்றாளின் உளத்தை உணராது அவட்குத் துன்பந்தந்து தான் மகிழ்வது போன்றது என்றற் காம்.

யாக்கை வருத்தும் அழல் வாய்ப்புண்-என்றதால் *உள்ளம் மட்டுமன்றி ஊண் உறக்கமின்றி உடலுக்கும் ஏற் பட்ட வருத்தம் என்க. புண்ணைக் கனி என்றது நிற வொற் றுமை கருதி என்றறிக.*

4) *மால்-மயக்கம்.*

மாலுற்று மனங் கழன்று, அவனை மணந்து கொண்ட நின் செய்கையால், எந்நாளும் தீராத பழியெனும் குழியில் விழுந்ததுமன்றி என் காலில் வேறு வந்து விழுந்தாய்-என் பதாம்.

கையிருக்கக் கால் விழுந்தாய்-என்றது, *உன்னைக் கைகளால் அணைத்து மகிழும்படி நான் இருக்க, அத்தகைய சிறப்பினைப் பெறாது, என் கால்களில் நீ விழுந்து அழும் படியான இழிவைப் பெற்றாய் என்றபடி.*

காண்-என்றது, ஈண்டாவது அதன் ஏற்றத் தாழ்வை நீ உணர்ந்து கொள்வாயாக என்றதுமாம்.

இப்பாட்டான் மகள், தாயின் காலில் விழுந்து வருந்தி னாள் என்று கூறியபடி.

5) *இது பலர்பால் முன்னிலை. மகள் மேல் முனிந்த தாய் நோக்கி, 'ஏற்றுக் கொள்' என்ற சான்றோரை நோக்கிக் கூறியது. அதற்கு, 'நான் முன்பேயே இடும்பை ஏற்றுக் கொண்டேன்; பழியை ஏற்றுக் கொண்டேன்; இழிவை ஏற்றுக் கொண்டேன்' என்று வருத்தந் தோன்றக் கூறியது*

6) *நின்னை* முத்தென்று *எண்ணியிருந்தேன். வெறுஞ்* சிப்பி *ஆயினை. என் பெருமையான இல்லறத் தொடரின்* முதல்

சீர்கொட்டி யேற்ருயோ சிற்ருலி? நம்மைப்பேர்
ஊர் தட்டித் தூற்றும் உலகம் உணராளே!
ஆர்கட்டி யேற்ருய் அது? (7)

ஏடா! இவள்சிறுகை ஏற்றழைத்துப் போஞயாந்
தேடாப் புகழ்போக்கித் தேராதார் தூற்றுகின்ற
கூடா இழிவழைத்தாய்; கூற்று! (8)

என்று எண்ணியிருந்தேன். நீ என் இல்லறப் பெருமைக்குக் கீழ் இறுதியைக் காட்டினை. நின்னேடு அப்பெருமை குன்றியது. சொத்தைப் பழுதையினை, என் சொத்தென்று எண்ணி இறுமாந்திருந்தேன்; தீ போன்ற கொடியாளைச், சுனையென்று நினைந்து மகிழ்ந்திருந்தேன்; நம் குடும்பப் பெருமைக்கு விதை என்று உன்னை எண்ணி உவந்திருந் தேன். இப்பொழுது காண், அவ்வுரை விதப்ப உரையானதை' என்ருள் ஆம். விதந்து – மிகைப்படக் கூறி.

7) இஃது அவள் அணிந்திருந்த பொற்ருலிநோக்கிக் கூறியது. சிற்ருலி – சிறுதாலி. சிறுமை உடைய தாலி. **சீர்கொட்டி யேற்ருயோ**–என்றது நம்பெருமைகளை எல்லாம் கொட்டிக் கொடுத்து இச் சிறுமை பொருந்திய தாலியை ஏற்ருயோ? – என்றபடி.

நம்மைப் பேர், ஊர் தட்டித் தூற்றும் உலகம் உணராளே - என்றது, நாம் மறக்கினும் இவ்வுலகம் நம்மை மறவாமல் நம் பழியைச் சாற்றும் என்றபடி. பழிவந்தது உனக்கு மட்டுமன்று, நம் குடும்பத்திற்கே என்றது விளக்க **நம்மைத் தூற்றும்** என்ருள். இதுபற்றி நீ யறியமாட்டாய் எனல் வேண்டி **உலகம் உணராளே** என்ருள்.

எனை விட்டுப் பிரிந்துபோய் என் முன் வந்தது, நான் ஏற்றுக் கொள்வேன் என்பதுணர்ந்தே என்றதும், ஆனல் நம்மை என்றும் தூற்றும் உலகத்தை நீ உணரவில்லை என்றதும் ஆம்.

8) இதுவரை தன் மகளை ஏசிக் கொண்டிருந்தவள் தன் முன் நின்ற மகள் மணாளனை நோக்கிச் சினந்து கூறியது. **தேடாப் புகழ் போக்கி**-என்றது பண்டை இருந்த இல்லப் பெருமையைத் துடைத்தாய் என்றபடி.

தேராதார் தூற்றும்–பழம் பெருமையினை **ஆய்ந்து,** உண்மை உணராதவர் வாய்க்கு வந்தவாறு பேசும்;

இல்லிக் குடுவை இருங்கடலைத் தாண்டுமோ?
புல்லிப் புறம்போகும் போக்கிலியோ டேடிபோய்
வல்லி நீ பெற்றாய் வடு? (9)

அன்னைச் சினமாறும்! அன்பவள்பா லூறுமதில்
முன்னைக் கனிவிருக்கும்; என்றே மடமகளே,
பின்னை நீ வந்தையிவன் பின். (10)

கூடா இழிவு அழைத்தாய்-வரக்கூடாத இழிவைத் தாமாகவே வரவழைத்துக் கொண்டாய் என்றபடி.

கூற்று-என்றது உயிரைக் கவ்வி உடலைப் பிணமாக்குதலால்: உயிர் போன்ற தேடாப் புகழைப் போக்கித், தூற்றப்படுகின்ற இழிவு பொருந்திய வெற்று உடலாகச் செய்ததனால் அவனைக் கூற்றுவன் என்றான். 'ஒழுக்கம் உயிர்' என்றார் நூலோர். சிறுகை-என்றதால் அறியாத சிறு பெண்ணின் கை என்றாள்.

9) இல்லிக் குடுவை-பொத்தற் குடுக்கை. இல்லிக் குடுவை அகன்று விரிந்த கடலைத்தாண்டும் என்று நினைந்து அதைத் தெப்பமாகக் கொள்வாரோ? கொள்ளார்; அதுபோல், புணர்ந்து பெருமை வீழ்த்தி, வேற்றிடம் போகும் போக்கில்லாதவனோடு, நீபோய் உன்பெருமையைத் தொலைத்தாய் -என்றபடி.

இல்லிக் குடுவை என்றது பெருமையற்ற புல்லறிவுடையன் என்றற்காம். அவ்வாறல்லான் எனின் அவன் வேற்றூர் கூட்டிப் போவானே என்றாள் என்க.

இருங் கடல்-வாழ்க்கைக் கடல்; துன்ப அலையும், துயரக்காற்றும் வீசுகின்ற கடல், மேலுங் கீழும் புரளும் தன்மைத் தாயது. அவ்வாறுள்ள வாழ்க்கையை நடத்த இவன் தகான் என்றாள் என்க.

போக்கிலி-போக்கில்லாதவன். போக வேறு இடமின்றி உன் பின்னால் என்னிடமே வந்து சேர்ந்தானே என்று குறிப்புக் காட்டினாள் என்க. வல்லி, நீ பெற்றாய் வடு என்றது ஆறிய பின்னும், மாறாமல் இருந்த இடங்காட்டும் தழும்புபோல், நீ செய்த செய்கை, நாளை மாறினும் உள்ளத்துத் தழும்பாய் வீற்றிருக்கும் என்றபடி. இன்றிருந்த சினம் மாறினும், இழிவு அழுந்திய வடு என்று இருக்கும் என்றாள் என்க.

10) அன்னைச் சினம் மாறும்-என்றது, பெற்ற தாய், தன் பிள்ளை மேற் கொண்ட கடுஞ் சினமும் என்றாவது படிப்படியாய் மாறியே போகும் என்ற உலகவியல் காட்டியது.

திருக்குறள் நல்லுரை ஆய்வு:

ஒன்றாக நல்லது கொல்லாமை.

(பேராசிரியர். கு. சுந்தரமூர்த்தி,
செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.)

சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லும் வல்லமை திருவள்ளுவர் ஒருவருக்கே உண்டு. ஏனையோரெல்லாம் அறஞ் சொல்ல எடுத்துக் கொண்ட யாப்பு குறைந்த அளவு நான்குஅடியாவது உள்ள வெண்பா போன்றன ஆகும். ஆனல் இவர் எடுத்துக்கொண்ட யாப்போ அதனினும் குறைந்த குறள் வெண்பாவாகும். எனினும் பிறர் கூறுகின்ற அறங்களைக் காட்டிலும், இவர் கூறுகின்ற அறங்கள் தரத்திலும் திறத்திலும் எவ்வாற்ருனும் பின்னிடுவன அல்ல. இதனினும் அருமை ஒரே குறளில் ஒன்றற்கு மேற்பட்ட அறங்களைக்கூறுதலும், அங்ஙனம் கூறுங்கால் ஒன்றிலொன்று உயர்வு தோன்றக்கூறுதலும் ஆம்.

''அருளிலார்க் கவ்வுலகம் இல்லை பொருளிலார்க்(கு)
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.''

''மறவற்க மாசற்ருர் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.''

''கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு''

என்பன போன்ற குறட்பாக்களில் ஒன்றற்கு மேற்பட்ட அறங்களைக் கூறியுள்ளமை காண்க.

''உண்ணுது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னுச்சொல் நோற்பாரிற் பின்.''

''ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.''

(முன் பக்கத் தொடர்ச்சி)

அன்பு அவள் பால் ஊறும்–என்றது, சினம் மாறி, அன்பும் சிறிது சிறிதாகத் தோன்றும் என்றபடி. ஊறும் என்றது சிறிது சிறிதாகத் தோன்றுவதை.

முன்னைக் கனிவிருக்கும்–என்றது அதன்பின் அவள் உள்ளத்தில் கனிவும் பிறக்கும் என்பான் வேண்டி. கனிவு பேதைமைபாற் பட்ட இரக்கம். அன்பின் முதிர்ந்த ஒன்று.

என் ருே–என்று எண்ணியோ?
இப்பாடல் அடுத்த உவகை இயலுக்கு எடுப்பாகும்.

என்பன போன்ற குறட்பாக்களில் ஈரறம் கூறப்பட்டவாறும், அவற்றில் ஒன்றிலொன்று உயர்வு தாழ்வு கூறப்பட்டவாறும் காண்க.

இனி ஓர் அதிகாரத்தில் ஓர் அறத்தை உயர்த்திக் கூறியவர், பின்னும் பிறிதோர் அதிகாரத்தில் பிறிதோர் அறத்தை உயர்த்த வேண்டின் அவற்றுள் எது தலையாயது, எதுபின்னே வைக்கத் தக்கது என்று கூறுவதும் உண்டு. இந்நிலையில் அமைந்ததே இத்தலைப்பிற்குரிய திருக்குறளாகும். அக்குறள் வருமாறு:

''ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று''.

இக்குறட்பா உரையாசிரியர்களின் கருத்து வேற்றுமைக்கு இடனாக உள்ளது. அதுபற்றி ஈண்டு ஆராய்வாம். இப்பாவிற்கு மணக்குடவர், காலிங்கர், பரிமேலழகர் ஆகிய மூவரும் ஒரு வகையாகவும், பரிதியார் மட்டும் வேறு வகையாகவும் உரை காண்பர்.

தனக்கு ஒப்பதின்றித் தானேயாகச் சிறந்தது கொல்லாமை என்ற அறமேயாகும். மற்றுப் பொய்யாமை என்ற அறமோ அதனை அடுத்துச் சிறப்பிப்பதற்குரியதாகும் என்பது இந் நூற் பாவின் கருத்தாகும்.

இதனையே மணக்குடவரும், ''சொல்லிய அறங்கள் எல்லா வற்றினும் பொய்யாமை நன்று, அதனினும் நன்று கொல்லாமை யாம்'' என விளக்குவர். இக்கருத்தே காலிங்கருக்கும் உடன் பாடாயினும் பொய்யாமைக்கு மணக்குடவர் கொடுக்கும் இடத்தி னும் இவர் கொடுக்கும் இடம் இன்னும் சற்று உயர்ந்ததாகும். அவர் உரை வருமாறு:

''அனைத்தறங்களினும் தனக்கு இணையின்றித் தானேயாகச் சிறந்தது யாதோ எனில், கொல்லாமையாகிய அறம் ஒன்றுமே; அதனால் இனிக்கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவானொருவன் இனி இதன்பின் செய்ய வேண்டுவதும் ஒன்றுண்டு; அஃதாவது எஞ்ஞான்றும் பொய்யாமையைத் தப்பாமல் குறிக் கொள்ளல். அங்ஙனம் குறிக்கொண்டால் அது சாலத்தகைமை யுடைத்து என்றவாறு''.

மணக்குடவர் கொல்லாமை, பொய்யாமை ஆகிய ஈர் அறங் களையும் எடுத்துக்கொண்டு, அவற்றை மதிப்பிடுமாறு போல (கொல்லாமை 100 மதிப்பெண் பெறுமென்றால் பொய்யாமை 90 மதிப்பெண் பெறும் என) உரை காணுகின்றார். ஆனால் காலிங் கரோ ஒருவன் கொல்லாமை என்ற அறத்தை மட்டும் மேற் கொண்டால் போதாது; அதனோடு பொய்யாமை என்ற அறத்

தையும் மேற்கொள்ளல் வேண்டும் எனக் கூறுகின்றார். எனவே இவர் கருத்தின்படி கொல்லாமை என்ற அறமும் பொய்யாமை என்ற அறமும் ஒப்ப வைத்து எண்ணுதற்குரியவாகும்.

மணக்குடவர் பொய்யாமையினும் கொல்லாமை சிறந்தது எனக் கூறினரேயன்றி, அதற்குரிய காரணத்தைக் கூறினர் அல்லர். இதனைப் ப ரி மே ம ல ழ க ரே நன்கு விளக்குகின்றார். அவர் கூறும் காரணங்கள் இரண்டாகும். (1) பொய்யாமை (அஃதாவது வாய்மை) 30 ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. கொல்லாமை 33 ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே முற்கூறியதினும் பிற்கூறியது சிறப்புடைத்து என்பது. (2) மக்கள் கூட்டத்திற்கு நன்மை பயக்குமெனின், பொய்மை வாய்மையாயும், வாய்மை பொய்மையாயும் திரிந்துவரும் ஆனால் மன்பதைக்கு நன்மை பயப்பினும், தீமை பயப்பினும் கொலை கொலையேயாம். ஆதலின் கொல்லாமையே சிறந்ததாயிற்று என்பது.

இவ் இரண்டனுள் முதற்காரணம் அத்துணைச் சிறப்புடைத் தன்று. முற்கூறியதில் பிற்கூறியது சிறப்புடைத்தாயின் ஊழினும் (38–ஆம் அதிகாரம்) ஆள்வினையுடைமை (62–ஆம் அதிகாரம்) சிறப்புடைத்தாதல் வேண்டும். அது சான்றோர் எவர்க்கும் ஒப்ப முடிந்ததன்றாகலின் இங்ஙனம் கூறுதல் பொருத்தமின்றாம். எனவே இவர் கூறும் இரு காரணங்களில் முற்கூறியதினும் பிற்கூறியதே சிறப்புடைத்தாம்.

இம்மூவரும் ஆசிரியர் கருத்தொடு தழுவிப் பொருளுரைக்கப் பரிதியார் மட்டும், ‘அறநெறி யெல்லாம் ஒன்றாகத் திரட்டியது கொல்லாமை; அதனினும் பெரியது பொய் சொல்லாமை’ என உரை கண்டனர். பரிதியார்,

‘‘யாம்மெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற.’’

‘‘பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று’’

என்ற குறட்பாக்களையே நினைந்து இக்குறட்பாவிற்கும் உரை காணுகின்றனரேயன்றி; ‘ஒன்றாக நல்லது கொல்லாமை’ என்ற தொடரின் அழுத்தத்தை அறிந்திலர். அன்றியும், ‘மற்றதன் பின்சாரப் பொய்யாமை நன்று’ என்ற தொடருக்கு இப்பொருள் சிறிதும் இயைபில்லாமையையும் அவர் அறிந்திலர். ஆதலின் இவ்வுரை பொருந்துவதன்றாம்.

இக் குறட்பாவிற்குக் காலிங்கர் உரை பொருத்தமுடையதாகும். அதனினும் பொருத்தமுடையது மணக்குடவர் உரையாகும். இவர் உரையும், இவர் உரைக்கு விளக்கம் தந்த பரிமேலழகர் உரையும் மிகச்சிறந்தனவாகும்.

*

முன்னிதழ்த் தொடர்ச்சி.

வரலாறு

வால்டயர்

(பிரஞ்சுப் பாவலர்.)

ஆயினும் சில நாட்கள் தாம். வழக்கமான பொருமை முளைக்கத் தொடங்கி விட்டது. அரசவைப்புலவர் சிலர் வால்டயர் மதிப்பைப்பெருது போனமையால், மன்னனுக்கு அவர்பால் வெறுப்பேற்படச் சூழ்ச்சி புரிந்தனர். புறங்கூறியும் கதை பல புனைந்தும் இருவர் நடுவிலும் மன வேற்றுமையை வளர்த்தனர். மற்றும் வால்டயர் ஆங்குச் சில வாணிக வினைகளில் ஈடுபட்டிருந்தார். அத்தொடர்பில் எர்சல் என்னும் அவர்தம் துணையாளர், வால்டயரைச் சுரண்ட முயலவே சிறையிடப்பட்டார். வால்டயரின் பகைவர் சிறைப்பட்டவர் பக்கமே முறைமையிருப்பதாகக் கதை கிளப்பி மன்னனுக்கும் கூறினர். மன்னரும் வால்டயரிடம் முகச் சுளிப்புடன் நடந்து கொண்டார். இதற்கிடையில் வால்டயர் மேற்பொருமை யுற்றிருந்த மாப்

பரிது (Maupertuis) என்பார் எழுதிய நூலொன்றிற் குறை கண்ட வால்டயர் அவரை எள்ளி நகையாடு முகத்தான் ஒரு நூல் எழுதினர். அந்நூலினல் அரசரையும் வால்டயர் மதிக்காமல் நடந்து கொண்டதாகக் கூறப்பட்டது. அந்நூல் அரசராணையால் கைப்பற்றப்பட்டுத் தீயிவிடப்பட்டது

ம. இலெ. தங்கப்பா, எம் ஏ.

வால்டயர் அரசர் அளித்த விருதுகளைத் திரும்ப அனுப்பி விட்டு அரசவை நீங்க எண்ணினார். அரசர் விருதுகளைத் திரும்பப் பெறவில்லை. எனினும் வால்டயர் அரசவை நீங்குவதே நல்லதென்றார். நாட்டெல்லையில், அலுவலன் ஒருவன் வேண்டு மென்றே அரசர் அளித்த விருதுகளைத் திரும்பக் கேட்டுத் தொல்லை செய்ய, அவற்றை வால்டயர் மூட்டைமுடிச்சுகளுடன் கட்டிவைத்துவிட்டு வந்துவிட்டதால், சிறைப்பட நேர்ந்தது.

சிறைநீங்கிய வால்டயர், உரிமைவாழ்வுக்கு எங்குமே தடை ஏற்படுவதை எண்ணி மனம் பொங்கினார். பிரான்சுக்குத் திரும்பவோ முடியாது. அரசரின் ஆணை மாறாதிருந்தது. வால் டயர் பிரான்சுக்குத் திரும்பியிருந்தால் அரசருக்கு நலமாயிருந் திருக்கும். வால்டயரின் சினமும், அ ர ச வை வெறுப்பும் பிற் காலத்தில் பிரெஞ்சுக் கோனாட்சி முறைக்கே உலைவைத்த கார ணங்களுள் ஒன்றாயின.

கால்மர் பகுதியை அடைந்த வால்டயர் ஆங்கிருந்த சினோனி மடத்தில் சில நாட்கள் தங்கலாயினார். அப்போது தான் ''அறநெறிக் கட்டுரைகள்'' என்ற நூலை எழுதலாயினார். சமய வாணரின் நூல் நிலையத்தில் புகுந்து, சமய வாணர்க் கெதிராய கருத்துகளை ஆங்கேயே தொகுத்து, நூலாக்கியதம் வி ர கி னை வால்டயர் அ டி க் க டி நினைந்து கொள்வாராம்! தற்போது அ வ ரு ட ன் அவர் தம் மருமக்களாகிய தெனிசு, போந்தேன் அம்மையார் இ ரு வ ரு ம் இருந்தனர். வால்டயர் அவர்களுடன் சுவிட்சர்லாந்தில்குடிபுகுந்தார். அழகிய செனீவா நகரத்தில் வீடொன்றை வாங்கினார். சிறிது காலம் அவ்வீட்டில் அமைதியாக வாழ்ந்திருந்தார். தம் வ ா ணி க வி னை க ள ா ல் வால்டயர் இதற்குள் பெரும் பொருளும் ஈட்டியிருந்தார். தம் இல்லத்திலேயே ஒரு நாடக மன்றம் அமைத்துத் தாம் எழுதிய சேரே (Zaire) எனும் நாடகத்தை, இலிகேன் (Lekain) எனும் நடிகரின் குழுவைக் கொண்டு நடிக்கச் செய்தார். செனீவா நகரப்பெருமக்கள் பலர் அந்நாடகத்துக்கு வந்து திரண்டனர். இ த ற் கு ள் சமயவாணர் இந்நாடகங்களில் தமக்கு ஏ த ம் விளைவன இருப்பதைக் கண்டு கொண்டனர். கோவில்களில் வால்டயரை எதிர்த்துச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. மேலும் வால்டயர் தாம் எழுதிய கட்டுரை ஒன்றில் கத்தோலிக்கச் சம யத்தாரின் குறைபாட்டை எடுத்தியம்பியும், எதிர்ப்புச் சமயத் தாரின் சில நல்லியல்புகளைப் பாராட்டியுமிருக்கவே, வால் டயருக்கெதிராக வினைகள் பல மிகுந்தன. வெறுப்புற்ற வால் டயர் எங்குமே தன்னுரிமைக் கருத்தினருக்கு நி லை ய ா ன இ ட மி ல் லை என்பதுணர்ந்து, ஒவ்வொரு நாட்டிலும் தனக்கு ஒவ்வொரு வீடு வேண்டுமென்று நினைத்தார். ஓ ரி ட த் தி ல் தொல்லை விளையின் பிறிதோரிடமாக மாறிமாறி வாழலாமன்றோ!

அப்போது செனீவாவின் அருகிலுள்ள பிரெஞ்சுப் பகுதி ஒன்றில் இரண்டு பெரும் பண்ணைகள் விலைக்கு வந்தன. இரண்டையும் வால்டயர் வாங்கிக் கொண்டார். அவற்றுள் ஒன்றே பெர்னே (Ferney) மாளிகை ஆகும். அங்குத்தான் இருப தாண்டுகள் தொடர்ந்து வாழ்ந்து வரலானார். அங்கும் ஒதுங்கிய தனி வாழ்வில்லை...... ஊக்கமும், ஆக்கப் பணியும் நிறைந்த சோர்வில்லாத வாழ்க்கையையே வால்டயர் எப்போதும் நாடினார். ஒரு கோவிலையும் ஆங்குக் கட்டினார். நாடக மன்றத்தையும் அமைத்துக் கொண்டார். எப்போதும் நண்பர் குழாம் அவரைச் சூழ்ந்து கொண்டேயிருந்தது.

தம்மோடு மட்டும் அவர் நின்றாரில்லை பெர்னேச் சிற்றூரையே உயிர்த் துடிப்புடையதாக்க எண்ணம் கொண்டார். தொழிலாளர்க்கு இல்லங்கள் கட்டிக்குறைந்த கூலிக்குக்கொடுத்தார். சிற்றூரைச் சிறு நகரமாக்கினார். காலுறைகள், பின்னல்கள் செய்யும் கலைக் கூடங்களை அமைத்தார். மணிப்பொறிகள் செய்யும் நுண் வினைஞர்களையும் தம் நகரில் குடியேறச் செய்தார். ஆங்குச் செய்யப்படும் பொருட்களெல்லாம் ஐரோப்பாவின் பல நாடுகளிலும் விலைபோவதற்கு ஆவன செய்தார். இவற்றிலெல்லாம் பண இழப்பு நேர்ந்தும் கவலைப்பட்டாரில்லை. ''பண இழப்புத்தான்; அதனால் என்ன? வறுமை நிலவிய இடத்தில், வளங்கொழிக்கச் செய்தேன்; என்னை அழித்துக் கொண்டேன்; ஆனால் சிறந்ததொரு தொண்டுக்காக என்னை அழித்துக் கொள்வதில் என்ன தவறு?'' என்றார் அவர்.

அறுபதாண்டைத் தாண்டிவிட்டார் வால்டயர். எனினும் வாழ்விற் சலிப்பென்பது அவர் காணாப்பொருள். ''ஆண்டு முதிர முதிர, உழைப்பு எனக்கு இன்றியமையாததாகவே உணர்கின்றேன்... உழைப்பே பேரின்பம்; கடந்த நாட்களின் ஏமாற்றங்களை உழைப்பே நிறைவு செய்கின்றது'' என்றார்.

பெர்னே மாளிகையில் வால்டயர் வாழ்ந்த காலமே அவர் வாழ்க்கையின் பொற்காலம் எனலாம். அங்குத்தான் அவர்தம் விடுதலையுணர்வு பெருக்கெடுத்துப் பொங்கியது. மாந்தரின் விடுதலைக்காக அவர் தம் சொல் வன்மையானும் எழுத்துவன்மையானும் போராடினார். எண்ணிறந்த துண்டு வெளியீடுகள், மன்னர்களின் கொடுங்கோன்மையைக் கண்டித்தும், மக்களின் உரிமைக்கு வீறுகொண்டு முழங்கியும் அம்மாளிகையினின்று புறப்பட்டன; தடைசெய்யப்பட்டன சில; கொளுத்தப்பட்டன சில; பறிக்கப்பட்டன சில; ஆயினும் அவையெல்லாம் மக்களாலும் அறிஞராலும் வரவேற்கப்பெற்றுப் படிக்கப் பெற்று வியக்கப் பெற்றபின்பே அந்நிலை எய்தினவாம். வால்டயர் தலைசிறந்த பகுத்தறிவு வாணராக மாறினார். இறைமையுண்மையினை ஏற்

றுக் கொண்டு, கத்தோலிக்கராகவே இருந்தபோதிலும் வால்டயர் சமயவாணரையும் அவர்தம் கழகங்களையும் மடங்களையும் குறைகண்டவிடத்துத் தயங்காமற் சாடினுர். சமயத்தின் மூட நம்பிக்கைகளைத் தகர்த்து எறிந்தார். கிறித்துவரின் மறை நூலில் உள்ள பிழைகளையும் பொய்புரட்டுகளையும் அஞ்சாமல் எடுத்துக் காட்டினுர்.

புடவியெழுாங்கும் வாழ்வமைதியும் வழுவின்றி இயங்குதல் கொண்டு, அதனை இயக்குவிக்கும் இறைப்பேராற்றலை வால்டயர் உணர்ந்தார். ஆனுல் இறைவனையும் சமயத்தையும் உலகப் பொது நோக்கில் காணுதல் தவிர்த்துத் தனித்தனிக் கடவுள் களைக் காட்டிப் பூசலிடும் உலகின் மடமையை அவர் சிறிதும் ஒப்புக் கொள்ளவில்லை. அவற்றை எள்ளி நகையாடினுர்.

அவர் எழுதிய நூற்கள் மிகப்பல. சேரே, என் ரி யே டு என்பனபற்றி முன்பு கூறினேம். கான்டிடே, அறநெறிக் கட்டுரைகள், மெய்விளக்க அகரமுதலி (Philosophical Dictionary) போன்ற நூற்களும் இன்னும் எண்ணற்ற கதை நூற்களும் எழுதிக் குவித்தார். இவற்றுள் 'கான்டிடே' எனுங் கதை மிகவும் சிறந்தது. இன்னும் அனைவராலும் விரும்பிப் படிக்கப் பெறுகின்றது.

எண்பதாம் அகவை எய்தினுர் வால்டயர். அப்போதும் தீமையை எதிர்த்து நன்மைக்காகப் போராடும் அவர்தம் ஊக்கம் அவரைவிட்டு மறைந்திலது. அக்கால அரசியலாரும் சமய வாணரும் மக்களை அடிமைகளாக்கி, அவர்தம் உரிமையை மிதித்து, அவர்தம் குருதிச்சேற்றில் தம் இன்பவாழ்வை அமைத்துக் கொண்டிருந்தனர். அரசரையும் அரசுசார்ந்த பெருமக்களையும் நச்சி வாழ்வோர் பலராயினர். இவ்வாறு போலிமையும் பொய்மையும் பெருகிய காலத்தே வால்டயர் போன்ற உண்மையாளர்க்கு வேலையில்லாமற் போகுமா?

சமயவெறிபிடித்த மாந்தர், தம் சமயம் சிறிதே குறைகூறப் பெறுமாயினும், உண்மையினை ஆய்ந்துபாராமல் குறைகூறியாரை ஒறுப்பதைக் குறியாக் கொண்டனர். கத்தோலிக்கர் எதிர்ப்புச் சமயத்தாரின்மேல் பெருங்காழ்ப்பு வைத்திருந்தனர். தங்கட்கு விருப்பமில்லாதார்மேல் பொய்க் குற்றம் சாட்டி, அரசர், சமயத்தலைவர் வெறுப்பை அவர்மேல்திருப்பி அவரை அழித்துவிட்ட நிகழ்ச்சிகள் அக்காலத்தே பலப்பல. உருளையில் அரைத்தும், நெருப்பிலிட்டும், கழுத்தை வெட்டியும், உடல் உறுப்புக் குறைத்தும் தீதிலார் பலர் கொல்லப்பட்டனர். இந்நிலை கண்டுகொதித்தெழுந்தார் வால்டயர். தவருன வழக்கு முடிபுகள் கூறப்பட்ட போது உண்மையாளரைக் காத்தற்குப் பொறுப்பேற்

றுப் பலரைச் சட்டத்தின் கொடும்பிடிப்பினின்றும் தப்புவித்திருக்கின்றார். சிலரைத் தப்புவிக்க முடியாமற் போயினும் விடாது போராடி, அவர்கள் கொல்லப்பட்டபின்பும், அவர்கள் மேலுள்ள கறையினைப் பழியை அகற்றி மெய்ம்மையை நிலைநாட்டியிருக்கின்றார்.

இவ்வாறு எண்பத்து மூன்றாண்டு கடந்த வால்டயர் அனைவராலும் முதுபெருங்கிழவராக மதிக்கப் பெற்றார். ஐரோப்பா முழுவதும் அவரை அறிந்து போற்றியது. வால்டயரும் தம் எள்ளல் ஏசல்களைத் தவிர்த்துச் சிறந்த அறிவுரையாளராகத் திகழ்ந்தார். மன்னரும் அமைச்சரும் மீண்டும் வால்டயரின் தொடர்பை விழைந்தனர். செருமானிய அரசரின் நட்பு மீண்டும் கிடைத்தது. அரசரும் சிற்றரசரும், அவர்தம் மாளிகைக்கே வந்து அவரைக் கண்டு அளவளாவிச் சென்றனர். மெலிந்த உடலும் நலிந்த தோற்றமும் பெற்றபோதிலும் வால்டயர் உணர்வால் இளைஞராகத் திகழ்ந்தார்; சுறுசுறுப்பும் உழைப்பும் சற்றும் மாறவில்லை. ஏதாவது எழுதிக் கொண்டேயிருந்தார். 'ஐரீனி' என்ற நாடகம் அக்காலத்தே உருவாகியது தான்.

இறுதி நாட்கள் நெருங்கிக் கொண்டுவரவே, வால்டயர் தாம் பிறந்த நகரான பாரிசுக்குச் செல்ல விழைந்தார் எனினும் தம்மை எதிர்க்கவும் எள்ளவும் சமய மூடநம்பிக்கையாளரும், பழமைவெறியரும் அங்கு மிகுதியே என்றும் அஞ்சினார். ஆயினும், அவர்க்குப் பொதுமக்களின் மதிப்பும் அன்பும் இருப்பதை உணர்த்தி, நண்பர்கள் அவரைப் பாரிசுக்கு அழைத்துச் சென்றனர். பழைய அரசரும், பழைய அமைச்சர்களும் அப்போ தங்கில்லை புதிய மன்னர் பதினாறும் உலூயி பொதுமக்கள் வால்டயர் பால் வைத்திருக்கும் அன்பறிந்து, அவர்தம் வரவைத் தடை செய்தாரில்லை.

பேரரசர்க்கும் கிட்டாத வரவேற்பு வால்டயருக்குக் கிட்டியது. பாராட்டு வெள்ளத்தில் வால்டயர் மிதந்தார் எனலாம். அறிஞர் பலர் ஒவ்வொருவராக வந்து பாராட்டிச் சென்றனர். அங்குச்சென்றும் வால்டயர் வாளாவிருந்தாரில்லை. தமது ஐரீனி நாடகத்தை ஆங்கோர் நாடக மன்றத்தார்பால் அளித்திருந்தார் அந்நாடகத்தைத் திருத்தியமைக்கும் வேலையில் ஈடுபட்டார்.

உடல்நலம் குன்றியது. குருதி கக்கலாயினார். சாவு நெருங்குவதை அறிந்து, சமயமுறைப்படி தீவினை மன்னிப்புக்கு நண்பர்கள் ஒரு சமய குரவரை ஏற்பாடு செய்யலாயினர். அவர் வால்டயரின் சமயக்கருத்துக்களைத் தெளிவுபடுத்திய பின்பே தாம் இணங்குவதாகக் கூறினார். வால்டயர் அவரை மதித்

தாரில்லை...... விரட்டிவிட்டார். ஐரீனி நாடக ஒத்திகையில் ஈடுபட்டார். எனினும் முதல் நாள் அந் நாடகத்தைக் காணக் கூடாது போயிற்று. உடல் நலம் சற்றுத் திருந்திய பின் ஆறுவது நாள் நாடக மன்றம் சென்றார். அந்நாடகம் மக்களாற் பெரிதும் பாராட்டப்பெற்றது. நாடகமேடையிலேயே வால்டய ரின் கண்ணெதிராகவே அவர்தம் கற்படிமம் ஒன்று நிலைநாட்டப் பெற்றது. பொதுமக்கள் வாழ்த்தொலி விண்ணை இடிக்க, முது பெருங் கிழவராய் வால்டயர் உள நிறைவுடன் நாடக மேடையி னின்று விடுதிக்கு அழைத்துவரப்பட்டார். மக்கள் அவரைத் தோளில் தூக்கிவந்தனர்.

ஓரிரு கிழமைகளே எஞ்சின; அப்போதும் இடைவிடாது எழுதிக் கொண்டேயிருந்தார். தாம் உயிர் வாழ்வது சில நாட் களே என்றும், மக்கள் தனக்களித்த மதிப்புக்குத் தம்மைத்தகுதி யாக்கிக் கொள்ளத் தாம் இன்னும் உழைக்க வேண்டும் என்றும் கூறினார். ஒருநாட் காய்ச்சல் கண்டது. வலியும் நோயும் மிகுந் தன. இயற்கை அழைத்துக் கொண்டது. அவரது உடல் கல்லறைத் தோட்டத்திற் புதைக்கப்பெறவில்லை. சமய குரவர் எதிர்ப்பால். பாரிசுக்கு வெளியே அவர்தம் மருமகன் வாழ்ந்த செலியரி மடத்திற் புதைக்கப்பெற்றது அவரது நெஞ்சாங்குலை பாரிசு நூல் நிலையத்தில் காப்பிட்டு வைக்கப்பட்டது. இன்றும் அஃது அங்கேயே உள்ளது. ●

* அனைத்தும் அரிய அறிவியல் நூல்கள்!
* அனைவரும் படிக்க வேண்டியவை!
* எல்லாம் தமிழின் புதிய துறைகள் பற்றியவை!

அ. கி. மூர்த்தியின்

வான் வெளி ஆராய்ச்சி	உரு.	7-50
வான் வெளி வீரர்கள்	,,	1-30
ஏவுகணை நூல்	,,	2-40
இந்தியப் பெருங்கடல்	,,	0-60
அட்லாண்டிக் பெருங்கடல்	,,	0-60
ஆர்க்டிக் பெருங்கடல்	,,	0-60
அண்டார்க்டிக் பெருங்கடல்	,,	0-60
பசிபிக் பெருங்கடல்	,,	0-60

○ எல்லா விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.
○ அதிகம் விற்பனைசெய்ய முன்வருவோருக்குத் தனிக் கழிவுச் சலுகையுண்டு.

பிறவிளக்கங்கட்கு :

அல்லிப் பதிப்பகம்.
அஞ்சல்பெட்டி எண். 52. அய்யன் கடைத்தெரு
தஞ்சாவூர்.

பாட்டரங்கம்

[பாட்டுணர்வு இக்கால் வெள்ளம்போல் பெருக்கெடுத்து வருகின்றது என்பதற்கு, நமக்கு வந்து குவிகின்ற பாடல்களே சான்றாகும். கருத்துச் செப்பமும், யாப்பு ஒழுங்கும் அமைய அவை திருத்தப்பெறுமானால், பட்டைதீர்ந்த ஒளி மணிபோல் அவை சுடர்விடக் கூடியவை. இப்பகுதியை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள அன்பர்களை வேண்டுவதுடன், சொல், கருத்து, யாப்பு இவற்றில் கருத்துச் செலுத்தி உய்ந்து வருமாறும் வாழ்த்துகின்றோம் - ஆர்.]

இயற்கை:

மந்திகள் தம் இணைமருவி மாந்தோப்பின்
நிழலமர்ந்து மரக்கிளைமேல்
குந்திவிளை யாடுதலைக் கண்டு தென்றல்
இனிதசையும்; குயில்பண் பாடும்.
வெந்தழலைச் சிந்திநின்ற வெய்யவனும்
தெறல் தணியும்; சிவந்த வண்ண
அந்திவரும் மலைமுகட்டை அணுகி வரும்
மஞ்சுகொஞ்சும்; அழகு மிஞ்சும்.

"விண்ணிடித்தும்!" என்றுசெலும் வெண்முகிலைக்
கருமுகில்கள் விரைந் திடிக்கும்;
பெண்ணிடைக்குத் தன்னிடையால் வேறுபடா
மின்னல் ஒளி பிடிக்கும்! பேசுங்
கண்சிமிட்டிக் காதலர்தம் கருத்தழித்து
மறைபவர் போல் கரக்கு மின்னல்
கண்டுமுகில் அன்பிலள்கொல் எனக்கென்று
கண் வடிக்கும் மழைப்பெருக்கம்!

— மு. மகிழரசன், பெல்காம்.

கண்ணாடி எடுத்ததுபோல் குளத்து நன்னீர்!
கண்கவர அழகனைத்தும் புனைந்த பின்னே
பெண்ணாள் தன் முகம்பார்த்தல் போலே நீரில்
பிறங்கொளிகொள் தாமரை தன் நிழலை நோக்கும்.
கண்ணெழிலும், கழுத்தழகும் காதின்சீரும்
காண்பதற்குத் திரும்புதல்போல் காற்றில் ஆடும்;
ஒண்ணிறங் கொண் டியற்கை செயும் ஓவியம் போல்
உலகத்தில், புனைந்தளிக்க யாரே வல்லார்?

– அறிவொளி, சிக்கில்.

காதல்:

சோலை இனிப்பதுமேன்; சூழ்துன்பம் நீங்குவதேன்?
பாலை நிலங்குளிரும் பான்மையுமேன்? – மாலை
வருவதுமேன்? உள்ளம் மகிழ்வதுமேன்? இன்பம்
தரவருதல் நீ, என்ப தால்!

– சீ. இளஞ்சேரன், முதுகுன்றம்.

மாலைவண்ணத் துகில் உடுத்து
மகிழச் செய்யும் மங்கை – நல்ல
கோல மயில் போற் குனிந்து
கோல மிடும் நங்கை.

கன்னற் பாகில் தோய்த்த மொழி
கனியப் பேசும் கன்னி – இரு
கன்னங் கரிய விழியனுப்பிக்
கவரும் அழகுப் பொன்னி.

– ந. முத்தமிழன், கள்ளக்குறிச்சி.

துள்ளுகின்ற புள்ளிமான் சாயல் பெற்றாய்;
துடியிடையே அணிகலனாய் நாணம் பெற்றாய்;
புள்ளிமயில் தோற்குமுயர் ஆடல் பெற்றாய்;
புன்னகையால் எனைமயக்க எங்கே கற்றாய்?

குயிலைப்போல் இசைபாடக் குரலைப் பெற்றாய்;
குமரிநீ, செவ்வல்லிக் கைகள் பெற்றாய்;
அயில்வேல்போல் கண்ணிரண்டும் அமையப் பெற்றாய்;
அருந்தமிழை அழகுற நீ எங்கே கற்றாய்?

– காரை. ந. பூமிநாதன், நல்லூர்.

நீலநிறக் கடல்கண்டால், வானம் கண்டால்
நினைவெல்லாம் உன்மேலே சென்று பாயும்;
மாலையொளி வீசிப்பின் மறைதல் கண்டால்;
மங்காத உன் எழிலை மனம் நினைக்கும்;

கோலநிறை முழுநிலவைக் கண்டால், உன்றன்
 கொஞ்சுமுகம் நகைபூத்துக் குளிர்தல் உண்டே!
சோலைக்குள் பாடுகுயில் இசை மடுத்தால்
 சோர்வகற்றும் உன்மொழிதான் செவி நிரம்பும்!

– வியாசை. சரவணக்குமார்.

குடியை உயரச் செய்பவளை – நல்ல
 குடும்பம் நடத்தத் தெரிந்தவளை
அடித்த கைக்குள் அணைபவளை – என்
 அகத்துறு நோய்க்கு மருந்தினளை
நொடியும் பிரியா திருப்பவளை – என்துயர்
 நோக்கிக் கண்ணீர் வடிப்பவளை
மிடியன் பொருட்குவை தேடுதல்போல் – புவி
 மீதெலாம் தேடியும் கிடைக்கவில்லை!

– இராம. இராமநாதன்.

மருந்தருந்த நோயாளி மறந்துவிடின் இந்த
 மாநிலத்தில் வாழ்வானோ? பசியுற்றோன் நல்ல
விருந்தருந்த மறுப்பானோ? கண்வேண்டா மென்று
 விளம்புகின்ற குருடனுமிவ் வையகத்தில் உண்டோ?
பருந்தொருபால் ஊன்துண்டம் பார்த்துவிடில் கொத்திப்
 பறந்தெடுத்துப் போவதற்கே பாராதோ காலம்?
அருந்துணையே, அதனைப்போல் யெண்ணினை, நீ என்றால்
 அயர்வேனோ? உனைமணக்கப் பார்க்கின்றேன் காலம்!

– தமிழவேள், புதுவை.

தமிழுணர்வு:

திரைகடலைத் தாண்டி எங்குச் சென்றிட்டாலும்
 திரிந்து பல நிலைமாற்றம் பெற்றிட்டாலும்
குறைமிகுந்து நல்வாழ்வைக் குலைத்திட்டாலும்
 குடித்தனத்தில் நீ அமிழ்ந்து குனிவுற்றாலும்,
பொறையுனது பேருளத்தை அழுத்தி னாலும்
 பொல்லாத கூற்றுன்னைப் பிடித்திட் டாலும்
மறைவாக நீ வாழ நேர்ந்திட்டாலும்
 மாநிலத்தில், தமிழா, உன் தமிழைச் சாற்று!

– கல்லூர் மணியம், மலேயா.

பன்மொழிக்கும் முதற்பிறப்பே, பாண்டி மன்னர்
 பாராட்ட வளர்ந்தவளே, புலவர் நெஞ்சத்
தென்மொழியே, தொன்மொழியே, தமிழே, தாயே,
 தெளிந்தூறும் தேனூற்றுப் பாப்பெருக்கே

பொன்மொழியே, நன்மொழியே, புகழ்விளக்கே,
பொங்கிவரும் நல்லுணர்வே, அன்பின் ஊற்றே
ஒண் விழியே, மொழியறிஞர் கருத்துக் கொத்த
உலகத்துப் பொன்விளக்கே, வாழி வாழி!

– தமிழரசன், சமுவை.

தண்டமிழ்க்குத் தீங்கியற்றி வாழ்வோ ரெல்லாம்
''தமிழறிஞர்'' எனப்பெயர்கொண் டுயர்ந்திட்டாலும்
விண்டிடுவீர் அவர்நம்மின் வேற்றூர் என்றே!
விளக்கொளிர்ந்திங் கொளிசெய்தல் நன்றே; ஆனால்
மண்டி, எரி கொளுவி இலம் தனை எரித்தால்
மனமகிழ்ந்து கொள்வோமா? அவிப்போ மன்றே!
கொண்ட தம திட வலிவால் தமிழழிக்கும்
கொடியவர்க்கண் டொடுக்கமுறல் ஏனோ சொல்வீர்?

– துரை. மாலிறையன், புதுவை.

வந்தவர்க்குப் பொருள்தந்தோம், இடந்தந்தோம்
வாழவைக்கும் எண்ணம் கொண்டோம்
நந்தமர்க்கோ என் செய்தோம்? நலமிழந்தோம்!
நண்ணியவர் வாழ்வு கண்டார்
வெந்தழிந்தோம் கண்மூடி வீழ்ந்ததனால்!
இனியேனும் விழிப்புப் பெற்றே
வந்தணைந்தோர் இடர்க்கெல்லாம் வளையாமல்
தமிழ்ப்பேணி வாழ்ந்தி ருப்போம்.

முனைமுகத்துக் கஞ்சாமல், முழுநிலவின்
முகங்காட்டி முத்தம் ஈவாள்
அனைமுகத்து நீரொழிக்க ஆர்த்திடுவோம்!
அணிவகுப்பின் முகத்து நின்று,
தனை நினையோம்; பெற்ற தமிழ் மொழிநினைவோம்
தாய்நாட்டின் வாழ்வு காண
நமையழிக்கும் மாற்றாரின் நடையழியத்
தோள்துடித்துச் செல்வோ மின்றே!

– இரா. தமிழ்க்கோவன், சென்னை-5.

குறிஞ்சிமுல்லை, மருதநெய்தல் பண்டே கண்டு
கூறுபுவிக் கொளிவிளக்காய் மிளிர்ந்தோன், வாழ்வை
உறிஞ்சுகின்ற வறுமையினால், ''கள்ளத் தோணி''
உந்தி மிக இழிவுற்றான் வேற்றுநாட்டில்;
இறைஞ்சுகின்றான், இரக்கின்றான், ''நாடே இல்லான்''
எனும் பட்டம் சுமக்கின்றான்! ''என்ன செய்வோம்!
இறந்திடுதல் மேலெ''ன்பார். சீச்சீ யார்க்கிங்(கு)
இறப்பது நாம்? உரிமைக்குப் போர் தொடுப்போம்!

– இரா. இளவரசு எம். ஏ.

இமய முகட்டில் கொடி பொறித்தே
இறவாப் புகழைப் பெற்ருேமாம்;
இன்றுநம் மொழியின் நிலேயென்ன?
இன்னும் உறங்கிப் பயனில்லே!
நமையே நத்திப் பிழைப்பவரும்
நம்முடன் பிறந்த 'வீடண'ரும்
நந்தமிழ் கெடுக்க முனேகின்ருர்;
நாமதைத் தடுப்போம்; எழுந்திடடா!

– இரா. சுந்தரராசு, மதுரை–2.

இந்தி எதிர்ப்பு.

பாயல் அகன்றெழுமின்! பண்டைப் பெருவாழ்வின்
சாயல் புதுக்கிடுமின் சால்பழிக்கும்–தீய இந்தி
நோயை விரட்டுமின்! நூறிடுமின், தாய்தமிழ்க்கே
தூயநிலே காணத் துணிந்து!

பின்றை வருமக்கள் பேசிப் பழித்திடுவார்;
இன்றிந்த இந்திக் கிடமளித்தால்–தென்றமிழீர்
நெஞ்சை நிமிர்த்துமின்; நேர்வழியே நம்வழியால்,
அஞ்சாது போரிடுவோம் ஆம்!

– நாகை. இளவழகன், திருச்சி.

தூங்கி வாழ்ந்து பொழுதழிக்கும்
'தூங்கு மூஞ்சித்' தமிழரே!
தாங்கி நின்ற புகழ்ச்சுமைகள்
தாழவிட்டுத் துயில் கிறீர்!

ஓங்கு நந்தாய் மொழியழிக்க
உதவா இந்தி வருகிருள்;
ஏங்கி நிற்க நேரமில்லே
எதிர்ந்து சீறிக் கிளம்புவீர்!

– த. மாரிமுத்து அண்ணுமலேநகர்.

பன்மலர்ப் பொய்கையின்பம் பருகிடும் வண்டையொத்து
நன்மலர்த் தமிழ்த்தேன் உண்டு நலமுடன் வாழ்ந்த நந்தம்
இன்னுயிர் கவர வந்த இழிமொழி நஞ்சை நாடா(து)
என்னுயிர் ஈந்தும் காப்பேன் தமிழைஎன் றுரைப்பாய்நெஞ்சே!

– ஞா. அந்தோனிராசு, விரியூர்.

குதித்தெழு தமிழா உன்றன் குன்றெனும் தோளேத்தட்டி!
கொதித்திடும் உள்ளத்தின்செங் குருதியை முகத்திற் காட்டி
எதிர்த்திடும் இந்தி தன்னே இடர்தரும் நச்சுப் பாம்பை
அதிர்த்திட எழுந்து வாராய்! ஆருயிர்த் தமிழைக் காப்போம்!

– பொருளரசன், புதுவை.

இத்தரையில் தமிழ்க்கில்லை ஈடு-என
இறுமாந்த குரலெடுத்துப் பாடு.
பித்தியர்நாம் தமிழ்க்கென்றே கூறு-நமைப்
பிழைப்பார்மேல் படைகொண்டு சீறு!

செந்தமிழ்க்குக் காப்பளியா வாழ்வு-நமைச்
சிதைத்தொழித்துச் சேர்த்திடுமே தாழ்வு.
நந்தமிழர் கையெடுத்தார் வாள்தான்-இனி
நம்பகைவர் சூழ்ச்சியெலாம் தூள்தான்!

- தேனிசையன், புதுவை-3.

வாழ்வதற்கு வகைவேண்டும்; ஆனல் அந்த
வகைதனிலே படிறுபல குவிய வேண்டாம்.
மாள்வதற்கும் வகைவேண்டும்; ஆனற் கோழை
மாந்தரெனப் பெயர்வாங்கிச் சாதல் வேண்டாம்.
ஆள்வதற்கு வகைவேண்டும்; ஆனல் ஆட்சி
அழுகண்ணீர்க் காட்சியிலே திகழ வேண்டாம்.
சூழ் மொழிக்கும் வகைவேண்டும் ஆனல் இந்தி
சூழ்ச்சியினல் தமிழகத்தில் திணித்தல் வேண்டாம்.

– பசும்பொற்கிழார், சமயநல்லூர்.

மொழிகொண்டு, பறைமுழங்கித் தமிழர் மாண்பு
முறுவலித்து வளங்கொழித்த காலந் தொட்டு
வழிமுறைகள் பலகண்ட தமிழர் இந்நாள்
வடக்கரவர் சூழ்ச்சியினல் ஆண்மை குன்றிப்
பழிவந்து சேருவகை மானம் கெட்டார்;
பாழான இந்தியினைப் போற்றி நின்றர்.
வழிவிளக்கும் கல்வினிலும் இந்தி ஏற்றர்.
வளர்தமிழை மாளவிட்டும் வாழ்கின்றரே!

– ச. பன்னீர்ச்செல்வன்,
வடக்கு மேல்மாம்பட்டு.

பொது:

பூவில் மணம் வேண்டும்; பூவையர்க்கு நாண்வேண்டும்;
நாவில் திறம் வேண்டும்; நாமுயரத்-தேய்வில்
உறுதி உளம் வேண்டும்; உண்மைத் திறம்தேர்ந்(து)
அறுதியிடல் வேண்டுமே அன்பு!
வேண்டும் தமிழ்நெஞ்சம்; வேண்டும் கலையார்வம்;
வேண்டும் அளவறிந்த வேட்கையே-வேண்டும்
பொதுமைப் பொருளுடைமை; வேண்டும் அறிவுப்
புதுமை புகட்டும் இதழ்.

– தரங்கை பன்னீர்ச்செல்வன், வீசூர்.

பணிவினில் நல்லுயர் பண்பினில், அன்பாய்ப் பழகுவதில்
கனிவினில் உண்மைக் கடமையில் தாய்மொழி காக்களழும்
துணிவினில், தாய்மைத் துடிப்பினில், பெண்மைக் கிருக்குநிறை
அணியினில் என்றுந் தமிழ்நங்கை யார்க்குத் தனிச்சிறப்பே!

– நயினார்மண்டபம் அரங்கநாதன்.

உடலம் இயங்கிட ஓருயிர் வேண்டும்
உயிர்தான் உறைந்திட ஓருடல் வேண்டும்
உடலின் வளர்ச்சிக்கு நல்லுணு வேண்டும்
உயிர்,தன் ஆட்சிக்(கு) உயிர்வளி வேண்டும்
உடலின் பெருமைக் குயர் உளம் வேண்டும்
உள்ளமிங்(கு) உய்வுற உள்ளொளி வேண்டும்
உடல்போல் வியன்புவி இயங்கிடல் வேண்டும்
உடலுக் குயிர்போல் சான்றவர் வேண்டும்.

– இரா. கலைக்கோவன், சென்னை-10.

பருவத் தேபயிர் செய்யென ஔவைப்
பாட்டி உரைத்தாள்; பைந்தமிழ் நாட்டீர்,
திருவும் திறனும் தேர்ந்த தெளிவும்
உருவாய்க் கொள்மின் உயர்க வாழ்வில்
காலத் திற்குச் சிறகுக ளுண்டெனக்
கழறினர் ஆன்றோர்; கவனம் கொள்மின்;
அவரவர்க் குரிய கடமை பலவுள
அன்னவ ரவற்றைச் செம்மையிற் செய்க.
அடிமை தவிர்க; மடமை ஒழிக
இடர்களை நீக்கி இனிது வாழ்கவே!

– பெ. இராசசுந்தரம், திருவேற்காடு.

சொல்லும் பொருளும் சுவைமிக நிற்கும்நல்
வல்லான் வகுத்த வழியதுவாம்–பல்லினமும்
தத்தமதே என்றுரிமை தம்மகத்தே கொண்டெழுப்பும்
பத்தரை மாற்றுப் பசும்பொன்னும்–தித்திக்கும்
உண்மை அறிவும் ஒழுக்க நெறியதுவும்
பண்டை முதலுரைக்கும் பாப்பெருக்காம்!–
பெண்ணோடாண்
அன்பியைந் தோங்கி அறந்துய்க்க ஊக்குவிக்கும்
இன்பத் திருக்குறளே யாம்.

– திருவத்திபுரம் வீரா. விநாயகம்.

நாலடியாரின் ஆசிரியர் யார்?

தரங்கை – பன்னீர்ச்செல்வன்.

[சமண முனிவர்களா? இல்லை என்கின்றார் கட்டுரை ஆசிரியர். படித்துப் பாருங்கள். மறுப்பின் எழுதுங்கள்.]

''ஆலும் வேலும் பல்லுக் குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி'' என்பார்கள். நாலடியாரின் பெருமையையும், திருக்குறளின் சிறப்பையுங் காட்ட, இது நல்லதோர் சான்றாகும். ஈரடி கொண்ட குறளுக்கு விளக்கமாக அமைந்த பெருமை சான்றது நாலடி. இத்தகு சிறப்புடைய நாலடியாரை ஆக்கியோர், இஞ்ஞான்று வரை நம்பத்தகுந்த வண்ணம் யாரென்று அறுதியிடப் பெறவில்லை.

வரலாறென வழங்கப்படும் கதையின்படி, ''வடநாட்டிலே முன்னொரு காலத்தில் மிகப்பெரிய வற்கடம் ஒன்றுவந்து மக்களை வாட்டியது. அப்பொழுது அவண் வாழ்ந்து கொண்டிருந்த சமண முனிவர்கள் எண்ணாயிரம் பேர் பாண்டிய நாட்டைப் புகலடைந்தனர்.

''தமிழகம் போந்தவர்கள் தம் ஒட்டிய வயிற்றுக் குணவு தேடியதுடன் நில்லாது, தமிழமுதையுமுண்டு, தமிழ்ப் பேரறிஞராகவும் ஆயினர். வடநாட்டில் வற்கடம் நீங்கியதும் முனிவர்களைத் தாய்நாட்டுப் பற்று தலைதூக்கி அழைத்தது. ஆனால், அறிவார்ந்த நண்பர்களை இழக்கவிரும்பாத பாண்டிய மன்னன் அவர்கட்கு விடைதராது பன்னாட்கள் காலந் தாழ்த்தி வந்தான். எனினும், அச் சான்றோரின் தாயகப்பற்று பாண்டியனின் அன்புத் தளையை அறுத்தெறிந்து விட்டது. பாண்டியனுக்கும், தமிழுக்கும் தம் நன்றிமறவாமையைக் காட்ட, ஒவ்வொருவரும் ஒவ்வொரு வெண்பாவை எழுதி வைத்துவிட்டு யாரும் அறியாவண்ணம் மறைந்துவிட்டனர்.

''உண்மை யுணர்ந்த வேந்தன், உள்ளம் சோர்ந்தான். வருத்த மேலீட்டால் அவர்தம் ஏடுகளை வையையிலே வீசியெறிய ஆணையிட்டான். ஆற்றோட்டத்தின் விரைவையும் எதிர்த்து வந்தன, அவற்றில் நானூறு ஏடுகள். அவையே 'நாலடி நானூறு' எனத் தொகுக்கப்பட்டன.''

இது கதைதானேயன்றி வரலாறன்று என்பது வெள்ளிடைமலை. எங்ஙனமெனில், அனைவரும் உறங்கிய பின்னர் நடுயாமத்தில் அம்முனிவர் எண்ணாயிரம் பேரும் புறப்பட்டனராயினும், பொழுது விடிவதற்குள் ஏறத்தாழ இரண்டரை அல்லது

மூன்று காதம்தான் சென்றிருக்கக்கூடும். நாட்டின் பல பகுதிகளிலும் வேவுப்படை வைத்திருப்பதே ஆட்சித்திறன் ஆகும். மறைந்தனர் என்று கூறப்படுவது பாண்டியனின் ஆட்சித் திறத்திற்கே இழுக்கைத் தேடித் தருகின்றது.

இதையும்விட நம்ப இயலாதது,அவர்தம் பாக்களைப்பாண்டியன் வையையில் வீசி எறிந்தான் என்பதே! பாண்டியர் குலமே தம் ஆட்சியின் தலையாய கடனாகத் தமிழ்க் கழகங்களை நிறுவித் தமிழை வளர்த்து வருவதாகும். கடைக் கழகத்துக்கு முன் * தென்மதுரைத் தமிழ்க்கழகம் முதல் திருப்பரங்குன்றத்துத் தென்மதுரைத் தமிழ்க் கழகம் ஈறான ஒன்பது தமிழ்க் கழகங்களைக் கண்டது பாண்டியர் தலைமுறை! அவர்களின் வழிவந்த கடைக் கழகக் காலப் பாண்டியர்களில் ஒருவன், எண்ணாயிரம் ஓலைகளில் என்ன இருக்கிறது என்றுகூடப் பாராமல் எடுத்தெறியச் சொன்னான் என்பது 'பாண்டியன் கல்வியற்ற புல்லறிவாளனோ?' என்னும் ஐயத்தை எழுப்புகின்றது. கல்வியறிவற்றவனாயின் முன்பின்னறியாத வேற்றுப்புல மக்களை வரவேற்று, வாழ்வளித்து, அவர்களைத் தமிழில் சான்றோராகும் அளவுக்கு எங்ஙனம் புரந்திருப்பான்?

மேலும் வியப்பளிப்பது, எண்ணாயிரத்தில் நானூறுமட்டும் நீரோட்டத்தை எதிர்த்து வந்தன என்பதாகும். நாலடியாரின் காலம் கடைக்கழகம் அல்லது அதற்குப் பிற்பட்டது என்பதே ஆய்வாளரின் அறுதி! பழங் கதைக் காலத்ததாய் இருந்தால் ஒருவாறு இக்கூற்றை விட்டொழியலாம் கடைக் கழகக் காலத்தில் இப்படியும் ஒரு வியப்பான நிகழ்ச்சியா?

இத்தனை ஆய்வும் தேவையில்லை. ஏனெனில், 'வடிம்பலம்ப நின்ற பாண்டியன்' முதல் 'நம்பி நெடுஞ்செழியன்'வரை அதாவது தமிழகத்தில் களப்பிரர் ஆட்சி தோன்றும் வரை ஆண்ட பல பாண்டிய மன்னர்களின் ஆட்சியில் எண்ணாயிரம் பேர் வடநாட்டிலிருந்து வந்து தமிழகத்தில் தங்கியதற்குச் சான்றே இல்லை. இதுவரை கண்டவற்றிலிருந்து ஆசிரியர் பற்றிக் கூறப்படும் செய்தி வெறும் கற்பனையன்றி வரலாறன்று என்பது விளங்கும். இனி இது பலரால் பாடப்பெற்ற வெண்பாக்களின் தொகை நூல்தானா என்பதையும் பார்ப்போம்.

'செல்வம் நிலையாமை' முதல் 'காமம் நுதலியல்' வரை நாற்பது அதிகாரங்களாகப் பகுத்துப் 'பதுமனார்' என்னும் பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த புலவர் உரை செய்திருக்கிறார். ஒவ்வோர் அதிகாரமும் வரையறுக்கப்பட்ட பப்பத்துப்

* தமிழ்ச் சங்கங்களின் வரலாறு (அ. சிதம்பரனார்)

பாக்களால் நிரல்பட வகுக்கப்பட்டுள்ளது. பலரால் தனித் தனியே பாடப்பெற்றிருக்குமாயின், பிற்காலப் புலவர் ஒருவரால் பொருளமைதிக்கு ஏற்றவாறு தொகுக்கப்படும்போது, ஒவ்வொரு தலைப்பின் கீழும் சரியாகப் பத்துப் பாடல்கள் அமைந்திருந்தன என்பது ஏற்புடைத்தன்று. ஒன்று, ஒருவரே பாடி இருக்கவேண்டும்; அல்லது நானூற்றுக்கும் மேற்பட்ட பல பாடல்களில் பொறுக்கிப் பத்துப் பத்தாகத் தொகுத்தவை போக மிகுதியைக் கழித்திருக்க வேண்டும் பொதுவாக ஒருவரே பாடியது என்பது தான் பொருந்தும் அதற்கு, மேலும் சில மேற்கோள்களை நூலைக்கொண்டே காட்டலாம்

> ''தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று
> கண்ணில்புன் மாக்கள் கவற்ற விடுவேனோ?
> உண்ணீர்க் களைந்தக்கால் நுங்குசூன் றிட்டன்ன
> கண்ணீர்மை கண்டொழுகு வேன்?'' (நாலடி 44)

> ''முல்லை முகைமுறுவல் முத்தென் றிவைபிதற்றும்
> கல்லாப்புன் மாக்கள் கவற்ற விடுவேனோ
> எல்லாருங் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க
> பல்லென்பு கண்டொழுகுவேன்? (நாலடி 45)

இவ்விரு பாடல்களிலும் ''புன்மாக்கள் கவற்ற விடுவேனோ'' என்னுந் தொடரும் ''கண்டொழுகுவேன்'' என்னுந் தொடரும் ஆளப்பட்டிருக்கின்றன.

> ''துன்பம் பலநாள் உழந்தும், ஒருநாளை
> இன்பமே காமுறுவர், ஏழையார்;-இன்பம்
> இடைதெரிந்து இன்னாமை நோக்கி, மனையா
> றடைவொழிந்தார், ஆன்றமைந் தார்'' (நாலடி 54)

> ''துன்பமே மீதூரக் கண்டும், துறவுள்ளார்,
> இன்பமே காமுறுவர், ஏழையர்; - இன்பம்
> இசைதோறும் மற்றதன் இன்னாமை நோக்கிப்
> பசைதல் பரியாதாம் மேல்'' (நாலடி-60)

இவ்விரு பாடல்களிலும் இரண்டாமடியும், 'இன்னாமை நோக்கி' என்னுந் தொடரும் ஒன்றத் தொடுக்கப்பட்டுள்ளன.

> ''பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவும்
> கல்லாதார் வாழ்வ(து) அறிதிரேல் – கல்லாதார்
> சேதன மென்னுமச் சேறகத் தின்மையாற்
> கோதென்று கொள்ளாதாம் கூற்று.'' (நாலடி. (106)

> ''பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்(து)
> அல்லல் உழப்ப(து) அறிதிரேல், – தொல்சிறப்பின்
> நாவின் கிழத்தி உறைதலாற் சேராளே
> பூவின் கிழத்தி புலந்து.'' (நாலடி. 252)

இவ்விரு செய்யுட்களிலும் முதலடியின் மூன்று சீர்களும், இரண்டாமடியின் மூன்றுஞ் சீரும் ஒன்றேயன்றோ!

மேலும் ''மல்கு திரைய'' எனத் தொடங்கும் 263 - ஆம் செய்யுளின் உவமையும், ''எறிநீர்ப் பெருங்கடல்'' எனத் தொடங்கும் 275 - ஆம் செய்யுளின் உவமையும் ஏறத்தாழ ஒரே பொருளுடையனவாகும். இவ்வாறெல்லாம் ஒன்றுபட யாப்பது வெவ்வேறு புலவர்க்கு எவ்வாறு பொருந்தும்?

எனவே, திருக்குறளுக்கு இணையான அறிவுரைகளை வழங்க வல்ல அரிய நூலாகிய நாலடியாரின் ஆசிரியர் பற்றிக் கூறப்படும் வரலாறு, அப்பழுக்கற்ற கற்பனையே. பெயர் தெரியாத ஒரு பெரும் புலவரின் படைப்பே நாலடியார். மறைந்த மாணிக்கத்தைத் தேடிக் காண்பதை விட்டுவிட்டு, மாசுபடிந்த கூழாங்கல்லை மணியெனப் போற்றுவது போலப் புனைவன்றோ!

பழந்'தென்மொழித் தொகுப்பு'

பழந் தென்மொழித் தொகுப்பு முற்றும் தீர்ந்து போயிற்று என்று அறிக்கை விடுத்த பின்னும், சிலர் அதற்கெனப் பணம் விடுத்தவண்ணம் உள்ளனர். இனி அவ்வாறுவரும் பணத்தைத் திருப்பியனுப்ப நேரிடும் என்று அன்புடன் கூறிக் கொள்கின்றோம். வேறு அன்பர்கள் சிலர் தென்மொழித் தொகுப்பை மீண்டும் பதிப்பிக்கும்படி வேண்டியுள்ளனர். அதனை மீண்டும் பதிப்பது எவ்வாற்றானும் இயல்வதன்று என்பதையும், ஆனால் பழந் தென்மொழி வரிசையில் கையிருப்பு உள்ள இசைகளின் விளக்கம் அடுத்த இதழில் வெளியிடப் பெறும் என்றும், வேண்டியார் எழுதிப் பெறுக என்றும் அன்னார்க்கு அறிவித்துக் கொள்கின்றோம்.

அமைச்சர்.

உறுப்பினர்கட்கு

தென்மொழி அனுப்பப் பெறுகின்ற சுற்றுத்தாளின் முகவரிக்கு மேல் குறிப்பிடப் பெற்றிருக்கும் எண்களே அவரவர் உறுப்பினர் எண்கள். அவற்றுள் பு. உ. எண் 1 முதல் 243 வரை உள்ள அன்பர்கள் எல்லார்க்கும், 12 ஆம் ஓலை (தைமாதஇதழ்) முடிய உறுப்பினர் கட்டணம் முடிவுறுவதால், மேற்கொண்டு தென்மொழி தொடர்ந்து விரும்புவார், விரைவில் உருபா ஆறு அனுப்பிக் கையொப்பத்தைப் புதுப்பித்துக் கொள்ள அவ்வெண்களுக்குரியாரை வேண்டிக் கொள்கின்றோம். அமைச்சர்.

அயல்நாட்டில் அருந்தமிழர்

(புலவர். வி. பொ. பழனிவேலன் பி. ஓ. எல்.)

நீர்வளம், நிலவளம், பொழில் வளம் செறிந்த தமிழ் நாட்டில், தமிழ் நலனும் தமிழ் நாட்டு நலனும் பேணும் தமிழர் மிகச் சிலர் என்பது மிகையன்று. அன்றியும் தமிழ்ப்பற்றும் தமிழ் நாட்டுப்பற்றும் உள்ள தமிழர் விரல்விட்டு எண்ணுமளவுதாம் இருப்பர் என்பதில் ஐயமின்று. தமிழால் பிழைக்கின்றவர்கள் கூடத் தமிழ்க்குப்பிழைக்கின்றனர்; தமிழ் நாட்டில் பண்டுதொட்டு வாழ்ந்து தமிழ்நாட்டைத் தமது தாயகம் என்று கூறிக்கொள்கிற வர்கூட தமிழ் நாட்டிற்கு ஊறு செய்வோராய் மாறுகின்றனர்.

தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன் என்ற தமிழியக்கம் கண்டவர்களும், தமிழுக்கு அமிழ்தென்று பேர், அந்தத் தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று வெற்றி முழக்கஞ் செய்தவர்களும் கூடத் தம் கொள்கைகளைக் கைகழுவு கின்றனர் என்று அறிகின்றோம்; வருத்தமும் வியப்பும் நம்மை ஆட்கொள்ளுகின்றன.

இந்த மண்ணுலகில் மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் அற்ற வர் இத் தமிழ் நாட்டிலன்றி வேறு எந்த நாட்டிலும் இலர் என்பது கற்பனையன்று இத்தகையோர் ஈண்டு நாடோறும் பல்கி வருகின்றனர். தமிழுக்கு ஊறுவிளைத்து வேற்றுமொழிக்கு ஆக்கமும் ஊக்கமுந் தரும் வீணர் கூட்டம் விரைந்து முன்னேறு கின்றது. தமிழே தம் மூச்சும் பேச்சும் என்பவர்கள்கூட உண் மையான தமிழ்ப்பற்றுடையவர்களாக இருக்கக் காண்கின்றிலம். போலிகளே தமிழ் நாட்டில் பொலிவோடு திகழ்கின்றனர்; பொன்னுடை போர்த்திப் போற்றப் பெறுகின்றனர்; தமிழ் 'தாதா' என்றும், தமிழ்த் தொண்டரென்றும், செந்தமிழ்க் காவலர் என் றும், முத்தமிழ்க் காவலர் என்றும் தண்டமிழ்த் தலைவர் என்றும் வண்டமிழ் வள்ளலென்றும் பட்டஞ் சூட்டிப் பாராட்டப் பெறு கின்றனர்.

பன்னூறு தமிழ் நூல்கள் எழுதியும், பாடல்கள் பல புனைந் தும், கருத்தரங்கில் கலந்தும், பட்டி மன்றில் பங்கு கொண்டும் தம் பெயர் விளங்கப் பாடுபடுகின்றனர்; பெரும் பொருள் ஈட்டிப் பெருவாழ்வு வாழ்கின்றனர் தமிழ் வளர்ச்சிக்கேனும் தமிழர் முன்னேற்றத்திற்கேனும் எட்டுணை ஆக்கப்பணியும் ஆற்றியவர் களென்று அறைவதற்கில்லை. தூய உளம் படைத்த தொன்மை யோர்க்குத் தொல்லை பல தரும் தோன்றிகளாயுள்ளோர் பலர். தமிழ்த் தொண்டென்று கூறிக்கொண்டு தமிழுக்குக் குறைகள் பல கூட்டுகின்றனர். வாழ்வது தமிழால்; வளர்வது தமிழ்நாட்

டில்; என்றாலும் தமிழ்க்குத் தாழ்வுண்டாக்கும் பணியில் தவறுவ தில்லை. வடமொழிக் கடலினின்றுதான் தமிழ் தனது இலக்கிய வளத்தைப் பெருக்கிக்கொண்டது என்று கூறுவோரும், தமிழும் வடமொழியும் இறைவனின் இரு விழிகள் என்கின்றவர்களும், வடநாட்டிலிருந்துவந்த அகத்தியன்தான் தமிழ்மொழியை முதன் முதல் உண்டாக்கினான் என்று நவிலும் ஆய்விலிகளும் இத் தமிழ் நாட்டில் இல்லாமலில்லை.

தமிழ் தமது தாய் மொழியென்றும், தமிழ் நாடு தமது தாய் நாடு என்றும் இயம்புகின்றவர்கள் எற்றுக் குழைக்கின்றனர்? வடமொழி வளர்ச்சிக்கும், ''பாரத'' நாட்டுப் பண்பாட்டுக்கு மன்றோ? மொழி வரலாறு முற்றக்கல்லாதவரும், நாட்டு வரலாறு நன்குணராதாரும் மொழியையும் நாட்டையும் பற்றிப்பேசுவதும் எழுதுவதும் பேதைமையைப் பெரிதும் புலப்படுத்துவனவாகவே உள.

'தனித்தமிழ்' என்றால் சிலர்க்கு நெஞ்சில் தேள் கொட்டு வது போன்றுளது; 'தமிழ் நாடு' என்று சொன்னால் சிலர்க்குக் கட்செவி கடிப்பது போன்றுளது. ஆனால், இத்தகையோர்க்கு வாழ்வும் வளமும் அளிப்பன தமிழும் தமிழ்நாடுமேயாம். நன்றி மறந்த நல்லார் இவர். தமிழ்ப் பண்பாடென்ன வென்பதையறி யாதார்; நன்றி மறப்பது நன்றன்று; செய் நன்றி கொன்றார்க்கு உய்வில்லை என்ற பொய்யா மொழியைக் கற்றவரே இவர்.

தமிழ் நாட்டில் தமக்கு வாழ வழியில்லாதும், அயலார் வரு கையால் நெருக்குண்டும் கடல் கடந்து சென்ற தமிழர் கணக் கற்றோர். அவர்களுள் அயல் நாடுகட்குச் சென்று அங்கே பொருளீட்டிக்கொண்டு தாய் நாடு திரும்பியோர் பலர்; அங்ஙன மின்றி அந்நாடுகளிலே நிலையாகத் தங்கினவர்களும் பலர். இன் றும் தமிழர் பலர் திரைகடலோடிப் பொருளீட்டித் திரும்புகின்ற னர். இத்தகையோர், கடாரம், ஈழம், சாவகம், சிங்கை, தென் னாப்பிரிக்கா முதலிய நாடுகளுக்குச் செல்கின்றனர்; பொருளீட்டி மீள்கின்றனர். ஆங்கு அவர்கள் படும் அல்லல்கள் சொல்லுந் தரமன்று. ஆயினும், தாய்நாட்டுப் பற்றும், தாய்மொழிப் பற்றும் அவர்களை விட்டு அகல்வதில்லை. அவ்வாறு சென்று பிழைப்ப தற்கும் இன்று இடையூறு ஏற்பட்டுவிட்டது. நாட்டுப்பற்றுள்ள அயல் நாட்டினர் தம் நாட்டில் வாழும் பிற நாட்டினரை வெளி யேற்றச் சட்டம் செய்துவிட்டனர்; குடியுரிமைச் சட்டமும் கொண்டுவந்து விட்டனர்.

தங்கள் நாட்டு மக்கட்கே வேலை வாய்ப்புகள் இல்லாத போழ்து அயல் நாட்டினர்க்கு அலுவல்கள் அளிப்பது பொருத்த மாகாதென்றும், தம்நாட்டுச் செல்வம் அயலாரால் கடத்தப்

படுகின்றதென்றும் கருதி அவ்வாறு சட்ட மியற்றியுள்ளனர். உண்மையில் அவர்களது நாட்டுப் பற்றும், மாந்தர் பற்றும் மதிக்கற்பாலனவே.

தம் நாட்டில் வாழுங்கால் தமிழர்க்கு நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் சிறிதும் இருப்பதில்லை. கடல்கடந்து சென்று வேற்று நாட்டாருடன் விரவி வாழ மூற்பட்ட பின்னரே இவர் கட்கும் அவை தோன்றுகின்றன. தம் நாடு, தம்மொழி, தம் நாட்டவர் என்ற பற்றுள்ளம் அவர்களைப் பற்றத் தொடங்குகின் றது. ஏனெனின், அந்நாடுகளில் வாழும் மாந்தர் மிகுந்த மொழிப் பற்றும், நாட்டுப்பற்றும், இனப்பற்றும் உடையோராயிருப் பதைக் கண்கூடாகக் காண்கின்றனரன்றோ? பிறகுதான் தங்கள் தவற்றை யுணர்கின்ற வாய்ப்பு கிடைக்கின்றது. அயலாரைப் பார்த்தாவது அவர்கள் தம்மைத் திருத்திக்கொண்டுளர் என்பது குறித்து யாம் பெரிதும் மகிழ்கின்றோம்; பாராட்டுகின்றோம்.

ஆனால், இந்த நாட்டிலேயே பிறந்து வாழ்ந்து, பொருட் பெருக்கி இன்பம் நுகர்ந்து இனிதுறைவார்க்கு எட்டுணையும் தாய்மொழிப் பற்றும், தாய்நாட்டுப் பற்றும் இல்லையே யென்று எண்ணும்போழ்து நெஞ்சம் நெக்குருகின்றது ஒப்புரவாற்றும் உள்ளமும் இல்லாது கன்னெஞ்சராய், கள்வராய் விலங்கு வாழ்க்கை வாழ்கின்றார்களே என்று உன்னும்போழ்து உள்ளம் உருகுகின்றது என்னே! இன்றைய தமிழரின் இழிநிலை.

அயல் நாட்டில் வாழும் தமிழர் மொழிப்பற்று, நாட்டுப் பற்று, இனப்பற்று, ஒப்புரவு செய்யும் உயர் உள்ளம், நன்றி யறிதல், செம்மை, சீர்மை, சால்பு முதலான பண்புகள் வாய்க் கப்பெறுகின்றனர். பண்டைத் தமிழர் பண்பாடுகள் அவர் களிடமே குடிகொள்கின்றன; வெள்ளையுள்ளம் படைத்த நல் லோராக வாழ்கின்றனர்; பெரும்பொருளீட்டித் தாய்நாடு திரும்பு கின்றனர்; நல்வாழ்வு வாழ்கின்றனர் ஆனால், மீண்டும் ஈண்டுப் போந்தால் சார்ந்ததன் வண்ணமாகி விடுகின்றனர். இது சிறிது கவலற்குரித்தே. அவர்கள் அவ்வாறு மாறுவதற்குக் காரணம் இல்லாமலில்லை. நல்லவர்கள் இந்த நாட்டில் வாழ்க்கையில் நலிவடைகின்றனர்; பலரும் கரவுடையராகவும், பொய்யராயும், நன்றிகெட்டவராயும் இருக்கும் சூழ்நிலை அவர்களையும், ஆட் கொள்கின்றது. இல்லையேல் அவர்கள் நலமாக வாழமுடியாது. உறுதியான உரமும், நேர்மையும், நடுநிலையும், கொள்கையில் விடாப்பிடியும் உடைய சிலர் இன்று அடையும் அல்லல்கள் அவர்களை அச்சுறுத்தி விடுகின்றன. ''பழைய குருடி கதவைத் திறவடி,'' என்ற நிலைக்கு வந்துவிடுகின்றனர்.

இருப்பினும், அவர்களிற் சிலர் கொள்கை மறவர்களாகவே வாழ்வது உவகையளிக்கின்றது.

வெளிநாடுகளில் வாழ்கின்றவர்கட்கு (தமிழர்கட்கு) 'சாதி' வேறுபாடு, 'மத' வேறுபாடு, தீண்டாமை முதலியன இல்லாது போகின்றன; மாந்தனை மாந்தனுகவே மதிக்கும் பண்பு வளர்கிறது. எல்லாரும் ஒரு குலம்; எல்லாரும் ஓரினம்; எல்லாரும் ஒரு நிறை என்ற எண்ணம் ஏற்படுகின்றது. ஒருவர்க்கொருவர் வேளாண்மை செய்யும் விருப்பு உருப்பெறுகிறது. கரவு, பொய், களவு, கவருடல் ஒழிகின்றன; தாய் நாட்டுப்பற்றும், தாய் மொழிப்பற்றும் தலை தூக்கி நிற்கின்றன; உழைப்பும் ஊக்கமும் உயர்கின்றன. அயல்நாட்டில் வாழும் அருந் தமிழர்களே தமிழ்ப் பண்பாடுகட்கு எடுத்துக்காட்டாக இலங்குகின்றனர்.

தமிழ் நாட்டில் தனித் தமிழ்க்கு என்றே உழைக்கும் தாளிகை ஒன்றுமேயில்லாது தனித் தமிழ் ஆர்வமுள்ள பலரும் பலகால் துன்புற்றனர். கலப்பால் கன்னித் தமிழ் களங்கமுறுமே என்று கவன்றனர். அவர்களது குறைகளைக் களைந்து நிறைவு செய்யச் சேற்றில் செங்கழுநீர் பூத்ததுபோல் திருப்பாதிரிப்புலியூரில் தோன்றிற்று ''தென்மொழி.'' தென்மொழி தேன்மொழியாகித் 'தனித்தமிழ்' விடாயைத் தணித்துளது.

முன்னர் ஒருகால் தோன்றி ஓராண்டு நிறைவதன்முன் தமிழ்ப்பகைவர்களின் தளராவிடையூறால் தடைப்பட்டு நின்றது மீண்டும் மாசித்திங்கள் தொட்டு மதிதோறும் நிலா வீசித் தமிழ் மக்கள் கைகளில் தவழ்ந்து வருகின்றது. தனித் தமிழ்ப் பகைவர்கள் இன்றும் தம் கைவரிசைகளைக் காட்டாமலில்லை. என்ன இடர் நேரினும் ''தென்மொழி'' தன் ஈடும் எடுப்புமற்ற வீறு நடையில் ஒரு சிறிதும் பின்னடையாள் என்பது உறுதி. தனித் தமிழுள்ளங்கள் தாங்கும்; தளர விடா.

சிங்கை, மலாயா நாடுகளிலும், ஈழநாட்டுப் பகுதிகளிலும் உள்ள தமிழர்கள் தொகை ஒரு கோடிக்கும் குறைவே. தமிழ் நாட்டில் தமிழர் என்று பட்டியலில் பதிவு செய்யப் பெற்றுள்ளவர்கள் 3,36,50,917 என்று மக்கட்டொகைக் கண[illegible]டுகின்றது. சிங்கப்பூரில் வாழும் தமிழர்களில் ஐ[illegible]யர் 'தென்மொழி' அன்பர்கள் என்பதறிய அளவற்ற [illegible] பெருமிதமும் கொள்கின்ரும். திங்களுக்குத் திங்கள் [illegible]து மிகுதியாகத் தென்மொழி ஓலைகள் தேவை யென்று எழுதுவது ஒன்றே அவர்களது தனித்தமிழார்வத்திற்குத் தக்க சான்ருகும்.

மொழிப்பெரும் புலவர் தேவநேயப் பாவாணர் அவர்கள்பால் கொண்டுள்ள பெருமதிப்பும் பேரார்வமும் பகர்தல் பெரிதாம். ''தென்மொழி'' நிலைபெற்று வாழ வேண்டுமென்று அவர்கள் மேற்கொண்டுள்ள முயற்சி பெருவெற்றி பெறுமென்பதில் ஐயமில்லை. வாழ்க! அவர்தம் ஆள்வினை; வளர்க! அவர்தம் வளம்.

(தொடர்ச்சி 49-ஆம் பக்கம்)

முகவர் (விற்பனையாளர்) களுக்கு

முன் பணம் கட்டிய முகவர்களுக்கே இதழ் முன்கூட்டி ஒதுக்கி வைக்கப் பெறும். அல்லாதார் தங்கட்குத் தேவைப்படும் படிகட்கான கழிவு நீக்கிய விற்பனைத் தொகையை ஒவ்வொரு மாதமும் 5-ஆம் நாளைக்குள் அனுப்பினாலன்றி, அம்மாத இதழ் அனுப்புதற்குத் துளியும் வாய்ப்பில்லை அதற்குப் பின் வரும் பணம் அடுத்த மாத இதழ்க்கெனவே கொள்ளப் பெறும், முன் பணம் கட்டிய முகவர்கள், ஒவ்வொரு மாதமும் முன் மாதப் பட்டியல் தொகை முழுமையும் அனுப்பி வைத்தாலன்றி, அவர் கட்கு எக்காரணம் கொண்டும் நடை மாத இதழ் அனுப்பப் பெறமாட்டாது. நடைமாதம் முழுமையும் பட்டியல் பணம்அனுப் பாத முகவர்களின் முன்பணத் தொகையில் அம்மாதப் பட்டியல் பணம் சரிசெய்யப் பெறும். எஞ்சிய தொகைக்கான படிகள் கணக்கிடப் பெற்று அடுத்த மாத இதழ் அனுப்பி வைத்துக் கணக்கு முடிக்கப்பெறும். குறிப்பிட்ட படிகட்கான முன்பணம் செலுத்திய பின்னை, மேலும் மிகையான படிகள் தேவைப்படின் அவற்றிற்காகப் படி ஒன்றிற்கு ஓர் உருபா மேனி முன் கூட் டியே அனுப்பி வைத்தாலன்றி எக்காரணம் பற்றியும் அதிகப் படியான படிகள் அனுப்பப் பெரு.

'தென்மொழி' விளம்பரமில்லாத தனித்தமிழ் இதழ் ஆன மையாலும், உண்மைத் தமிழன்பரிலும் ஒரு சிலரே வாங்கிப் படிப்பர் என்று எதிர்பார்ப்பதாலும்,தேவையறிந்து கணக்கிட்டே அச்சிடப் பெறுவதாலும், முன்பே ஒரு முறை முகவர்களின் ஒத்துவராத் தன்மையால் இதழ் நின்றுபோய் மீண்டும் அரும் பெரும் முயற்சியுடன் வெளிவருவதாலும், ஈண்டும் பொருள், இயக்கம், துணை என்பன போன்ற நிலைப்புகளில் தளர்வு ஏற் பட்டுள்ளமையாலும், இவ்விதழ் இனியும் இடை நின்று போவது தமிழ்க்கும் தமிழர்க்கும் தமிழ் நாட்டிற்கும் பெரும் இழப்பு என்ப தாலும், தென்மொழி மேலாண்மை அமைப்பு முறைகளில் சில வகைக் கட்டுப்பாடுகளைக் கண்டிப்பாகக் கையாள வேண்டியுள் ளது. ஆதலின் உண்மையும், தமிழன்பும், பொதுத் தொண்டும் கருத்திற் கொண்ட அன்பர்களும் முகவர்களும் தமக்குள்ள தனிப்பட்ட இடர்ப்பாடுகளைப் பொருட்படுத்தாது, தென்மொழிக்கு இவ்வகையிலானும் துணை நிற்கப் பல்லாற்றானும் வேண்டிக் கொள்கின்றோம்

—அமைச்சர்.

எழுதுவார்க்கு!

தென்மொழிக்கு வரும் உருப்படிகளில் பாடல்களே மிகுந் துள்ளன. சிலர், பாடல்களில் எதுகைத் தொடையிலும் வட சொல்லமைத்து, மாற்றஞ் செய்ய முடியாதவாறு எழுதுகின்ற னர். எழுதுவார் கட்டுரை, பாடல்களைத் தனித்தமிழில் எழுதித் தக்காரிடம் காட்டிச் செப்பஞ் செய்து அனுப்ப வேண்டுகிறோம்.

ஆங்கில மொழியாக்கம்

The Evening.

The sun descends into the caverns of the darkening western hills
Devouring the day, the reddening rays his jaws
Through which he did light up earth and heaven in the morn.
Grim and swarthy the night doth speed along the sky
Like the dark complexion of the God of the deadly Battle-wheel.
The brilliant moon begins to climb the vault of blue
Subduing with her milky rays the spreading night
The lotuses their petals close–like eyes closed in slumber sweet
The trees, their branches drooping stand like worthy men who hang their heads when praised
And in the dark-green bushes the pearl white buds
As though the bushes' teeth are set in smile [unfold
The beetles hum the sweet music of the flute to match.
The birds their young-ones seek, the cows their calves at home.
And beasts of every kind their habitations reach.
The priests their evening rites perform.
With torch in hand the maidens fair begin to light their lamps.
Thus beaming bright the gorgeous evening walks
But stop! Did you call that Evening? Nay [in state.
It's the hour that persecutes us women folk.

(NEITHAL KALI-2)

மாலை

அகல் ஞாலம் விளக்குந்தன் பல்கதிர் வாயாகப்
பகல்நுங்கி யதுபோலப் படுசுடர் கல்சேர
இகன் மிகு நேமியான் நிறம்போல இருள்இவர
நிலவுக்காண் பதுபோல அணிமதி ஏர்தரக்
கண்பாயல் பெற்ற போல் கணைக்கால மலர்கூம்பத்
தம்புகழ் கேட்டார் போல் தலைசாய்த்து மரம் துஞ்ச
முறுவல்கொள் பவைபோல முகைஅவிழ்பு புதல்நந்தச்
சிறுவெதிர்ங் குழல்போலச் சுரும்பிமிர்ந் திம்மெனப்
பறவைதம் பார்ப்புள்ளக் கறவைதம் பதிவயின்
கன்றமர் விருப்பொடு மன்றுநிறை புகுதர
மாவதி சேர, மாலை வாள்கொள
அந்தி அந்தணர் எதிர்கொள அயர்ந்து
செந்தீச் செவ்வழல் தொடங்க வந்ததை
வாலிழை மகளிர் உயிர்பொதி அவிழ்க்கும்
காலை யாவ தறியார்
மாலை என்மனுர் மயங்கி யோரே! (நெய்தற்கலி-2)

மொழியாக்கம்: ம. இலெ. தங்கப்பா, எம். ஏ.

(46-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றரைக் கோடி தமிழர் வாழும் இத்தமிழ் நாட்டில் தென்மொழி யிதழ்கள் ஆயிரம் விற்பதே அரிதாயிருக்கின்றது. என்னே தமிழர்தம் தமிழ்ப்பற்று! திங்கள்தோறும் 'தென்மொழி' வெளியீட்டால் இருநூறு உருபா இழப்பு என்பதறிய, தமிழ் நாட்டின் நிலையை எண்ணி, தலைதாழ்க்க வேண்டியுளது. மூன்றரைக் கோடியில் மூன்றாயிரம்!பெயர்கூடத் தனித்தமிழார்வ முடையோர் இல்லையே? இப்போழ்து தென்மொழி வாங்கு வோரில் எத்துணையோர் உண்மையாகவே தனித்தமிழ்ப் பற்றோடு வாங்குவோர்? எத்துணையோர் பிறரது வற்புறுத்தலுக் காக வாங்குபவர் என்பது எண்ணிக் காணவேண்டியதொன்றே.

சிங்கைவாழ் தமிழர்கட்கிருக்கும் ஆர்வத்தில் பகுதியேனும் தமிழகம்வாழ் தமிழர்கட்கிருக்குமாயின், இன்று தென்மொழி ஓர் இலக்கம் தமிழர் இல்லங்களில் ஒளிரும் என்பதை யாரே மறுக்க வல்லார்? தமிழ்நாடே! உனக்கு என்றுதான் தமிழுணர்வு தோன்றுமோ? தாளாண்மை தலையெடுக்குமோ? ஒப்புரவு ஓங் குமோ? கண்ணோட்டம் காணுமோ? தமிழ்ப்பற்று தழைக்குமோ? ஒருகால் நீ தனிநாடானாற்றானோ? உனது தமிழ்ப்பற்று இருந்த வாறு என்னே! *

இலக்கணவியல்.

'இக்கு' என்பது ஒரு சாரியை ஆகுமா?

வித்துவான். மோ. இசரயேல், எம். ஏ; ஆர். பி. வி.,
சென்னைப் பல்கலைக் கழகம்–தமிழ் ஆய்வுத் துறை.

சாரியை:

தொல்காப்பியனார் புணர்ச்சிக்கண் மிகும் உறுப்பை எழுத்து சாரியை என இரு வகையாகப் பகுத்துள்ளனர். "எழுத்தே சாரியை ஆயிரு பண்பின்" (எழு. 112) என்னும் தொல்காப்பிய அடி இவ்வுண்மையினைத் தெளிவுபடுத்தி நிற்கின்றது. தொல்காப்பியனார் ஒன்பது சாரியைகளைக் (எழு. 119) குறிப்பிடுகின்றார். அவர் குறிப்பிடும் சாரியைகள் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் அடங்கப்பெற்றவை என்பது அவர் செய்திருக்கும் பாகுபாட்டால் தெளிவாகின்றது. தொல்காப்பிய உரையாசிரியர்களும் (தொல். எழு. 119. உரை) பவணந்தியாரும் (நன். 244) புணர்ச்சிக்கண் மிகும் எழுத்தையும் சாரியை என்னும் பெயரால் குறிக்கின்றனர். (எழுத்து என்பது உயிர் தனித்து அல்லது மெய் உயிர் இணைந்து உயிர்மெய்யாக வருவதனைக் குறிக்கின்றது.)

சாரியையின் தொழில்:

தொல்காப்பியனார் குறிப்பிடும் ஒன்பது சாரியைகளையும் ஆராயின் அவை வேற்றுமை உருபை ஏற்று வருங்கால் பொருளற்ற வெற்றுருபுகளாகவும் (emply morphs) சொற்றொடரின் இடைப்பட்டு வருங்கால் வேற்றுமைப் பொருள் (case signification) உடையனவாகவும் காணலாம். இவ்வுண்மையை பர். கால்டுவெல், பேராசிரியர். தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் 9 ஆகியோர் கண்டறிந்து, அவை பண்டைக்கால வேற்றுமை உருபுகளே என்று குறிப்பிட்டுள்ளனர்.

இக்குச் சாரியை–வடிவம்:

தொல்காப்பியனார் குறிப்பிடும் ஒன்பது சாரியைகளில் இக்கும் ஒன்று. இஃது இன்று நமக்குக் கிடைக்கப்பெறும் எந்த

9 a. Dr. Caldwell–Comparative Grammar of Dravidian Languages. page. 259–270

b. Prof T. P. Meenakshi Sundaram, – Indian Linguistics Turner Jubilee Volume II "The So-Called Inflexional Increments in Tamil" page. 125–130

இலக்கியத்திலும் முழு வடிவில் காணப்பெறவில்லை. தொல்காப்பியனாரும் தமது நூலில் இதனைக் குறிப்பிடும் இடம் தவிர வேறு எவ்விடத்திலும் முழுவடிவில் பயன்படுத்திற்றிலர். அவரே இக்கின் இகரம் இகர ஐகாரத்தின் முன்னர் கெட்டுவிடும் என்பதை

இக்கின் இகர இகரமுனை யற்றே (இல்லை) (எழு. 126)

ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும் (எழு. 127)

என்னும் நூற்பாக்களில் தெளிவுபடுத்தி உள்ளார். எனவே அவர் இக்கு > (க்)கு ஆகிவிடும் என்பதை ஒப்புக் கொள்கிறார்

இக்குச் சாரியை-வழங்கிய இடங்கள்:

இகர ஈற்றுச் சொற்களில் புணர்ச்சி கூறுங்கால் ''திங்கள் முன்வரின் இக்கே சாரியை'' (எழு. 248) என்று கூறுகிறார். பின்னர் ஐகாரவீற்றுச் சொற்களின் புணர்ச்சி கூறுங்கால் ''திங்களும் நாளும் முந்து கிளந் தன்ன'' (எழு. 286) என்கிறார். உரையாசிரியர்கள் இவற்றிற்கு,

ஆடிக்குக் கொண்டான் (எழு. 248)

சித்திரைக்குக் கொண்டான் (எழு 286)

என்னும் எடுத்துக் காட்டுகளைத் தருகின்றனர். ஈங்கு இக்கு இகர ஐகார வீற்றுத் திங்கட் பெயர்களுக்கும் வினைச் சொற்களுக்கும் இடையில் வருதல் கவனித்தற்குரியது.

இக்கு-வடிவம் ஏன்?

இச்சாரியைக்குத் தொல்காப்பியனார் இக்கு வடிவம் ஏன் அளித்தார்? அது-(க்)கு என்ற உருவிலேயே வழங்கும் என்றும் குறிப்பிட்டுவிட்டார். உண்மையை ஆயின் அதுவும் கு-வடிவே ஆகும்.–க்–வல்லினம் இரட்டிப்பதால் தோன்றுவதாகும். தொல்காப்பியனார் பெரும்பாலான மற்ற சாரியைகள் உயிரெழுத்துடன் தொடங்குவதால் இதனையும் அங்ஙனம் அமைக்கக் கருதினரோ என்ற ஐயப்பாடு தோன்றுவதுண்டு. மேலும்–கு–என்று கூறின் அஃது ஓர் எழுத்தாகிச் சாரியையின் பாற்படாது அவர் இலக்கணப்படி எழுத்தின் பாற்படும் ஆதலின் இக்கு என அமைத்தனர் போலும்.–க்கு என்று ஏன் அமைத்திலர்? தனி மெய் முதற்கொண்டு சொல் அமைதல் தமிழ் மொழி வழக்கில் இல்லை ஆதலின்.

இக்கின் தோற்றம்

1. ஆடிக்குக் கொண்டான் < ஆடி + கு+ கொண்டான்
2. ஆடி (ட் + இ) ஆட் + இக்கு + கொண்டான்
3. சித்திரைக்குக் கொண்டான் < சித்திரை + கு + கொண்டான்
4. சித்திரை (ர + இ) சித்திர + இக்கு + கொண்டான்

எடுத்துக் காட்டுகள் இரண்டும் நான்கும் இக்குச் சாரியைப் பிறழ் பிரிப்பின் (metanalysis) காரணமாகத் தோன்றி இருக்கலாம் என்பதைத் தெளிவுபடுத்தி நிற்கின்றன. திராவிட மொழியியல் அறிஞர் திரு. எல். வி. இராமசாமி இக்குச் சாரியைப் பிறழ் பிரிப்பினுல் தோன்றியதே என்று கருதுகின்ருர்.௦

ஐகார இறுதியை அ + இ எனப் பிரிக்கலாம். அகர இகரம் ஐகாரம் ஆகும் (எழு. 54) எனத் தொல்காப்பியனுரே குறிப்பிடுகின்ருர். அங்கும் இகரம் உள்ளது. எனவே ஆடி, சித்திரை முதலியவற்றின் இறுதி இகரம், அதனோடு இணையும் உறுப்பின் (element) பகுதியாகக் (part) கொள்ளப்பட்டுத் தவருகப் பிரிக்கப்பட்டிருக்கலாம் என்பது பொருத்தம் உடைத்தே.

சாரியையா? உருபா?

இந்த இடங்களில் தொல்காப்பியனுர் கூறும் இக்குச்சாரியை நான்காம் வேற்றுமையின் 'கு' உருபு என்பது தோன்றுகின்றது. தொல்காப்பியனுர் அதன் உருவையும் (form) மாற்றி அமைத்துச் சாரியை எனப்பெயரும் வழங்கிவிட்டனர் எனக் கருத இடம் உண்டு.

ஆடி + கு + கொண்டான் > ஆடிக்குக் கொண்டான்.

சித்திரை + கு + கொண்டான் > சித்திரைக்குக் கொண்டான்

தொல்காப்பியனுர்.

> வல்லெழுத்து முதலிய வேற்றுமை உருபிற்
> கொல்வழி யொற்றிடை மிகுதல் வேண்டும்
> (எழு. 115)

என்னும் நூற்பாவில் வல்லொற்று முதலாகவுடைய வேற்றுமை உருபிற்கு ஒற்று இடை மிகுதல் வேண்டும் என்கிருர். எனவே ஆடி + கு > ஆடிக்கு; சித்திரை + கு > சித்திரைக்கு என ஆகும்.

---

௦ L. V. Ramasamy Ayer - Collected papers Vol. I. (Published by the Annamalai Universty) page. 62.

உருபின் பொருள்:

எடுத்துக் காட்டுகளில் 'கு' காலப் பொருளில் வந்துள்ளது. தொல்காப்பியனார்,

> இதனது..
> காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும்
> அன்ன பிறவும் நான்க னுருபில்
> தொன்னெறி மரபின தோன்ற லாறே (சொல். 110)

என்னும் நூற்பாவில் நான்காம் வேற்றுமை உருபு 'கு' காலப் பொருளில் வரும் எனத் தெளிவு படுத்துகிறார். இதற்கு உரை யாசிரியர்கள் ''காலைக்கு வரும்'' என்னும் எடுத்துக் காட்டுக் கொடுக்கின்றனர். இதே சொற்றொடர் தற்காலத் தமிழில் ''காலை யில் வரும்'' என்று வழங்குகின்றமை கவனித்தற்குரித்தாகும். எனவே-கு-ஏழாம் வேற்றுமை உருபுக்கு மாறாக காலப்பொரு ளில் வழங்கிற்று எனலாம்.

உருபு மயக்கம்:

ஓர் உருபு இன்னோர் உ ரு பி ன் பொருளில் வழங்குவதை உருபு மயக்கம் என்பர் இலக்கண நூலார். கு-உருபு ஏழாம் வேற்றுமையின் காலமாகிய இடப்பொருளில் வழங்குவதைத் தொல்காப்பியனார் ஒப்புக் கொள்ளுகிறார் (சொல். 110). ஏழாம் வேற்றுமை காலத்தையும் குறித்து வரும் என்று தொல்காப்பியர் கூறுவது (சொல். 81) குறிப்பிடத்தக்கது. பிற்கால இலக்கண ஆசிரியர்கள் ஏழாம் வேற்றுமைக்குக் காலப் பொருளைக் குறிப் பிட்டிலர்.

திங்கள், நாள், பொழுது ஆகியவை எல்லாம் காலப் பெயர் களே. காலப் பொருளில் ஏழாம் வேற்றுமை உருபுக்கு மாறாக நான்காம் வேற்றுமை உருபு வழங்குவ்தை ஆசிரியரே (சொல். 110) ஒப்புக்கொண்டும், அவர் மேற்காட்டப்பட்ட எடுத்துக் காட்டுகளில் இக்குச் சாரியை அமைத்துக் காட்டுதல் தெளி வற்றதாய் உள்ளது.

> ஆடிக்கு = ஆடியில்
> சித்திரைக்கு = சித்திரையில்

இவற்றில் வந்துள்ளது கு-உருபே . இக்குச்சாரியை அன்று.

தொல்காப்பியனார் சிறப்பு:

தொல்காப்பியனார் காலப்பொருளில் வழங்கும் கு-உருபைக் குறிப்பிடுகிறார். பிற்கால இலக்கண ஆசிரியர்கள் (நன்னூலார்) ''நாளைக்கு வருவான்'' என்பது போன்ற தொடரில் உள்ள 'கு'

உருபுக்கு வழக்கு அமைத்திலர். தொல்காப்பியனார் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கூறிய இலக்கண அமைதி இன்றும் நின்று நிலவிப் பல வழக்குகளுக்கும் இடங்கொடுத்து உதவுகின்றது.

தற்கால வழக்குகள்

இக்குச் சாரியை வழங்கிய இடம்போன்ற தன்மை பெற்ற பல வழக்குகள் தற்காலத் தமிழ்மொழியில் உள்ளன. அவை யாவும் காலப்பொருளில் வழங்கும் கு உருபைப் பெற்றனவேயா கும்; ஆனால் பழைய வழக்குகள் மாறி ஏழாம் வேற்றுமை உருபைப் பெற்றுவிட்டன.

காலைக்கு வரும் > காலையில் வரும்

ஆடிக்குக்கொண்டான் > ஆடியில் கொண்டான்.

சித்திரைக்குக்கொண்டான் > சித்திரையில் கொண்டான்.

என மாற்றம் அடைந்து விட்டன.

ஆனால் தற்காலத் தமிழில் வழங்கும் ''நாளைக்கு வருவான், மூன்று மணிக்கு வந்தேன், ஞாயிற்றுக் கிழமைக்குப் போவான், இன்றைக்கு வந்தார்'' என்னும் சொற்றொடர்களில் உள்ள 'கு' உருபை மாற்றி அமைத்தல் முடியாது; வெற்றுருப்பாகக் கொள்ளவும் முடியாது. நான்காம் வேற்றுமை உருபு இவ்விடங் களில் ஏழாம் வேற்றுமைப் பொருளில் வழங்குகிறதாகக் கொள்ளுதலே நலம். ஆடிக்கு, சித்திரைக்கு என்பனவற்றில் இக்குச் சாரியை உளதாயின் மேற்கூறப்பட்ட தற்கால வழக்கு களிலும் இக்கு உள்ளதாகக் கருத இடம் உண்டு ஆனால் உண்மையை ஆயின், இக்கு என்ற வடிவில் ஒரு சாரியை இல்லை என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை. *

திருமணம்.

தனித்தமிழ்த் தொண்டரும் தென்மொழி அன்பரும் விற்பனை யாளருமான ஆசிரியர் திரு. அறிவன் அவர்கட்கும், திருவாட்டி அன்புமலர் அம்மைக்கும், முகவை, எமனேசுவரத்தில், கார்த்திகை 16-ஆம் நாள் திருமணம் இனிதே நடந்தது. அவர் தம் திருமண நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா ஐந்து அன்பளிப்பாக அனுப்பப் பெற்றது. மணமக்கள் இரு வரும் எல்லா நலன்களும் வாய்க்கப் பெற்று இனிதே வாழ்ந்து தமிழ்த் தொண்டாற்றும்படி உளமார வாழ்த்துகின்றோம். —ஆர்)

கேள்விச் செல்வம்

(இப்பகுதியில் திரவிட மொழிப்பெரும் புலவர், உயர்திரு. ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள் விடையளிக்கின்றார். இலக்கணம், இலக்கியம், மொழி, நாடு, வரலாறு இவை பற்றிய உங்கள் ஐயங்களை இப்பகுதிக்கு எழுதியனுப்புங்கள்! கேள்விகளைக் "கேள்விச் செல்வம், தென்மொழி, திருப்பாதிரிப்புலியூர்" என்ற முகவரிக்கு அனுப்புக. ஆர்.)

சி. கலியபெருமாள், கோவிற்பட்டி.

● நெல்லை மாவட்டம் திருச்செந்தூர் தூத்துக்குடிப் பெருவழியிலுள்ள 'பழைய காயல்' என்ற சிற்றூர்தான் பண்டைப் பாண்டியரின் 'காயல்' துறைமுகமா? அவ்வாறாயின் இக்காயல் கடலிலிருந்து மிகத் தொலைவிலுளதே! கடலிற் கலக்கும் பொருநை அன்றெவ்வாறிருந்திருக்கும்? அன்றி, இப்போது விளங்கும் காயல் பட்டினந்தான் முன்னாட் காயலா?

○ இன்றுள்ள காயற்பட்டினமே இறுதிக்காலப் பாண்டியர் துறைமுகம். வைகை மதுரை கடைக்கழகப் பாண்டியர் தலைநகராய பின், முதற்கண், கொற்கை அவர் துறைநகராயிருந்தது. பின்பு கடல் சற்றுப் பின்வாங்கவே, காயல் துறைநகராயிற்று. பின்னர் அதனின்றும் கடல் பின்வாங்கியதால், போர்த்துக்கீசியர் தூத்துக்குடியைத் துறைமுகமாக்கினர்.

அகரத்தான், பச்சையப்பன் கல்லூரி.

● தி. மு. கழகத்தின் இந்தி எதிர்ப்புப் போராட்டங் குறித்தும், அக்கழகத்தின் இன்றைய நிலை குறித்தும் தங்கள் கருத்தை விரிவாக அளிக்க வேண்டுகின்றேன்.

○ தி. மு. கழகத்தின் இந்தி யெதிர்ப்புப் போராட்டம், தமிழைக் காப்பதும் மறைமலையடிகள் கருத்திற் கிசைந்தது

மாயிருப்பதால், ஊக்கத்தக்கதும் உண்மைத் தமிழரெல்லாம் ஒத்துழைக்கத்தக்கதுமாகும்.

இனி, மொழித்துறையை நோக்காது அரசியல் துறையை நோக்கினும், இந்தியால் தமிழர் இரண்டாந்தரக் குடிவாணராக நேரும் இழிநிலையைத் தன்மானமுள்ள தமிழரெல்லாம் முனைந்து எதிர்க்கத்தானே வேண்டும்!

தமிழுக்கும் தமிழர்க்கும் ஏற்காததும் நடைமுறைக்கு வர முடியாததுமான திராவிட நாடு என்னும் பழைய நான்மொழி நாட்டுக்கொள்கை விடப்பட்டுவிட்டதால், தி. மு. க. தூய்மை யும் திருத்தமுமே அடைந்திருக்கின்றது என்று கருதலாம்.

ச. வே. சுப்பிரமணியன், மாதேவி அஞ்சல்.

● அல்லியரசாணி மாலையில் பாண்டிநாட்டு வளம் எனுந் தலைப்பில்,

''கனி உதிரும் சோலைக் கனமதுரை நன்னாடு,
சோலை கிழக்கீனும், துய்யபலா மேற்கீனும்
வாழை வடக்கீனும்...''

என்ற பாடற்பகுதியில் 'சோலை' என்பதன் பொருள் யாது? பாடலிற் கூறப்பட்டுள்ள 'ஈனும்' முறை விளக்க வேண்டு கின்றேன். ஈனுவதில் திசை முறை உண்டா?

○ 'வாழை வடக்கு, தென்னை தெற்கு.'
'வாழை வடக்கு, வான்கமுகு தெற்கு,
சோலை கிழக்கு, துய்ய பலா மேற்கு.'
'வாழை வாழ வடக்கு, வைத்தவன் வாழக்கிழக்கு'
வாழை சாக மேற்கு, வைத்தவன் சாகத் தெற்கு'

என்பன பழமொழிகள்.

வாழை வடக்கிற் குலை தள்ள வேண்டும். தெற்கில் குலை தள்ளினால் வைத்தவனுக்குக் கேடு என்பது மரபுக் கொள்கை. வாழைத் தோப்பானால் முதலிற் குலை தள்ளும் வாழை மட்டும் வடக்கில் தள்ளினாற் போதும். அது தெற்கில் தள்ளினால் வாழைத் தோப்பு முழுவதையும் அழித்து விடுவது வழக்கம்.

இங்ஙனமே ஏனை மரங்கட்கும் கொள்க.

சோலை என்பது மாஞ்சோலை.

பெ. முனியப்பன், கர்த்தாரப்பட்டி.

● திரு. ச. பா. அருளானந்தம் எம். ஏ. அவர்கள் 'கவிஞ னின் காதலி' எனும் நூலின் முகவுரையில் ''தமிழருக்கு

இலக்கியத்தில் மட்டும் என்ன, எதிலுமே தனித்துவம் இல்லை'' என்று குறிப்பிட்டுள்ளார் இதனை விளக்கி உண்மை தெளிவிக்க வேண்டுகின்றேன்.

○ அஃது ஆராய்ச்சியில்லா அடிமையர் கூற்று. தமிழரின் தனி மாண்பை இனி வெளிவரும் என் 'தமிழ் வரலாறு', 'பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும்,' 'தமிழர் மதம்' முதலிய நூல்களிற் கண்டு கொள்க.

துரை. மாலிறையன், புதுவை.

● மணிமேகலை ஐயக்கடிதை ஏந்தி, ஆதிரைமுன் நிற்றலை, "புனையா ஓவியம் போல நிற்றலும்" என்று குறிப்பார், பின் பலவிடத்தும் அவளை 'ஆயிழை', 'செறி தொடி', 'நறுமலர்க் கோதை' என்றெல்லாம் குறிப்ப தென்னை? மரபுவழிக் குறித்தாரேனும் துறவு பூண்டவளை அவ்வாறு குறிப்பது இலக்கிய வழுவாகாதா?

○ வழுவாகாது; 'ஆயிழை' 'செறி தொடி', 'நறுமலர்க் கோதை' முதலிய தொகைச் சொற்கள் மொத்தத்திற் பெண் என்னும் பொருளை மட்டும் உணர்த்தும். அவற்றைச் சொற்பிரித்துப் பொருள் கொள்ளக் கூடாது. அவற்றிற்கு இலக்கணத்தில் அன்மொழித் தொகை என்று பெயர்.

தரங்கை பன்னீர்ச்செல்வன், வீசூர்.

● திருவள்ளுவர் ஆண்டை அறுதியிடும் சான்று யாது?

○ ஏலேலசிங்கன் என்னும் இலங்கையரசன் காலம் கி. மு. 200–161. அவன் மக்களுக்குத் திருவள்ளுவர் ஆசிரியரா யிருந்தனர் என்பது மரபுவழிச் செய்தி இதுகொண்டு, திருவள்ளுவர் காலம் கி. மு. 2–ஆம் நூற்றாண்டிற்கும் முதல் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதென்று கருதலாம்.

● 'ஐராவதம்' ஐராவணம்' இரண்டும் ஒன்றா?

○ ஐராவதம் = இந்திரன் யானை.

ஐராவணம் = 1. இந்திரன் யானை,
2. சிவபெருமான் யானை,
3. பட்டத்து யானை.

இரெ. முத்துமாறன், மதுரை.

● ''ஒத்தகாமத்து ஒருவனும் ஒருத்தியும்,
ஒத்தகாமத்து ஒருவனொடு பலரும்'' -செயிற்றியம்.

பைந்தமிழிலக்கணத்தில் தொல்காப்பியம் முதலாக நம்பியகப்பொருள் ஈருகவுள்ள அத்தனைப் பொருளிலக்

கணங்களினின்றும் நாமறிவது ஒருத்திக் கொருவன். ஆனுல் ஒருவனுக் கொருத்தி என்ற நிலை இலையே, ஏன்? பரத்தையர் பிரிவு ஏன் வேண்டும்? கற்புடைப் பெண்டிர்க்கு இது போன்ற பிரிவில்லையே? அவ்வாறெனின் தமிழ் லக்கணத்தில் அறமுறை, உயர்பண்பாடு, உயர் ஒழுக்கம் உண்டா என வினவும் பிறமொழியார்க்கு நம் விடையாது?

○ நாகரிகமடைந்த பிற நாடுகளிற் போன்றே தமிழ் நாட்டிலும் ஒரு சாரார் ஒழுக்கங் குன்றியிருந்தனர். ஆயின், உயரிய ஒழுக்கத்தை வற்புறுத்துவதே தமிழ் நூலின் மரபு. ஆயினும், ஆரியர் தமிழ்நாடு புகுந்தபின் பல ஆரியக் கருத்துகள் தமிழிலக்கண விலக்கியத்தில் இடம் பெற்றுவிட்டன. அதுவே பிற்கால நூல்கள் அறம் பிறழ்ந்தமைக்குக் கரணியம் (காரணம்). இதுபோலுள்ள தமிழ் நூல்களுள், இல்லறம்பற்றிய தமிழர் பண்பாட்டை உண்மையாய் எடுத்துக்கூறுவது, திருக்குறள் ஒன்றே. அதில் 'வரைவின் மகளிர்' கண்டிக்கப்படுவதையும், காமத்துப் பாலிற் பரத்தையர் பிரிவு கூறப்படாமையும் காண்க.

'புலவி நுணுக்கம்' என்னும் அதிகாரத்தில், காதலி கூற்றில் குறிப்பாய் வருவனவெல்லாம் அவள் பேதைமை பற்றியனவே யன்றி உண்மையாய் நிகழ்ந்தவையல்ல.

மெ. கி. சுந்தரமூர்த்தி, சீவலாதி.

● நாவலந்தேயத்தில் ஆரியர் போந்த காலம் கி மு. 2000 தொடங்கி 1500 வரையாதலின், ஏறத்தாழ கி.மு. 350 இல் தலைக்கழகத்திருந்த அகத்தியர் ஆரியராவதெங்ஙனம்? இராமாயண காலக் கோதாவரிக் கரை அகத்தியரும், தமிழ்க்கழகத்திருந்து 'அகத்தியம்' இயற்றியவரும் ஒருவரெனக் கோடல் பொருந்துமா? அகத்தியர் ஒருவரா? அப் பெயரினர் பலரா? அன்னவர் காலம், இனம் வரலாற்றினை விளக்க வேண்டுகின்றேன்.

○ அகத்தியர் ஒருவரல்லர், பலர். ஆயின், தென்னாட்டிற்கு வந்த அகத்தியர் ஒருவராகவே தெரிகின்றது. அவர் இடைக் கழகத்திறுதியில் அல்லது இறுதியடுத்து வந்திருக்கலாம்.

அகத்தியர் தலைக்கழகத்தைச் சேர்ந்தவரல்லர். இறையனரகப் பொருளுரையிலுள்ள முச்சங்க வரலாறு பிற்காலத்ததாதலின் புலவர் வரிசையைப் பிறழக் கூறுவதாகும்.

தலைக் கழகம் வரலாற்றிற் கெட்டாத தொன்மை வாய்ந்தது. ஆத்திரேலியாவும் ஆப்பிரிக்காவும் நாவலந்தேயமும் இணைந்திருந்த இடத்தில் இருந்தது. ஆதலால், முச்சங்க வரலாறு குறிக்கும் காலத்தினும் முற்பட்டதாயிருந்திருத்தல் வேண்டும்.

ஆரியர்க்குத் தமிழ் நாட்டில் ஏற்பட்ட மேம்பாட்டினல், தலைக்கழகத் தொன்மையை அறியாத பிற்காலத்தினர் அவரை அக்கழகத்தொடு தொடர்புபடுத்திவிட்டனர். *

இந்தி எதிர்ப்பு: அறிஞர் கருத்து வரிசை-1

"மொழியை இழந்து நிலப்பரப்பின் உரிமையைப் பெறுவதால் பயனில்லை"

(இது, கார்த்திகைத்திங்கள் நடந்த மதுரைத்தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் ஆறுவது ஆண்டு விழாவில் உயர்திரு. கருமுத்து தியாகராசர் அவர்கள் ஆற்றிய பொழிவுச் சுருக்கம். இதனை ஊன்றிப் படிக்குமாறு செந்தமிழ் அன்பர்களை வேண்டுகின்றோம்.—ஆசிரியர்.)

"நம் அருமைத் தாய்மொழிக்குப் பணி புரிவதிலும் சிறந்த கடன் வேறு உளதோ? அதற்கென நம் ஆருயிரைத் துறப்பதும் மிகையாகாது. ஒப்பற்ற நாகரிகத்தையும் பண்பாட்டையும் தரும் மொழியை இழந்து, வெறும் நிலப்பரப்பின் உரிமையைப் பெறுவதனால் அடையும் பெருமையும் பயனும் என்ன?

"ஒட்டார்பின் சென்றுஒருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று"

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்குஇணங்க மடிவது மேலன்றோ!

அயலவர் ஆட்சியினின்றும் விடுதலையடைந்த நாம் இன்று நம் மொழிக்காக நம் அரசோடு அறப்போர் புரிய நேரிட்டிருப்பது வினைவிளை காலமேயாகும். நம் நாட்டை ஆங்கில பிரஞ்சு போர்த்துக்கீசியர் ஆண்ட காலத்து அவரவர் மொழியை ஆங்காங்குள்ள மக்கள் தலையில் ஏற்றி அடிமை கொண்டதுபோல், வடநாட்டார் தங்கள் மொழியைத் தென்னாட்டார்மேல் சுமத்தி ஆள முயலுகின்றனர். இதை நாம் எவ்வாறு பார்த்துப்பொறுத்திருக்க முடியும்? ஆதலால், நம் தாய் மொழியாகிய தமிழையும், இந்தியைப்போல் அரசியல் மொழிகளில் ஒன்றாக ஏற்றி உயர்த்தும் வரையில் உரிமைக் குரலை எழுப்பி அயராது கிளர்ச்சி செய்தல் நம் கடனாகும்.

நாட்டின் ஒற்றுமைக்காகவும் ஆட்சி ஆண்மைக்காகவும் பொது மொழி ஒன்று வேண்டுமென்று அழிவழக்கு ஆடுகின்றனர். அவ்வாறு அழிவழக்காடுகின்றவர்களிடையே ஒற்றுமை இருக்கின்றதா? அவர்கள் தாமே வேற்றுமைக்குச் சான்றாக விளங்குகின்றார்கள். இதை இந்திக்குப் பிறப்பிடமாகிய உத்தரப் பிரதேசம் மெய்ப்பிக்கின்றது. ஒற்றுமைக்காக ஒரு மொழி வேண்டும் என்பது பொருந்தாப் புன் செயலாகும்."

"ஒற்றுமைக்கு, மொழியைவிடச் சமயத்துக்கு ஆற்றல் உண்டு என்பது, ஒரே மொழி பேசும் வடநாட்டு இந்துக்களையும் முகமதியர்களையும் விட, வெவ்வேறு மொழி பேசும் வடநாட்டு இந்துக்களும் தென்னாட்டு இந்துக்களும் ஒற்றுமையாக இருப்ப தால் தெளிவாகும். ஆதலால் எல்லாருக்கும் பொதுவான ஒரு தேசிய சமயத்தைப் படைக்க முற்படலாமா? இனி, ஆட்சி ஆண்மைக்காக மாநில மொழிகளில் ஒன்றைமட்டும் மேற்கொள் வது முறையாகுமா? தனக்கு இனிது என்று பிறர்க்கு இன்னா செய்தல் அறனாகுமா? விரும்பாத மற்றவர் மீது சுமத்தப்படும் இந்திக்கு ஆட்சி மொழியாகும் தன்மைதான் இருக்கிறதா? இலக் கண வரம்பும் இலக்கிய வளமும் இன்றி இளம் பருவத்திலுள்ள இந்தி மொழி, ஆட்சி மனைகளிலும் அறங்கூறு அவைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பயன்படு கருவி மொழியாகக் கொள்ள வல்லதாகுமா? தம் மொழியைப் பிறர்மேல் சுமத்தும் இவர்கள், மற்றவர்களை மாநிலப் பித்தும் குறுகிய மனப்பான்மையும் உடை யவர்கள் எனக் குறைகூறுவது வியப்பாகும் மேலும், இந்தியை அரசியல் மொழியாகக் கொண்டு அதற்கு வாரம் காட்டி அதனை வளர்ப்பதற்கும் பரப்புவதற்கும் பெரும் பொருள் செலவிடுகின் றார்கள். இத்தகைய முறை மீறிய செயலே மாநிலங்கட்கிடையே மாறுபாட்டையும் வேற்றுமையையும் உண்டு பண்ணுகிறது அண்மையில் வங்கத்தில் இந்திக்கு ஏற்பட்டிருக்கும் பெரும் எதிர்ப்பு இதற்குச் சான்றாகும்.

ஒரு செயல் மாறானபயனை விளைக்குமாயின் மக்கள் கிளர்ந்து எழுமுன், அதனைக் கைவிடுதலன்றோ அறிவுடையார் செயலா கும்! ஆந்திர, குசராத், மராத்திய நாடுகள் மொழிவழி மாநிலம் அமைதல் வேண்டிச் செந்நீர் சிந்திய கொடுங் காட்சி இன்றும் நினைவில் நீக்கமற நிற்கின்றதே!

ஆட்சிப்பொறுப்பில் அமர்ந்திருப்போர், ஏன் பிற மொழியை யும் தம் மொழிபோல் பேணி மாநிலங்களுக்கிடையே நட்புரி மையை வளர்த்தல் கூடாது? உலகிலேயே முதன் முதலில் மக்களாட்சியை மேற்கொண்டு இதுகாறும் ஒற்றுமையோடு வாழும், பல்வேறு இனங்களையும் மொழிகளையும்கொண்ட சுவிட் சர்லாந்தை நாம் பின்பற்றக்கூடாதா? நாலேகால் கோடி மக்க ளைக்கொண்ட அந்நாட்டில், நூற்றில் எழுபத்துமூவர் செருமனும், இருபத்தொருவர் பிரெஞ்சும், ஐவர் இத்தாலியும் பேசுகின்றனர். இம் மூன்று மொழிகளும் அரசியல் மொழிகளாகச் சம நிலையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. முக்கால் பாகமுள்ள செருமானி யர் தங்கள் மொழியை ஏனைய பிரெஞ்சு இத்தாலியர் மீதோ, நூற் றுக்குத் தொண்ணூற்று நால்வராக உள்ள செருமானியரும், பிரெஞ்சுக்காரரும் சேர்ந்து, நூற்றுக்கு ஐந்து மேனியுள்ள இத்தா லியர் மீதோ தம் மொழிகளைச் சுமத்தும் கொடுமையை மேற் கொள்ளவில்லை. நெறி, நேர்மை, ஒழுங்கு முறை தவறாத

கொள்கையாலும் பிறர் உணர்ச்சியை மதிப்பதாலும் சுவிட்சர் லாந்துஒன்றுபட்டு,ஒற்றுமையோடு வாழ்கின்றது; இதுபோலவே செக்கோசுலோவேகியாவில் நான்கு மொழியும், கனடா, தென் னுப்பிரிக்கா, பெல்சியம் நாட்டில் இரண்டிரண்டு மொழிகளும் அரசியல் மொழிகளாக உள்ளன. உருசியாவிலுங்கூட 16 மொழிகள் இருக்கின்றன. ஆதலால் 40 கோடி மக்களைப்பெற்ற இந்திய நாடு தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், வங்கம், குசராத், மராத்தி, பஞ்சாபி, ஒரிசா, பீகாரி, காசுமீரி, இந்தி ஆகிய 12 அரசியல் மொழிகளைக் கொள்வது மிகையாகாது. சமசுக்கிருதமும், உருதும் பேசும் மாநிலங்கள் இல்லாததால், அவை இரண்டும் அரசியல் மொழிகளாக ஏற்கும் கட்டுப்பாடு உடையன அல்ல. மாநிலங்கட்கு இடையேயும் உலகத்தோடும் தொடர்பும் உறவும் கொள்ளவும் பெருகி வரும் அறிவியல் அறி வைப் பெறவும் ஆங்கிலத்தை எல்லா மாநிலங்களும் இரண்டா வது மொழியாகக் கொள்வது இன்றியமையாதது.

மொழி வெறியரின் கொடுஞ்செயல் இம்மட்டோடு நிற்க வில்லை. நம் தமிழ் எழுத்தை அறவே அழித்து ஒழிக்கவும் சூழ்ச்சி செய்கின்றனர். நாட்டிற்கு ஒரு பொதுமொழி வேண்டும் என்று சொல்வது போல் மொழிகளுக்கெல்லாம் ஒரு பொது எழுத்து வேண்டும் என்று கூறவும் துணிந்து முற்பட்டுவிட்டனர். என்னே இவர்தம் பேதைமை!

எல்லா மொழிகட்கும் ஓரே எழுத்து வேண்டும் என்று கிளர்ச்சி செய்வோர் மொழியின் அடிப்படை அமைப்பு,நுட்பம், இலக்கணம் முதலிய வரலாற்று மரபுகளை அறவே தெரியாதவர் கள் என்று துணிந்து கூறலாம்

ஒருமொழிக்கு உடல்போன்றது எழுத்து உடலாம் எழுத்து அழியின் உயிராம் மொழியும் அழியும். எழுத்திலக்கணம் நம் மொழிக்கேயுள்ள தனிச் சிறப்பும் பெருமையுமாகும். மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே தொல்காப்பியர் எழுத்தின் இலக் கணத்தை ஒன்பது இயல்களில் 483 நூற்பாக்களால் விளக்கி யிருக்கின்றார்.

தமிழ் எழுத்துகள், உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர் மெய் எழுத்து, ஆயுத எழுத்து என்று வகுத்திருக்கும் கருத்து முறையையும் அழகையும் என்னென்று சொல்வது! மக்கள் எப் படி உயிரையும் மெய்யையும் பெற்றுள்ளனரோ அப்படியே தமிழ் மொழியும் உயிர் எழுத்தையும் மெய்யெழுத்தையும் பெற் றிருக்கிறது உயிரும் மெய்யும் சேர்ந்து இயங்குவது போல உயிரெழுத்தும், மெய்யெழுத்தும் சேர்ந்து உயிர்மெய் எழுத்தாக நிலைத்திருக்கிறது. உயிருக்கும் மெய்க்கும் வேருக இறைவன்

தனி நிலையில் விளங்குவது போல உயிர் எழுத்திற்கும் மெய் எழுத்திற்கும் வேறாக முப்புள்ளி வடிவினதாகிய ஓர் ஆய்த எழுத்தையும் கொண்டிருக்கிறது. ஆதலால் தமிழெழுத்தும், மொழியும் தெய்வத் தன்மை வாய்ந்தனவாகும்.

உலகில் தமிழ் மொழியும் எழுத்துமே முதன் முதலில் தோன்றியன என்பதும், பேச்சளவில் மட்டுமேயிருந்த ஏனைய மொழிகள் எல்லாம் தமிழர் தொடர்பு பெற்ற பின்னரே, வரி வடிவத்தைப் பெற்றன என்பதும் மொழி நூலும் வரலாறும் கூறும் உண்மையாகும்.

மேனாட்டு மொழிகள் பலவும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை யாதலால், அவை ஒரே வரிவடிவத்தைப் பெற்றுள்ளன. தமிழ் ஒரு தனி இன மொழியாதலால் அதனை வேறு எழுத்துகளால் எழுதல் முற்றும் முடியாததாகும். காட்டாகத் தமிழ் என்ற சொல்லையே தேவ நாகரியிலோ உரோமனிலோ எழுதுதல் இயலாது. ழகர வொலி தமிழுக்கே சிறப்பாக உள்ளதொன்று.

"வட சொற் கிளவி வட எழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே"

என்ற தொல்காப்பிய நூற்பாவால், தமிழுக்கு வேற்று மொழி எழுத்தை மேற்கொள்வது இலக்கண வழுவென்பது தெளிவாகும் ஒரு மொழியைக் கற்க விரும்புவோர் அதற்குரிய எழுத்துகளின் வாயிலாகப் படிப்பதே சிறப்பாகும். தமிழ் மொழியில் ஏழு உயிரெழுத்துகளும், பதினெட்டு மெய்யெழுத்துகளும் ஓர் ஆயுத எழுத்தும் ஆக இருபத்தாறு வடிவெழுத்துகளே உள்ளன. இதனைப் படிப்பது கடினமாகுமா? எல்லா மொழிகளுக்கும் ஒரு பொது எழுத்து வேண்டும் என்று வீணே கூறுவோர், ஒரு மொழியின் எழுத்தைக் கற்றுக் கொள்வதுதான் கடினமென்றும், அதைக் கற்றவுடன் அம்மொழியில் உள்ள அரிய பெரிய இலக்கியங்களை எளிதில் படித்து இன்புறலாம் என்றும் பகற் கனவு காண்கிறார்கள்போலும். இவர்கள் அறிவுதான் என்னே! ஒரு மொழியின் எழுத்தைப் படிப்பதற்கு எவ்வளவு காலம் செல்லும்? அம்மொழியின் இலக்கிய இலக்கண நுட்பங்களைக் கற்றுத் தெரிந்து இன்புறவன்றோ பல்லாண்டுகள் வேண்டும்!"

தமிழர்கள் வாழ்க்கையையும் இயற்கையையும் அடிப்படையாகக் கொண்டு இலக்கியங்கள் இயற்றினரென்பதை அவற்றை அகம் புறம் என வகுத்துக் கொண்ட தன்மையால் அறியலாம். புறநானூற்றுப் பாடல்ஒன்று அரசுமக்களிடமிருந்து மிகுவரிபெறு தல் முறையன்று என்பதை அறிவுறுத்துகிறது. ஒரு மா அளவிலும் குறைந்த நிலத்தில் விளைந்த நெல்லை அறுத்துக்கொணர்ந்து யானைக்குக்கவளம் கவளமாகக்கொடுப்பின் அது பலநாட்களுக்கு

ஆகும். அங்ஙனமின்றி நூறு செய்யில் விளைந்து கிடைக்கும் நெல்லை யானைதானே மேயுமாயின் அதன் வாய் புகுவதிலும், பெருங் கால்களால் மிதிப்புண்டு கெடுவது மிகுதியாகும். அது போல அறிவுடை வேந்தன் வரியை நெறியறிந்து முறையே கொள்வானாயின் நாடு மிக நலமுறும்; அரசும் வளம் பெறும். அவ்வாறின்றி அரசன் மன வலி குறைந்தவனாகி மக்கள் நிலை யறியாமல் இரண்டகம் பேசி ஆரவாரிக்கும் அமைச்சர்களோடு கூடிக் குடிகளிடத்தில் அன்பின்றி வரி வாங்குவானாயின் யானை புகுந்த வயலைப்போல், தானும் பொருள் பெருன், நாடும் கெட்டு அழியும் என்பது இதன் பொருள்.

இங்கே வயலை நாடாகவும், யானையை அரசாகவும் உவமம் செய்திருத்தலும் அரசு வரி பெறுதற்கு உரிமை உடையதெனி னும், மிகு வரி விதிப்பின் நாடும் அரசும் ஒருங்கே கெடும் என் பதை,யானை நிலம் தனக்குரியதென்று தன்விருப்பாகச் சென்று மேயப் புகுமாயின் அஃது உண்ணுவதிலும் கால்களால்அழிவது மிகுதி என்று ஒப்பிட்டு உரைத்தலும் எண்ணி எண்ணி இன்புறத் தக்கன. அரசு அறிவுடையதாய், அமைச்சு நெறியறிந்து நடப் பதாய் இருக்குமாயின் கோடியாத்து நாடு பெரிதும் நந்தும் என் றுரைப்பதும், அதற்கு மாருக அரசன் மனவன்மை இல்லாதவ னாக இருப்பின், யானை புக்க புலம்போல அரசும் ஓங்காது உலகமும் கெடும் என்பதும் ஓவியம் எழுதிக் காட்டினாற்போல் சொல்லப்பட்டிருப்பது உவகை தரும்.'' —தமிழ்நாடு.

உறுப்பினர்களுக்கு:

ஒவ்வோர் ஆங்கில மாதமும் 16-ஆம் நாளே, உறுப்பினர் களுக்குத் தென்மொழி இதழ்கள் அனுப்பப் பெறுகின்றன. ஆகையால் தொலைவான இடங்களிலும் சிற்றூர்ப் புறங்களிலும் உள்ள உறுப்பினர்கள் தவிரப் பிறர்க்கு 17-ஆம் நாளே இதழ்கள் கிடைக்க வேண்டும். உறுப்பினர்களிடமிருந்து அடிக் கடி முகவரி மாற்ற மடல்கள் வருகின்றன. குறிப்பாக விடுமுறை களில் செல்லும் மாணவர்கள் அடிக்கடி முகவரிகளை மாற்றுகின் றனர். ஒவ்வொரு மாதமும் 15-ஆம் நாளைக்குள் வரும் மாற்ற மடல்களையே கவனித்து ஆவன செய்ய முடியும். அதற்குப் பின் வரும் மாற்றங்கள் மறு மாத இதழில் இருந்தே கவனிக்க வியலுமாகையால், புதிய முகவரிக்கு இதழ் கிடைக்காத உறுப் பினர்கள் 'இதழ் வரவில்லை' என அலுவலகத்திற்கு எழுதுகின்ற னர், அவர்கட்காக நாமும் வருந்துவதைவிட வேறொன்றும் செய்யவியலாது. எவ்வகை மாற்றமுமின்றி இருப்பார்க்கும், தொடர்ந்து இதழ் பெற்றவர்க்கும் இடையில் ஓரிர் இதழ்கள் கிடைக்காமற்போயின் அவர்கள் ஆங்காங்குள்ள அஞ்சலகத் தலைமையரிடம் நேரிலோ மடல்வழியோ தெரிவித்தலே நலம் பயப்பதாகும். — அமைச்சர்.

முன் இதழ்த் தொடர்ச்சி.

மெய்யறிவியல்.

Philosophy.

கல்வி

ஆங்கிலத்தில்: விவேகானந்த அடிகள்.
தமிழில்: 'வழுதி'

நம் நூல்களில் புதைந்து கிடப்பனவும், மடங்களிலும் காடுகளிலும் வாழும் ஒரு சிலர்க்கே உரியவுமான மெய்யுணர்வுக் கருத்துகளை எல்லாம் பலருமறிய வெளிக்கொணர்வதே என் எண்ணமாகும். அவர்களிடமிருந்து மட்டுமன்று, அவ்வெண்ணங்களைப் பூட்டிக் காவல் காத்து வரும் வடமொழிச் சிறையினின்றும் அவற்றை விடுதலை செய்தல் வேண்டும். தத்தம் தாய்மொழியிலேயே மக்கட்குக் கல்வி புகட்டி அவர்கள் தாமாக எண்ணும் ஆற்றலை அவர்க்களித்தல் வேண்டும். புதிய எண்ணங்களை அளித்தாற் போதும்; அறிவு தானே வளரும். ஆனால் எண்ணத்தோடு பண்பாட்டையும் குழைத்தூட்ட வேண்டும்.

பார்ப்பனரோடு ஒத்த உரிமை சமயத்தில் தங்கட்கும் உண்டு என்பதை அவர்கட்கு நன்குணர்த்தல் வேண்டும். வாழ்க்கையறிவை எல்லாமக்கட்கும் புகட்டல் வேண்டும். பல நூற்றாண்டுகளாகக் குலமும் கோனாட்சியும், அயல் நாட்டினர் கொடுங்கோன்மையும் அவர்களை அடக்கி, ஒடுக்கி வலிவைக் குறைத்து விட்டன. மெய்யறிவுச் சுடரை உள்ளத்தில் பாய்ச்சுதல் ஒன்றே அவர்களை விரைந்து உய்விக்க வழியாகும்.

சமயநூல் கற்றால் மட்டும் மெய்யறிவு வந்து விடாது. உலகின் எல்லா நூல்களையும் கண்டு கற்றிருந்தாலும் போதாது. அவ்வறிவு இறைவனின் மெய்ப்பாங்கைச் சிறிதும் உணர்த்தாது. உரையாடியும், சொற்போரிட்டும், பகுத்தறிவால் ஆய்ந்தும் உண்மையைக் கண்டுணர முடியாது அதனை நம் உள்ளத்தினுள் நாமே உணர்ந்தால்தான் உண்டு. மருத்துவ நூற்களை நன்கு பயின்றால் மட்டும் ஒருவன் தேர்ந்த அறுவை மருத்துவன் ஆக முடியுமா? ஒரு நாட்டின் படத்தைப் பார்த்தால் நாட்டையே பார்த்ததாக ஆகி விடுமா என்ன? படங்கள் மெய்ப்பொருளை அறிய நம் ஆவலைத் தூண்டக் கூடும்; அவ்வளவே. கோயில்களும் சமயநூற்களும் சமயத்தின் குழந்தைப் பருவத்துக்குரியன. கொள்கைகளிலும் சொற்போரிலும் சமயம் இல்லை. தானே அதுவாய் இருந்து, வாழ்ந்து, உணர்வதே சமயம். அறிவில் உயர்ந்தால் மட்டும் இறைவனை அணுகமுடியாது என்று கண்டோம். மாறாக, அறிவில் உயர்ந்த

வர்களிடையேதான் சமய உணர்வில்லார் பலர் தோன்றி யிருக்கின்றனர். மேலை நாட்டு நாகரிகத்தின் தீமைகளில் இஃதொன்று. உள்ளத்தை-புலம்பனை (Soul) ப்பற்றிக் கவலைப் படாமல் அறிவைப் பற்றி மட்டுமே அமைந்த கல்வி அது. அது தன்னலத்தையே வளர்க்கும். அறிவுக்கும் உணர்வுக்கும் போராட்டம் நேர்ந்துழி உணர்வின் வழி ஏகுவதே பொருத்தம். உணர்வு எட்டித் தொடும் உயரத்தை அறிவால் எட்ட முடியாது. உலகின் உயர்ந்த, ஆழ்ந்த அன்பு சமயத்தில் முகிழ்த்ததுதான். அமைதிக்கும் நன்மைக்குமாகப் பிறந்தொலித்த சொற்களெலாம் சமயப் பெரியார்களிடம் பிறந்தவை தாம். ஆனால் அஃதொப்பவே, வெறுப்பையும் காழ்ப்பையும் வளர்த்ததும், சமயம் என்பது மெய்யே. பொய்ச் சமயத்துக்கும் மெய்ச்சமயத்துக்கும் வேறுபாடு உண்டு. இவ்வேறுபாட்டினை வரையறுத்து மக்கட்கும் தெள்ளிதின் புலப்படுத்த வேண்டும்.

மக்களோ வறுமையில் வாடுகின்றனர். வறுமையே அனைத்துத் தீமைகட்கும் தாய். ஊருக்கு ஊர் இலவசப் பள்ளி வைத்தாலும் பயில வருவார் இரார் "உழைத்தால்தான் கஞ்சி குடிக்கலாம்" என்ற நிலையிலுள்ளவர்கட்குப் பள்ளிக்குவர நேரம் எது? அவர்கள் வாகும் வாய்ப்பும் அறிந்து நாமே தேடிச் சென்று அவர்கட்குக் கல்விபுகட்டல் வேண்டும். சமயக்கல்வியின் முன்னோடி பொதுக் கல்வியே. சமயத் துறவிகள் தமக்குள் ஓர் ஒழுங்கினை – முறையான திட்டத்தை – வகுத்துக் கொண்டால்தான் இப்பணியை ஆற்றமுடியும்.

உயர்வகுப்பினர் என்பார் தம் கடமையை உதறித்தள்ள முடியாது. உழைப்பாளரின் குருதியை உறிஞ்சி உறிஞ்சி இதுநாள்வரை கொழுக்கவில்லையா? இனியும் அவர்களை ஏமாற்றலாமா? அவர்கட்குரிய வற்றை அவர்கட்குக் கொடுத்தல் வேண்டாமா? வெறும் வாய்ப்பேச்சால் பயனில்லை செயலாற்றல் வேண்டும். ஆம்! அருஞ்செயல்கள்; அவற்றில்தாம் நாட்டின் எதிர்காலம் அடங்கியுள்ளது. அருஞ்செயல்கள் செய்யத் தேவைப் படுவனவற்றுள் உள்ளத்தால் உணர்வது ஒன்று. மூளைத் திறனிலும் பகுத்தறிவிலும் என்ன இருக்கின்றது? அவை ஒரு சில அடிகள் முன்னேறிப் பின்நின்று விடுகின்றன. ஆனால் உள்ளத்தின் வழியாகவன்றோ எழுச்சி பிறக்கின்றது! திறக்கமுடியாத கதவுகளையெல்லாம் அன்பு திறந்துவிடுகின்றது. புடவியின் மறைபொருள்கட்கெல்லாம் அன்பொன்றே திறவுகோல். ஆதலால், வருங்காலச் சீர்திருத்த வாணர்களே, நாட்டுப்பற்றுளர்களே, உணருங்கள்! உள்ளத்தால் உணருங்கள். உணர்கின்றீர்களா? ஆன்றோர்களின் வழித்தோன்றல்களாய கோடிக்கணக்கான மக்கள் இன்று விலங்குகளைப்போல் வாழ்வதை உணர்கின்றீர்களா? கோடிக்கணக்கான மக்கள் கால

மெல்லாம் பட்டினியாக இருந்து வந்திருப்பதையும் கோடிக் கணக்கானோர் இன்றும் பட்டினி கிடப்பதையும் உணர்கின்றீர்களா? மழைமூட்டம்போல் நாட்டை அறியாமை இருள் சூழ்ந்து கொண்டிருப்பதை உணர்கின்றீர்களா? அஃது உங்களைத் துடிக்கச்செய்திருக்கின்றதா? உங்கள் துயிலைக் கெடுத்திருக்கின்றதா? உங்கள் குருதியில் நுழைந்து, குருதிநாளங்களில் கொந்தளித்துப் பாய்ந்து உங்கள் நெஞ்சத் துடிப்போடு துடிப்பாயிருக்கின்றதா? உங்கட்கு வெறியை மூட்டியிருக்கின்றதா? இப்பெருங் கேட்டினால் விளையும் துன்பத்தையே எண்ணி எண்ணி ஏங்கி, உங்கள் பெயரையும் புகழையும் மனைவி மக்களையும், சொத்தையும் ஏன் உங்கள் உடலையுங்கூட மறந்ததுண்டா? நாட்டுப் பற்றாளன் ஆதற்கு இதுவே முதற்படி.

உள்ளத்தால் உணருங்கள். ஆனால் வெறும் பேச்சில், வாய்வீச்சில் ஆற்றலைப் போக்குவதற்கு மாறாக, இத் துன்பங்கட்கெல்லாம் ஏதாவதொரு வழி, ஏதாவதொரு தீர்வு கண்டு பிடித்ததுண்டா? கடிந்துரைகட்கு மாறாகச் சிறு உதவி, துன்பங்களில் ஆறுதலாக ஒரு சிறு இன்சொல் வழங்கியதுண்டா? நடைப்பிண வாழ்க்கையினின்று அவர்களைக் கரையேற்ற நினைத்ததுண்டா?

இதுவும் போதாது. மலையனைய பெருந் தடைகளையெல்லாம் தாண்டற்குரிய உள்ள உறுதி உங்களிடம் உண்டா? உலகனைத்தும் வாள்தூக்கி உங்களை எதிர்த்தாலும், உங்கட்குச் சரி என்று பட்டதைச் செய்யும் துணிவு உங்கட்கு வாய்த்துள்ளதா? உங்கள் மனைவி மக்கள் உங்கட்கு மாறுபட்டாலும், உங்கள் கைப்பணமெல்லாம் போனாலும், உங்கள் பெயர் அழிந்தாலும், செல்வமே மறைந்தாலும், உங்கள் குறிக்கோளில் நிலைத்திருப்பீர்களா? அதனை விடாதுபற்றி உங்கள் இலக்கை நோக்கித் திடமுடன் நடப்பீர்களா? பத்ரகிரியார் கூறுகின்றார்: முனிவர்கள் இகழ்ந்தென்ன, புகழ்ந்தென்ன? நல்லூழ் நாடிவந்தென்ன? ஓடி ஒளிந்தென்ன? சாவு இன்று வந்தென்ன, நூறாண்டு கழித்து வந்தென்ன? உண்மைப் பாதையினின்று ஓரு விரற்கிடையும் விலகாதவனே திடமுடைய மாந்தன். இத்தகைய திண்மையினை நீங்கள் பெற்றதுண்டா? இம்மூன்றையும் நீங்கள் பெறுவீராயின் ஒவ்வொருவரும் பேரிறும்பூதுகளைப் புரிய முடியும். செய்தித்தாளில் எழுதவேண்டுவதில்லை; சொற்பொழிவுகட்குச் செல்ல வேண்டுவதில்லை; உங்கள் முகம் தானே ஒளிரும். நீங்கள் மலைமுழைஞ்சில் வாழ்ந்தாலும் சரி, உங்கள் எண்ணங்கள் பாறைச் சுவர்களைக் கடந்து பரவும்; நூற்றுக் கணக்கான ஆண்டுகள் வரை அவை உலகில் திரிந்து கொண்டிருக்கும். இறுதியில் யாராவது ஒருவர் உள்ளத்தில் சென்று காலூன்றி அங்கே பயன் கொடுக்கத் தொடங்கும். (தொடரும்)

கோவை இளஞ்சேரன் கவிதைகள்

கலைக்குடில் வெளியீடு. நாகப்பட்டினம்.

விலை உருபா. 3-00.

ஆசிரியரின் நாற்பது தனிப்பாடல்களின் தொகுப்பு இது. ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு 'தமிழறிஞ'ரின் மதிப்புக் கருத்துரையைத் தலைப்பில் சுமந்துள்ளது. நல்ல தாளில் அழகிய முறையில் கொணரப்பட்ட வெளியீடு. வெளியீடு சிறக்க அமையினும் உள்ளீடு ஏமாற்றத்தையே தருகின்றது. நல்ல, இனிய, பிழையற்ற தமிழில் சிறப்புற எழுதவேண்டுமென்று ஆசிரியர் நினைத்திருக்கின்றார். ஆசிரியரின் தமிழ்ப்பற்றும் சீர்திருத்தப் போக்கும் நாட்டுக்கு நலஞ் செய்யும் ஆர்வமும், இளைஞர் நலம் பெறல் வேண்டும் என்ற எண்ணமும் பாராட்டுக்குரியவாய் நூல் முழுதும் புலனாகின்றன. யாப்பினங்கள் பல கையாளப் பட்டுள்ளமையும் வரவேற்கத் தகுந்தது. ஆயினும் உண்மைப் பாடலைத் தேடியலைவார்க்கு நூல் எவ்வகையிலும் மகிழ்வூட்டுவதாக இல்லை. பாடற்குரிய ஈர்ப்பாற்றல், உயிர்த்துடிப்பு நூலில் இல்லை. பொய்க்கால் குதிரை ஆட்டத்தை நினைவூட்டுகின்றது நூல்.

'புளித்த காதல்' என்ற பாட்டும், 'எவன் தமிழன்?' 'ஏட்டுச் சுரங்கங்காள்', 'அறிக்கை ஒன்று', 'பள்ளி நாற்பது' என்ற பாடல்களின் பகுதிகளும் கவனத்தை ஈர்க்கின்றன. புது முயற்சிகளில் நயம் இல்லை. அறுசீரால் அமைந்தவாகக் கூறப்பெறும் 'அந்த ஒலி' 'வாழ்க வாழ்க' என்ற பாடல்களிற் பல அடிகள் விழிப்பின்மையால் எண்சீர் அடிகளின் தன்மையைப் பெற்றுள்ளன. ஓசைப் பிழைகள் பலவிடத்துக் காணப்படுகின்றன. விளாங்காய்ச் சீர்கள் பல பாடல்களில் (பக்கம் 36. 'சிந்து பாடி','வந்து சேர்த்த' (பக் 42) 'நேற்று மாலை','இன்று காலை') நுழைந்து ஓசையைப் பாழ்படுத்தி விடுகின்றன. இலக்கண வழுக்களும் ஆங்காங்குத் தலை நீட்டுகின்றன. (எ. டு. எங்கு போனான், சொக்கி (ப்) போனான், படுத்து தலையணைத்து, கேளிர்ரென்றான்) பெண்ணைப் பேடென்பது மரபன்று; பிழையுமாகும். வட சொற்கள் ஒரு சில காணக்கிடக்கின்றன. ''பாட்டி''க்குக் ''கவிதை'' எனுஞ் சொல் ஏன்?

பல நல்ல சொற்களை ஆசிரியர் பாடல்களில் நுழைத்திருக்கின்றார். ஆனால் சொற்களின் பொருத்தமும் முறைமையும் திண்மையும் கூர்மையும், விளைவும் (effect) அறிந்து பயன்படுத்தாமையால் பாடல்கள் சிறக்கவில்லை 'புரட்சி தூவிச் சென்றாள்' ''தென்றலினை உடல் முழுதும் தேங்கவிட்டு'', அங்கவுடல், 'அரிசி பொங்கிச் சிதறவைத்து' என்பன போன்ற பல இடங்கள் சொற்பொருத்தமின்மையால் உணர்வைக் கெடுத்துவிடுகின்றன. ''காடோடி மானெனவே குதித்து வந்தாள்'' (பக். 37) என்று பெண்ணுக்குவமை கூற மானை அழைக்கையில், மானின் மென்மையினையுங் 'காடோடி' என்ற அடைமொழி கெடுத்துவிடுகின்றது. ''கழுத்தென்ன அமுதவூற்றோ?'' என்கின்றார். கழுத்தும் புற வுறுப்பையே குறிக்கும்.

''தேன்வை கொண்ட இன்பமதோ அத்தானன்றித்
தாங்கு தந்தைக் கேலாத தன்மை'' (பக்கம் 13) பற்றித் தலைவி பேசுவதும்,

''படுக்கைக்கே ஓய்வளித்து மச்சானோடு
பண்ணையர்க்கே வாழ்வளிக்கும் ''-(பக்கம் 94) ஏழைப் பெண்ணின் நிலையும் முறையறிந்து சொற்களைப் பயன்படுத்தாமையால் அருவருப்பூட்டுகின்றன. ''இளமை யெனும் பொல்லாய்!'', ''வந்தாள் போனாள்'', ''பிழை ஒரு கொலை'', ''மந்தைக் கரையில்'' போன்ற பாடல்கள் இழிசுவைக்கு (bad taste) எடுத்துக்காட்டுகள். ''தமிழர் சேரன்'' என்ற பாடல் வெறும் புனை சொற் குப்பை! உணர்வுமில்லை, பொருளுமில்லை. 'செயிற்றி','வெயிற்றி','வியற்றும்' (பக்கம் 62) என்ற (பிழைச்) சொற்கள் ஆசிரியரின் புத்தாக்கங்கள் போலும்! நகைப்பையே விளைவிக்கின்றன.

இந்நூற்கு 'மதிப்புக் கருத்துரை' வழங்கிய தமிழ்ப் பெருமக்களை இங்கு நினைக்காமலிருக்க முடியவில்லை. பெரும்பாலோர் கண்ணைமூடிக்கொண்டு பாராட்டுரைகளை அள்ளி வீசியுள்ளனர். புலவரென்றும் அறிஞரென்றும் பெயர் தாங்கும் இவர்கள், உண்மை நிறை குறை தேர்ந்து சொல்லாமல், தம்மிடம் காட்டப் பெறும் எல்லாவற்றுக்கும் வெற்றுப் பாராட்டுரைகளையே வழங்கிக் கொண்டிருப்பராயின், தமிழிலக்கிய வளர்ச்சிக்குப் பெருந்தீங்கு செய்தவராவர். வெற்றுப் பாராட்டு வளர்ச்சியைத் தடை செய்கின்றது ஆசிரியர்க் கொரு சொல்: உண்மைப் பாடல் தானே எழுந்து உயிர் பெற்றிடும் அதனை யாரும் தூக்கி நிறுத்த வேண்டியதில்லை. இந்தப் பாடல்கட்கு இவ்வளவு செலவில் நூல் வெளியிட்டிருக்க வேண்டுவதில்லை இதே செலவில், இதே வடிவில், இதே பக்க அளவில் இவற்றைப்போல் இரண்டு மடங்கு பாடல்களை வெளியிட்டிருக்கலாம்; ஆசிரியர்க்கும் சரி, படிப்பவர்க்கும் சரி இன்னும் சற்றுப் பயன் விளைந்திருக்கும்.

''கல்லாடன்''

(வாழ்க்கையில் எத்தனையோ உண்மையான நகைச்சுவை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவற்றுள் சில வெறுஞ் சிரிப்பை மட்டும் வருவிப்பன. ஒரு சிலவோ அறிவைத் தூண்டி எண்ணவும் வைப்பன அவற்றுள், அந் நிகழ்ச்சியில் ஈடுபட்டாரே யன்றிப் பிறரும் பயனடைய வேண்டும். ஆங்காங்கே நடக்கும் இத்தகைய நிகழ்ச்சிகளை எழுதியனுப்பலாம் கற்பனை நிகழ்ச்சிகளைவிட உண்மை நிகழ்ச்சிகளே பெரிதும் வரவேற்கப் பெறுகின்றன. வெளியிடப் பெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் இரண்டு உருபாக்கள் அனுப்பப் பெறும் —ஆசிரியர்.)

"காலமும் வேலையும்"

வான்வெளி மறவர் திரு. ககாரினைக்காண அவருடைய நண்பர் ஒருவர் அவர் வீட்டுக்குச் சென்றிருந்தார். அவர் சென்ற நேரத்தில் வீட்டில் ககாரினின் குழந்தை மட்டும்தான் இருந்தது வந்தவர், குழந்தையை வினவினார்:

' உன் அப்பா எங்கே? '
' நிலாவைச் சுற்றப் போயிருக்கிறார்! ''
' எப்போது வருவார்? ''
' முக்கால் மணியில் வந்துவிடுவார்! ''
' உன் அம்மா எங்கே? '
'' முட்டை வாங்கக் கடைக்குப் போயிருக்கிறாள்! ''
'' எப்போது வருவாள்? ''
' குறைந்தது மூன்றுமணி நேரமாவது ஆகும்!! ''

த. சிவசண்முகம், சிறுதையூர்.

* * *

சொல்லில் மெருகு...!

ஒரு நாள் 'ஆபிரகாம் இலிங்கன்' தம் இல்லத்தில் அமர்ந்து, தம் காலணிகளுக்கு மெருகேற்றிக் கொண்டிருந்தார். அப்போது அவரைக் காணவந்தார் ஒரு நண்பர்.

"வியப்பாக இருக்கிறதே ..... உங்கள் காலணிகளுக்கு நீங்கள் தாம் மெருகேற்றுவீர்களா?" என்றார் நண்பர்.

"ஆமாம்; ஆனால் நீங்கள் யார் காலணிகளுக்கு மெருகேற்று கிறீர்கள்?!" என்றார் இலிங்கன் சூடாக.

—த. சிவசண்முகம், சிறு தையூர்.

* * *

மேல்மாடி ஒழுக்கல்..!

மேல் மாடியில் குடியிருக்கும் ஒருவர் ஒருநாள் வீட்டுக்கார ரிடம் வந்து,

'ஐயா, கூரையில் ஒழுக்கல் ஏற்பட்டுள்ளது. விரைவில் பழுது பார்க்கச் செய்யுங்கள்' என்றார்.

உடனே வீட்டின் சொந்தக்காரர், "என்ன ஐயா, ஐந்தாறு பெயர்கள் கீழ்ப் பகுதிகளில் இருக்கின்றார்கள். உங்களைத் தவிர அவர்களில் ஒருவர்கூட, இவ்வாறு கூரை ஒழுகு கின்றது என்று குறை கூறவில்லையே ....என்று மறுமொழி யளித்தார்.

* * *

நானும் உங்களுடன்..!

வேலை தேடி வெளியூர் சென்ற தம் மகனிடமிருந்து செய்தி எதுவும் வராமையால், முதுமையாலும், வறுமையாலும் துன்புற்ற அவன் பெற்றோர் மிகவும் வருந்தினர். இறுதியாகத் தம் மகனுக் குக் கீழ்க்கண்டவாறு ஒரு மடல் எழுதிப் போட்டனர்.

'தம்பி, உனக்கு வேலை கிடைத்ததா இல்லையா என்று தெரியவில்லை. இங்கு நாங்களும் வறுமையால் தொலையுறு கின்றோம். இன்னும் சில நாட்களில் உன்னிடமிருந்து பணம் எதுவும் வரவில்லையானால் நாங்கள் தெருத்தெருவாய் இரந்து குடிக்க வேண்டியதுதான்'.

நான்கு நாட்களுக்குப் பிறகு மகனிடமிருந்து, "அன்புள்ள பெற்றோரே! இன்னும் ஐந்தாறு நாட்கள் பொறுத்துக் கொள்ளுங் கள்; நானும் அங்கு வந்து உங்களுடன் சேர்ந்து கொள்கின் றேன்" என்று விடை வந்தது.

* * *

தென்மொழி பதிவு எண்: எம். 7211

பொருளடக்கம்

சுவடி 1 ஓலை 11

மார்கழி. தி. பி. 1994.

'இந்தி' மொழி இந்தியாவைச் சிதைப்பது உறுதி.	ஆசிரியவுரை:	3
சமற்கிருதவாக்கம் (எழுத்து).	பாவாணர்	7
பாவாணர்க்குப் பணமுடிப்பு.	(அறிக்கை)	13
எண்சுவை எண்பது.	(இலக்கியம்)	18
ஒன்றாக நல்லது கொல்லாமை.	(நல்லுரை ஆய்வு)	23
வால்டயர்.	(வரலாறு)	26
பாட்டு அரங்கம்.		32
நாலடியாரின் ஆசிரியர் யார்?		39
அயல் நாட்டில் அருந்தமிழர்.		43
ஆங்கில மொழியாக்கம்.		48
'இக்கு' என்பது ஒருசாரியை ஆகுமா?		50
கேள்விச் செல்வம்.		55
மொழியை இழந்து... பயனில்லை.		59
கல்வி.	(விவேகானந்த அடிகள்)	64

மற்றும்

நூல்நிறை, நலகநலம் முதலியன.

விலை 50 காசு.

மித்திரா அச்சகம், கடலூர்-2.